கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(05.02.2017 - 05 மாசி, 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 153, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி


ஞான ஒளி GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05




பக்கம் 04

இயேசுவை காணிக்கையாக...

பக்கம் 8-9
புனித யோசேவ்வாஸ்...


# "மனித வாழ்வு இறைவன் எமக்களித்த அருள் வரமாகும்! இவ்வுயிரை அழித்திட எவருக்கும் உரிமையில்லை"



"மனித வாழ்வு இறைவன் எமக்கு அளித்த அருள்வரமாகும். ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருத்தரித்த நேரம் முதல் அவன் / அவள் மனித உயிராகும். அந்த உயிரை அழித்து விட வேறு எவருக்கும் உரிமையில்லை. கருக்கலைப்பு கிறிஸ்தவ மதம் எதிர்க்கும், அருவருக்கும் மிகப் பாரிய பாவமாகும்"

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் இவ்வாறு கொழும்பு மருதானை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு உயர் மறைமாவட்ட குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் நிகழ்வில் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய போது இவ்வாறு தெரிவித்தார்.

15

## "இலங்கையில் கருக்கலைப்பு சட்டமூலத்தை இலகுவாக்குதல் தொடர்பான செயல்திட்டத்திற்கு ஆயர் பேரவையின் எதிர்ப்பு"




அன்பார்ந்த சகோதரர்களே!

எமது நாட்டின் நீதித்துறை அமைச்சானது இலங்கையின் கருக்கலைப்பு சட்டமூலத்தை இலகுவாக்குதல் தொடர்பாக செயற்திட்டங்களை முன்னெடுப்பதை அண்மைக் காலங்களில் வெளியாகும் ஊடகங்களில் இருந்து வெளிவரும் செய்தியைக் குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். உண்மையாக இந்த நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அறியவந்தமையின் பின்னர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உறுப்பினர்கள் இது தொடர்பாக பலத்த எதிர்ப்பினை தெரிவித்து அனைத்து கத்தோலிக்க ஆயர்களின் கையெழுத்திட்ட ஆவணமொன்று 18ஆம் திகதி ஆவணி மாதம் 2016ஆம் ஆண்டு, நீதித்துறை அமைச்சருக்கு கையளிக்கப்பட்டது. இதற்கு பதில் கடிதமொன்றை தனது கையெழுத்தோடு 22ஆம் திகதி ஆவணி மாதம் 2016ஆம் ஆண்டு நீதித்துறை அமைச்சர் எமக்கு அனுப்பிய போது அதில் "இத்தகைய ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ள அரசினால் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை" என்றும், "அதற்கான தேவை தற்போது இல்லையென்றும், உடனடியாக இதை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லையென்றும்" அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

02

## இலங்கையின் 69வது தேசிய சுதந்திரத் தினம் மாசி 04



69வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள கிறிஸ்தவ வழிபாடு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், துணை ஆயர்கள், மற்றும் குருக்கள் பங்குபற்றுதலோடு 2017.01.04ஆம் திகதி காலை 6.15 மணிக்கு கொழும்பு 05 திம்பிரிகஸ்யாய புனித திரேசா ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இவ்வழிபாட்டில் பங்குப்பற்றுமாறு உங்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

**ஒருங்கமைப்பு**
**திரு. ஜோன் ஏ. ஈ அமரதுங்க**
**சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவலக அமைச்சர்**

## திருப்பாலத்துவ சபை ஒன்றுகூடல் - 2017



கொழும்பு உயர் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி அனைத்து ஊக்குவிப்பாளர்களும் ஒன்றிணைந்து கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் சில மணித்தியாலங்களை செலவிட வாய்ப்புக் கிடைத்தது. தமிழ், சிங்கள மொழிகளில் செபத்துடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வானது. பின்பு தமிழ், சிங்கள மொழிகளில் மறையுரைக்காக பிரிந்து சென்று பங்குபற்றினர்.

15

## இறைபதம் அடைந்தார்



அருட்தந்தை எல்மோ ராஜ் அடிகளார் 25.01.2017 அன்று காலமானார். அவரின் பூதவுடல் முகத்துவாரம் புனித யோவான் ஆலயத்தில் மாலை 4.30 மணி தொடக்கம் சனிக்கிழமை 2.30 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்பட்டு மறு நாள் ஞாயிற்றுக்கிழமை 3.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பொரளை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி செபத்துடன் பிரார்த்திக்கின்றது.

## திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தின சிறப்பிப்பு



*திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தை சிறப்பிக்கும் திருப்பலி, பாப்பிறை மறைபரப்பு சபை தேசிய இயக்குனரால் களமுல்ல புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்றது.*

15

## இலங்கை அன்னை திருவிழா

### தேசிய பேராலயம் தேவத்தை

### மாசி 05ஆம் திகதி (05.02.2017)



இலங்கை அன்னையின் வருடாந்த திருவிழா இம்மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேசிய பேராலயம் தேவத்தையில் கொண்டாடப்படுகின்றது. அன்றைய நிகழ்வில் 05ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையினால் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

அன்று நண்பகல் 12.15 மணிக்கு தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

திருவிழாவை முன்னிட்டு மாலை ஆரானை 04.02.2017 சனிக்கிழமை 7.00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்

குறுங்கால கற்கை நெறி, கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் இறையியல் கல்வியகம்

"திருச்சபையும் திருமணமும்"

XX

**படைகளின் ஆண்டவர் இவரே, இவரே மாட்சிமிகு மன்னர்.**

## 01 இலங்கையில் கருக்கலைப்பு...

இதனால் அண்மையில் பத்திரிகையில் (காண்க Daily Mirror, 20 தை 2017) இலங்கையில் கருக்கலைப்பு சட்டமூலத்தை இலகுவாக்குவது தொடர்பான அவ் அமைச்சினாலே இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அறிந்து நாங்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளோம். இவ்விருப்பினை அடையாளம் காட்டுவதற்கான சான்றுகளும் எம்மிடம் உண்டு என்பதை மிக பொறுப்புணர்வோடு தெரிவிக்கின்றோம். இது தொடர்பாக எமது ஆயர்த்துவ கடமையாக அனைத்து கத்தோலிக்க விசுவாசிகளுக்கும் கருக்கலைப்பு தொடர்பாக "கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினை" தரும் விடயங்களில் சிலவற்றை தொகுத்து வழங்க விளைகின்றோம். இதில் திருச்சபையின் படிப்பினை என்னவென்றால் "மனித உயிர் கருவில் உருவான நேரம் முதல் முழுமையாக மதிக்கப்பட வேண்டும். அதன் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும் (க.தி.ம # 2270 - 2271) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"முதலாம் நூற்றாண்டிலிருந்து, எல்லா கருக்கலைப்பும் பாவமான, மனித மாண்புக்கு விரோதமான செயல் என்பதை திருச்சபை கற்பித்து வருகின்றது. இந்த அறிக்கை இன்றும் மாறாமல் நிலைத்து நிற்கின்றது. ஒரு செயலின் இறுதி நோக்கம், அல்லது அதன் விளைவு அல்லது செய்யப்படுகின்ற "கருக்கலைப்பு" மனித மாண்பிற்கும், இறைவனின் சட்டத்திற்கும் எதிரான பாரதூரமான செயலாகும். (க.தி.ம 2272).


அதற்கேற்ப கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி மேலும் குறிப்பிடுவது என்னவென்றால், கருக்கலைப்பை மேற்கொள்ள நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஒத்துழைப்பு வழங்குதல், பாரதூரமான பாவமாகும். இவ்வாறான குற்றவாளிகள் திருச்சபை உறவில் இருந்து நீக்கப்பட திருச்சபையின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமையான செயலை செய்கின்ற நபர், அந்த பாவத்தின் விளைவாக தன்னியல்பிலேயே திருச்சபையில் இருந்து நீக்கப்படுவதற்கு, அச்செயலே காரணமாகிறது. ஆனால் திருச்சபையின் சட்டத்தின் வழியாக வெளியிடப்பட்ட நிலைகளுக்கு இவை உட்பட்டாலும் இதன் வழியாக திருச்சபையின் இரக்கத்துக்கு எல்லை நிர்ணயிக்க எண்ணமாட்டார்கள் (தி.ச.தொ#1398,1314,1323-23 மற்றும் க.தி.ம 2272).

இந்த இறுதி இலக்கத்திற்கு ஏற்ப மேற்கூறிய கடமையில் விசேடவிதமாக வைத்தியத்துறைக்கு தொடர்புடைய அனைவருக்கும் உரியது என தெளிவுபடுத்தப்படுகிறது. ஆகவே கத்தோலிக்கராகிய நாம் இதனை எதிர்ப்பதுடன், இதற்கு எமது ஆதரவை தெரிவிக்க மறுக்க வேண்டும். இக்கடமை அனைத்து கத்தோலிக்க அரசியல்வாதிகளுக்கும் உரித்தானது என நாம் விசேடவிதமாக கூறவேண்டியதொன்றல்ல.

மனிதனின் மாண்புக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இந்த செயற்திட்டத்தின் பாவ நிலையையும் மனிதாபிமானமற்ற செயலை இல்லாதொழிக்க செபத்தாலும், ஒருத்தல்களினாலும் பரிகாரம் செலுத்துமாறு இறைமக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஏனென்றால், தன் விருப்பத்திற்கு மாறாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு அல்லது, நெருங்கிய உறவினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கருவறையில் உருவாகும் உயிரும் மனித உயிரே. இத்தகைய பாவச் செயலினால் கருத்தரிக்கும் குழந்தை ஒரு குற்றவாளி அல்ல. இவ்வாறான அப்பாவியான, வாழும் உரிமைக்ககாக குரல் கொடுக்க முடியாத அப்பாவியான குழந்தைகள் கருவுக்குள்ளேயே கொலை செய்யப்படுவதும் மிகப் பெரிய பாவமாகும். இறைவனே வாழ்வின் ஊற்றுமாகவும் அதன் நிறைவை தீர்மானம் செய்பவராகவும் இருப்பதோடு, பெற்றோருக்கோ வேறு எவருக்கோ இது குறித்து எந்த உரிமையும் இல்லை.

இதற்கேற்ப, கருக்கலைப்பை மேற்கொள்வோர் அதற்கு துணை நிற்போர் அதிகாரம் வழங்குவோர் ஆகியோர் சாவான பாவத்திற்கு உட்படுகின்றனர். இதற்கேற்ப அவன் / அவள் தன் இயல்பிலேயே கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்து தன்னை நீக்கம் செய்துகொள்ள செயற்படுகின்றார். இதனால் கத்தோலிக்கராகிய நாம் எமது குழந்தைகளின் வழியாக இறைவன் எமக்கு தருகின்ற அழகான மலரும் மொட்டுக்களை போல அழகான இந்த அப்பாவியான பரிசில்களை பாதுகாத்துக் கொள்வோம். அதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

இறுதியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அப்போஸ்தலிக்க மடலான "Amoris Laetitia "அன்பின் மகிழ்ச்சி"யில், "விரும்பப்படுவது அக்குழந்தைக்கு இன்றியமையாதது. அவன் அல்லது அவள் ஒரு பிற்சேர்க்கையோ அல்லது சில தனிப்பட்ட தேவைக்காக ஒரு தீர்வோ அல்ல. ஒரு குழந்தை மிகப் பெரும் மதிப்பிற்குரிய ஒரு மனிதர். எனவே அக்குழந்தை எவருடைய தனிப்பட்ட நலனுக்காகவும் பயன்படுத்தப்படலாகாது. ஒரு புதிய உயிர் நமக்குச் சாதகமாக உள்ளதா, நம்மைத் திருப்திப்படுத்தும் தோற்றக்கூறுகள் அதனிடம் உண்டா, அல்லது நம் திட்டங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அது ஏற்புடையதா என்பது முக்கியமல்ல, ஏனென்றால், "அக்குழந்தைகள் ஒரு கொடை. ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மையும் மாற்றீடு செய்ய இயலாத பண்பும் கொண்டது.... நாம் நம் குழந்தைகளை அன்பு செய்வது அவர்கள் குழந்தைகள் என்பதற்காகவேயன்றி, அவர்கள் அழகாக உள்ளனர் என்பதற்காகவோ, நம்மைப்போன்ற தோற்றத்தையோ சிந்தனையையோ கொண்டுள்ளனர் என்பதற்காகவோ, நமது கனவுகளைத் தாங்கியுள்ளனர் என்பதற்காகவோ அல்ல, அவர்கள் குழந்தைகள் என்பதற்காகவே நாம் அவர்களை அன்பு செய்கின்றோம். ஒரு குழந்தை ஒரு குழந்தையே" (அன்பின் மகிழ்ச்சி 170)



**திமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்**
**பேராயர் – கொழும்பு உயர் மறைமாவட்டம்**
**தலைவர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**



**அதிமேதகு வெலன்ஸ் மெண்டிஸ்**
**ஆயர் – சிலாபம் மறைமாவட்டம்**
**செயலர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

# கொழும்பு உயர் மறைமாவட்ட

## கலை மற்றும் கட்டிடக்கலை, உயர்கல்வி நிலையத்தின் திறப்பு விழா





"எமது மக்கள் ஆயிரக்கணக்கான பிரச்சினை, சிக்கல்களை மனதில் தாங்கிக்கொண்டு ஆலயத்திற்கு வருகின்றனர். அம்மக்கள் இறைவனோடு உரையாடுகின்ற தியானிக்கின்ற செபங்களை மேலும் அர்த்தம் உள்ளதாக உள்ளார்ந்த அனுபவத்தை பெற்று அவர்களின் மனதை இறைவனிடம் உயர்த்தி வைக்க எமது ஆலயங்களில் பொருத்தமான சூழலை உருவாக்க வேண்டும். அதற்காக எமது கலை கட்டிடக் கலையை பயன்படுத்தும் காலம் தற்போது உருவாகியுள்ளது.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த வாரம் நீர்கொழும்பு தம்மிட்ட கர்தினால் குரே மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு உயர் மறைமாவட்ட புனிதக் கலை மற்றும் கட்டிடக்கலை, உயர்கல்வி நிலையத்தின் திறப்பு விழாவின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதுதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இந்த நிறுவனத்தில் கற்கை நெறியை கற்பதற்காக பதிவு செய்திருக்கும் மாணவ மாணவியர்கள் மற்றும் விழாவில் பங்குபற்றியிருந்த குருக்களோடு உரையாற்றிய கர்தினால் ஆண்டகை "கத்தோலிக்க மறைக்கே உரிய சிந்தனைகள் பண்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. எமது ஆலயங்களின் தோற்றம் பீடம், தூயவர்களின் திருவுருவங்கள், ஓவியங்கள் போன்றவற்றை உருவாக்க கத்தோலிக்க தூய கட்டிடக் கலை அறிவுடைய புதிய தலைமுறையை உருவாக்குதல் வேண்டும். இதனூடாக எமது மனங்களை இறைவன்பால் கொண்டு செல்ல இயலும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம். இதன் முதற்கட்டமாக நீர்கொழும்பில் ஆரம்பிக்கப்படுகின்ற கத்தோலிக்க தூய கட்டிடக் கலை நிலையத்தை குறிப்பிடலாம். கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கர் அல்லாதோரும் இதனூடாக தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள இயலுமாகும். கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு மட்டும் அல்ல ஏனைய மறைமாவட்டங்களிலும் நாடு முழுவதும் ஒரு நிறுவனமாக வியாபிக்க எதிர்காலத்தில் திட்டமிட்டு இருக்கின்றேன். இந்த ஆரம்ப விழாவிற்கு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு ஒஸ்வலட் கோமிஸ் ஆண்டகை ஆகியோரும் கலந்து கொண்டனர். உயர் மறைமாவட்ட புனித கட்டிடக் கலை நிலையத்தின் இயக்குனர் பிரியந்த சில்வா ஆண்டகை பொருளாளர் அருட்பணி சமந்த துஷார பெரேரா அடிகளார்களும் உரை நிகழ்த்தினார்கள். அன்றைய தினம் இக்கற்கை நெறியை தொடர வருகை தந்த முதலாவது மாணவியின் பெயர் பதிவை கர்தினால் ஆண்டகை அவர்கள் பதிவுசெய்து வைத்தார். அன்றைய நாளின் சிறப்பம்சமாக இந்நிகழ்வினில் பங்குபற்றிய பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் பொறுப்பாளர் பேராசிரியர் சரத் சந்தரஜீவ அவர்கள் இந்நிகழ்வின்போது இரண்டறை மணித்தியாலங்களுக்குள் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிலை ஒன்றினையும் செய்தார்.

## குருத்துவ பணியில் 60வது ஆண்டு நிறைவு விழா

**அருட்பணி.**

**ஜோ. பெ. தேவராஜா**

**'நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்'**
**(மாற்கு 16:15)**



குருத்துவ வாழ்வில் 60வது வருடத்தை நிறைவு செய்யும் அருட்தந்தை தேவராஜா அவர்களால் எதிர்வரும் 04.02.2017 சனிக்கிழமையன்று காலை 10.30 மணிக்கு மடு அன்னை திருத்தலத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் நன்றித் திருப்பலியில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

1957ம் ஆண்டு தனது குருத்துவ வாழ்வை ஆரம்பித்த அடிகளார், யாழ் மறைமாவட்டம், மன்னார் மறைமாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களிலும் சமூக, ஆன்மீக பணிகளிலும், வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் சமூக நலனுக்காகவும் குடும்ப ஒன்றிணைப்பிற்காகவும், மீனவர்களின் அடிப்படை தேவைகளுக்காகவும் தன்னை ஜாதி, மத, இன வேறுபாடின்றி முழுமையாக அர்ப்பணித்து துறவறத்தில் அதிசிறந்து விளங்குகின்றார்.

தொடர்ந்து கரித்தாஸ் தேசிய நிறுவனத்தின் இயக்குனராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தன்னலமற்ற சேவையை ஆற்றியவராவார்.

அருட்தந்தையின் பணி சிறக்கவும், சுக தேகியாக வாழவும் இறைவனிடம் பிரார்த்திப்போம்.

**தகவல் : திரு. எலியாஸ் JP**





## டெங்கு நோயினை இல்லாதொழிக்க கர்தினால் ஆண்டகை எடுத்த முன்னெடுப்புக்கள்.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் அறிவுறுத்தலின் கீழ் கடந்த ஞாயிறு கொழும்பு மறைமாவட்ட முழுவதும் சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் கீழ் கொழும்பு கொட்டாஞ்சேனை புலுமெண்டல் ஆகிய பகுதிகளில் நீர் வடிகால்கள் சுத்தம் செய்யும் சிரமதானத்தில் கர்தினால் ஆண்டகையும் பங்குபற்றினார்.

ஞான ஒளி
GNANA OLI
கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984, 0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
05, மாசி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## "மனிதர்கள் அனைவரையும் மதித்து மாண்புறச் செய்வோம். அவர்களை அவர்களாகவே வாழச் செய்வோம்."

இலங்கை நாட்டின் சுதந்திரத் தினத்தை இவ்வாரம் கொண்டாடுகின்றோம். இதற்காக பலர் உழைத்ததாலும் பலர் இரத்தம் சிந்தியதாலும் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. கிடைத்த சுதந்திர காற்றை எம்மால் சுவாசிக்க முடிகின்றதா? இன்றும் இந்த சுதந்திரம் காப்பாற்றப்பட்டு வருகின்றதா? நாம் சுதந்திரமாக வாழ்கின்றோமா? வாழத்தான் முடிகின்றதா? வாழத்தான் விடுகின்றார்களா? எமது நாட்டில் பல்வேறு மொழி பேசும் மக்கள், பல்வேறு சமய மக்கள், பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். ஆனாலும் இவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் இது வலிமைமிக்க நாடாகும். குறித்த மொழி, சமயம், இன மக்களின் நலனை மட்டும் கருத்திற்கொண்டு வாழ்தல் சுதந்திரம் அல்ல. அரசியல் சுதந்திரம், கலாச்சார சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், மதச் சுதந்திரம், ஆன்மீகச் சுதந்திரம் என்று மனிதன் இவை அனைத்திற்கும் அடிமைப்பட்டவனாக காணப்படுகின்றான். சுதந்திரம் என்பது மனிதன் விரும்பியதை செய்வது. மனிதனை அவனாக வாழ விடுவதுதான் சுதந்திரம். மனிதன் சற்று மாற்று சிந்தனையுடையவனாக மாறினால் அவன் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு விடப்படுகின்றான். அவன் துரோகி, பொல்லாதவன் என தள்ளி வைக்கப்படுகின்றான். சுதந்திரம் என்ற போர்வையால் முடக்கிவிடப்பட்டவர்களின் வாழ்க்கை ஏராளம் எனலாம். அவனவனுக்கிருக்கும் விருப்பு வெறுப்புக்களோடு அவனை ஏற்றுக்கொள்வதுதான் அவனிக்கிருக்கும் சுதந்திரம். தொடக்க நூலில் கடவுள் மனிதனைப் படைத்து சுதந்திரம் அளித்ததை நாம் காண்கின்றோம்.

சித்தத்திற்கு மற்றுமொரு அரிய தத்துவம் உண்டு. அதுதான் மனச்சுதந்திரம். தான் விரும்பியதைச் செய்யும் சக்திதான் மனச்சுந்திரம். இச்சக்தியானது பல்வேறு விதத்தில் செயற்படுகின்றது. ஒரு காரியத்தை செய்யவும் செய்யாதிருக்கவும், ஒரு காரியத்திற்கு பதிலாக இன்னொரு காரியத்தைச் செய்யவும் உடலின் இச்சைகளைக் கட்டுப்படுத்தவும், கட்டுப்பாடின்றி விடவும் மனிதனால் முடியும். பாவத்திற்கும், புண்ணியத்திற்கும் காரணமாக அமைவது மனச்சுதந்திரம்தான். சித்தம் செயற்படும்போது சுதந்திரமாக செயற்படுகின்றது. ஆனால் இன்று நடப்பதென்ன? பலர் நல்ல விடயங்களை சொல்லிலும் செயலிலும் உண்மையை வெளிப்படுத்த விளைந்திடும்போது அவர்கள் தடுக்கப்பட்டு முடக்கப்பட்டு சுதந்திரத்தை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே மனிதர்கள் அனைவரையும் மதித்து மாண்புறச் செய்வோம். அவர்களை அவர்களாகவே வாழச் செய்வோம். அவர்களுக்குள் இன்னுமொரு சாயலை படைக்க முயல்வதும் அவர்களது சுதந்திரத்தை பறிப்பதாகும். நீ அப்படியிருக்கக்கூடாது இப்படித்தான் இருக்க வேண்டும். இதைத்தான் செய்ய வேண்டும் என்றெல்லாம் கட்டளையிடுவதும் சுதந்திரத்திற்கு எதிரானதாகும். நாம் மனிதருக்கு இன்னுமொரு சாயலை அமைத்து தருபவர்களாகவும் கட்டளையிடுபவர்களாகவும்தான் இன்னுமே வாழ்ந்து வருகின்றோம். இந்நிலை மாற வேண்டும். நாம் எப்படி சுதந்திரமாக வாழ ஆசைப்படுகின்றோமோ அப்படியே அவர்களை வாழச் செய்வோம். இதுதான் நாம் மற்றவர்களுக்கு அளிக்கும் சுதந்திரம். ஆண்டுதோறும் நினைவுகூரப்படும் சுதந்திர விழாவானது என் வாழ்விலும் உங்கள் வாழ்விலும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்திட வேண்டும்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# இலங்கை அன்னையின் பெருவிழா

## இலங்கையின் 68வது சுதந்திர தினம்



### இலங்கை அன்னை எம்மை நாள்தோறும் பாதுகாத்து பராமரித்து வருகின்றார்.

ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் 4ம் திகதி நாட்டின் சுதந்திர நாளைக் கொண்டாடுகின்றோம். அதேநாள் நாம் இலங்கை அன்னையின் திருவிழாவையும் கொண்டாடுகின்றோம். நம் நாடு ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த நாள். நம் முன்னோர் நம் அனைவரின் விடுதலைக்காகப் போராடிப் பெற்ற சுதந்திரத்தை நாம் விடுதலை நாளாகக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

சுதந்திரம் என்பது ஒரே நாளில் நடந்து விடும், அல்லது கிடைத்துவிடும் அற்புதம் அல்ல, மாறாக ஒவ்வொரு நாளும் நடக்கும் போராட்டம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் மனிதப் பிறவியின் இயல்பான பண்புகள். இவற்றை நாம் தட்டிப் பறிக்க முயல்வோரிடமிருந்து இவற்றைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். 1948ஆம் ஆண்டுக்கு முன் எமது நாடு அன்னியரினால் சிறைப்பட்டு கிடந்தது. பல சவால்களுக்கும், கலாபனைகளுக்கும் முகம் கொடுத்திருந்தது எனலாம்.

### சிறைப்பட்டோரின் நேற்றைய வரலாறு

இங்கிலாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற வடக்கு நாடுகள் அகில உலகும் சென்று இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான், பர்மா போன்ற ஆசிய நாடுகளையும், ஆப்ரிக்கா மற்றும் தென் அமெரிக்கா நாடுகளையும் அடிமைப்படுத்தி, அந்த நாட்டின் கனிமங்களையும், மனித வளத்தையும் சுரண்டினர். இதனால் இன்று பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஒரு கால கட்டத்தில் சுரண்டப்பட்ட நாடுகளிலுள்ள மக்கள் விழிப்புணர்வு பெற்று தங்களை அடிமைப்படுத்தியவர்களை வெளியேற்றினார்கள். அப்படி வெளியேறிய போது நாட்டில் இருந்த விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் சுரண்டும் நாடுகள் அள்ளிச் சென்றன. இதனால் சுரண்டப்பட்ட நாடுகள் அனைத்தும் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் விடப்பட்டன.

### இறைவனின் துணையாலும், அன்னையின் பரிந்துரையாலும் இன்றளவும் நாம் வழிநடத்துப்படுவது நாம் பெற்ற பாக்கியமே.


### விடுதலை பெற்ற பின் இன்றைய வரலாறு

எமது நாட்டுக்கு விடுதலை தந்து விட்டு வெளியேறிய மேலை நாட்டவர்கள் தங்களுடைய நாடுகளிலே இருந்துகொண்டு புதிய முறைகளில் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுக்கு உதவி செய்வதாக கூறி கொடுத்த கடனுக்கு அசலும் வட்டியுமாக பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

>> 15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தலும்

மாசி மாதம் 02



# அன்னை மரியாவும்

மாசி மாதம் 2ஆம் நாள் கொண்டாடப்படும். இவ்விழா முக்கியமாக இயேசு ஆண்டவரைச் சாரும். அன்னை மரியாவும் இன்று நினைவுகூரப்படுகிறார். இந்நிகழ்வுகளின் உண்மைப்பொருளை உணர வேண்டுமானால், குளிர்கால சுழற்சியோடு இவற்றைத் தொடர்புபடுத்த வேண்டும். குளிர்கால சுழற்சியில் இடம்பெறுபவை மூன்று விழாக்கள்: கிறிஸ்து பிறப்பு விழா திருக்காட்சி விழா, காணிக்கையாக்கும் அல்லது சுத்திகரிப்பு விழா.

கிறிஸ்து பிறப்பு விழாவன்று நள்ளிரவு இருளின் மத்தியில் பேரொளி மிளிர்கின்றது. ஒரு சிலர் மட்டும் அதாவது அன்னை மரியாவும், யோசேப்பும் இடையர்களும் மட்டும் இவ்வொளியை குடிலில் பெறுகின்றனர்.

திருக்காட்சி விழாவன்று இவ்வொளி எருசலேம் மீது ஒளிர்கின்றது. எருசலேமோ திருச்சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறது. இறைவனின் மகிமை எருசலேம் மீது எழும் உலகின் பல இடங்களிலும் இருளில் வாழும் மக்கள் ஒளியின் நகரமாகிய எருசலேம் நோக்கிப் பயணிக்கிறார்கள்.

இறுதியாக இயேசு ஆண்டவரைக் கோயிலில் காணிக்கையாக்கிய நாளாகிய இன்று ஒவ்வொருவர் கையிலும் எரியும் திரி (ஒளி) அளிக்கப்படுகிறது. இதை மக்கள் பவனியில் கொண்டு வருகின்றார்கள். திருப்பலியிலும் எரியும் திரியைத் தாங்கி நிற்கின்றார்கள். இன்றைய விழாவில் ஒளி முக்கிய இடம்பெறுகின்றது. எனவே, இவ்விழாவை "ஒளியின் திருப்பலி" (Candle Mass) என்று அழைத்தார்கள்.

## இயேசு காணிக்கையாக்கப்படுதல்

பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் மெசியா ஆலயத்தில் தோன்றி தம்மை வெளிப்படுத்தும்போது ஆலயம் இறைமகிமையால் மிளிரும் என்று உரைத்தார்கள். இன்று, அதாவது, இயேசு தந்தையின் இல்லத்தில் நுழையும்போது, அந்த இறைவாக்குகள் நிறைவெய்துகின்றன. வரும் காலதத்தில் பலமுறைகள் அவர் தம்மை மெசியா என்றும், இறைமகன் என்றும் வெளிப்படுத்துவார்.

இன்று பாலன் இயேசு ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு மோசே சட்டப்படி இறைவனுக்கு காணிக்கை-யாக்கப்படுகிறார். ஏனெனில் சட்டப்படி "ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" (லூக் 2:23). இரு மாடப் புறாக்களைக் கொடுத்து அர்ப்பணிக்கப்பட்ட பாலன் இயேசு மீட்கப்படுகின்றார்.

இந்த நிகழ்வின் வழியாக இயேசு கிறிஸ்துவின் பலி ஆரம்பமாகிறது எனலாம். அன்னை மரியா தம் கைகளில் ஏந்தி தம் மகனை இறைவனுக்கு அர்ப்பணித்த செயல் பலிக்காக அவரை ஒப்புகொடுத்ததற்குச் சமமாகிறது. காணிக்கையா-க்கப்பட்ட இயேசு சிலுவைப் பலியை நிறைவேற்றுவார். கிண்ணத் தட்டாகிய அன்னை மரியாவின் கரங்களில் தாங்கப்பட்டிருக்கும் இயேசு, தந்தையாகிய இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறார். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் இன்று தொடங்கப்பட்ட பலியைக் கல்வாரி சிலுவையில் அவர் நிறைவு செய்வார்.

## இவ்விழாவில் அன்னை மரியாவின் இடம்

இந்த விழா முற்காலத்தில் "தூய்மைப்படுத்தல் விழா" என்று அழைக்கப்பட்டது. இது பற்றிய லேவியர் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"குழந்தையைப் பெற்றவள் அது ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் தூய்மை அடையும் காலக்கெடுவுக்குப் பின்னர், ஓராண்டு நிறைவுற்ற செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறாக்குஞ்சு அல்லது காட்டுப் புறா ஒன்றைப் பாவம் போக்கும் பலியாகவும் குருவிடம் சந்திப்புக் கூடார நுழைவாயிலுக்குக் கொண்டுவர வேண்டும் அதனை அவர் திருமுன் கொண்டுவந்து அவளுக்குக் கறை நீக்கம் செய்வார். அவள் தன் உதிர ஊறல் தீட்டிலிருந்து தூய்மையாவார்" (லேவி 12:6-7).

கன்னி மரியா கருவுற்று இயேசுவுக்குத் தாயானது இறைவனது வல்லமையால் ஆகும். அதனால் அவரை எந்தத் தீட்டும் தொடவில்லை. எனவே இச்சட்டத்திற்கு அவள் உட்பட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் தம்மை தாழ்த்திக் கொண்டு, பலி உணர்வுடன் ஏழைகளுக்கே விதிக்கப்பட்ட இரு புறாக்களைக் கொண்டு சென்று குருவிடம் ஒப்படைக்கிறார். அன்னை மரியாவைப் பின்பற்றும் விதமாக திருச்சபை தாய்மார்களை இதுபோன்ற சடங்கிற்கு தங்களை உட்படுத்தப் பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் கிறிஸ்துவ தாய்மார்களுக்கு "பேறுகால பெண்களுக்கு ஆசியுரை" என்ற சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இந்த ஆசியின் நோக்கம் தாய்மார்களைத் தூய்மைப்படுத்துவது அல்ல, அன்னை மரியின் தாழ்ச்சியையும் கீழ்ப்படிதலையும் தூண்டுவதே ஆகும்.

இயேசுவைக் கோயிலில் காணிக்கை யாக்கியதன் வழியாக அன்னை மரியா மீட்பின் திட்டத்தில் ஒரு மகத்தான இடத்தைப் பிடித்துள்ளார். தம்மைப்போல தம் திருமகனும் எந்தச் சட்டத்திற்கும் உட்பட்டவர் இல்லையென்றாலும், மனமுவந்து அவரைக் கோயிலில் காணிக்கையாக்குவதன் மூலம் இயேசுவின் மீட்புப் பணியைத் தொடங்கி வைத்துள்ளார்.

அன்று ஆண்டவர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, ஆபிரகாம் தனது ஒரே மகனை ஆண்டவருக்குப் பலியாக்க முன்வந்தார் (தொ.நூ 22:1-18). அதேபோன்று இன்று அன்னை மரியாவும் தம் ஒரே மகனைத் தியாகப் பலியாக்கி மாந்தர் அனைவரின் மீட்புப் பணியை தொடங்கி வைக்கிறார் எனலாம். "எனக்கு எதுவும் சொந்தமில்லை, அனைத்தும் இறைவனுக்குச் சொந்தம்" என்று தம் மகனை இறைவனுக்கே தாரைவார்த்துக் கொடுத்து விடுகிறார்.

## இவ்விழா உணர்த்தும் உண்மைகள்

மோசே சட்டத்தை நிறைவேற்ற ஆலயம் சென்ற மரியா தம் திருமகனை இறைவனுக்குக் காணிக்கையாக்க தமது கைகளில் ஏந்தி நிற்கிறார். இதனால் இவர் தாய்த் திருச்சபைக்கே முன் அடையாளமாகிறார். "நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனிதநேயமும் வெளிப்படுத்தப்பட்ட போது.... தம் இரக்கத்தை முன்னிட்டு.. கடவுள் நம்மை மீட்டார்." (தீத் 3:4-5). மனித உருவான இறைவனின் இரக்கத்தை இன்று தாய்திருச்சபை அன்போடும் பற்றுதலோடும், அன்னை மரியா வழியாக தாங்கி நிற்கின்றது.

கிறிஸ்து பிறப்பு விழாவன்று மனிதனாகப் பிறந்த இறைமகன் முன்னிடம் பெற தாய்த்திருச்சபை பின்னிடம் பெற்றது. திருக்காட்சி விழாவன்றோ திருச்சபை மீட்பரின் ஆடையணிந்து அழகுற்று விளங்கினாள். இன்றைய விழாவும் அதைத் தொடர்ந்து பிரதிபலிக்கின்றது. இது ஒரு மண விழா. திருமணப் பாடல் ஒலிக்கின்றது.

சீயோன் மகளே!<br>
மணவறையை அழகுபடுத்தி<br>
கிறிஸ்து அரசரை<br>
வரவேற்க தயார் செய்.<br>
அரவணைத்து வாழ்த்து<br>
ஏனெனில் அவர்<br>
புதிய ஒளியாகிய<br>
மகிமையின் மன்னரை<br>
தாங்கியுள்ளார்.<br>
காலங்களுக்கு முன்னதான<br>
தம் திருமகனை<br>
தம் கரங்களில் தாங்கி<br>
அன்னை மரியாள்<br>
நிற்கின்றாள்<br>
சீமோனோ தம் கரங்களில்<br>
அவரைத் தாங்கி<br>
வாழ்வின் ஆண்டவர்,<br>
உலகின் மீட்பர் என்று<br>
நாடுகள் அனைத்திற்கும்<br>
பறைசாற்றுகின்றார்.

இந்தப்பாடலில் கிறிஸ்துவை நாம் ஆலயத்தில் சந்திப்பது முக்கிய இடம்பெறுகிறது. கிரேக்கத் திருச்சபை இதற்கு முக்கியத்துவம் கொடுத்தது. அதாவது, ஆலயத்தில் திருச்சபை (மனித இனம்) ஆண்டவரை சந்திக்கின்றது. அன்று "இதோ ஆண்டவரும், ஆளுநருமானவர் ஆலயத்தில் தம் மக்களைச் சந்திக்க வருகிறார். சீயோன் மகளே உன் கடவுளைச் சந்திப்பது குறித்து அகமகிழ்ந்து மகிழ்ச்சி கொள்" என்ற பாடல் ஒலிக்கின்றது.


திருப்பலியிலும் நாம் நம் கைகளை ஏந்தி மணமகனை வரவேற்கின்றோம். என்பது திருப்பாடல் வழியாக உணர்த்தப்படுகிறது. "கடவுளே உமது கோயிலின் நடுவில் உம் பேரன்பை நினைந்து உருகினோம்" திபா 48:9). இவ்விழாவின் அடுத்த முக்கியக் கருப்பொருள் ஒளி ஆகும். ஒளி இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். மேலும் அருள் வாழ்வையும் சுட்டும். "(இதுவே) பிற இனத்தாருக்கு வெளிப்படுத்தும் ஒளி" (லூக் 2:32) என சிமியோன் பறைசாற்றியது இந்த ஒளி விழாவைக் குறித்தே.

பிற இனத்தார் கொண்டாடி வந்த "லூப்பர்காலியா" (Lupercalia) விழாவை இருட்டிடைப்பு செய்யவே இந்த ஒளியின் விழா உண்டாக்கப்பட்டது. இன்று பவனியில் மக்கள் ஏந்தி வரும் மெழுகுவர்த்திகள் புனிதப்படுத்-தப்படுகின்றன. இவை உலகின் ஒளியாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் காட்டுகின்றன. இவற்றை வீடுகளுக்குக் கொண்டு சென்று ஒரு முக்கியமான இடத்தில் வைப்பர். வீட்டில் முக்கிய நிகழ்வுகள் காலத்தில் இத்திரி கொளுத்தப்படும். நோயாளிகளுக்கு வரும்போதும், மற்றும் நோயில் பூசுதல் நேரங்களிலும் இத்திரி ஏற்றப்படும். நம் வீட்டில் பாதுகாக்கப்படும் இத்திரி நம் நம்பிக்கைக்கு அடையாளமாக இருக்கின்றது. திருமுழுக்கில் நாம் தாங்கிய எரியும் திரி நமது விண்ணக சுவிகாரத்தையும் பொதுக் குருத்துவப் பணியையும் சுட்டிக் காட்டுகின்றது. சுடர்விடும் நிலையில் நாம் நம் வாழ்வின் இறுதியில் நமது நம்பிக்கையின் அடையாளமாக இதை இறைவன் திருமுன் போய்ச் சேர்க்க வேண்டும்.

## நாம் கற்கும் பாடம்

அன்னை மரியாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். இறைவனின் திருவுளத்தை ஏற்று நம்முடையது என இருக்கும் எதையும் எப்பொழுதும் இறைவனுக்கு காணிக்கையாக்கிட தயாராக வாழ வேண்டும் என்பதே. நமது திருமுழுக்கில் நாம் அனைவரும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டவர்கள். எனவே நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். இந்த உணர்வோடு நாம் வாழ திருமுழுக்கில் நாம் பெற்ற அருள்பொழிவை இன்னும் ஆழமாக அனுபவிக்கவும், அவரது உடமையாக விளங்கி சான்று பகரவும் நம்மையே ஆண்டவருக்கு அர்ப்பணிப்போம்.

# அமைதிக்கு ஓர் அன்னை
# புனித அன்னை திரேசா



08

## பணி செய்ய பயிற்சி...

சகோதரி எலிஸ் பாட்னா மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த மற்றொரு மருத்துவர். இவர் Holland நாட்டைச் சேர்ந்தவர். மருத்துவத்துறையில் MD பட்டம் பெற்றவர். தெரேசாவைப் பற்றி அவர் கூறியிருப்பது பின்வருமாறு "தெரேசா எங்களுடன் தங்க வந்தபோது எங்களுக்கென்று ஒரு வீடு இருந்ததில்லை. பழைய கோவில் கட்டிடம் ஒன்றில்தான் நாங்கள் குடியிருந்தோம். கோவிலின் பீட முற்றப் பகுதியை எங்களது சிறுகோவிலாக வைத்துக் கொண்டு மற்றப் பகுதியைத் தட்டிகள் வைத்து தடுத்து சிறு சிறு அறைகளாகப் பயன்படுத்தி வந்தோம். பின் பக்கம் கல்லறைத் தோட்டம் ஒன்றிருந்தது. அங்கே கல்லறைக்கு மத்தியில் நாங்கள் படுத்துறங்க வேண்டியிருந்தது. சற்று அப்பால் இரண்டு மாடி பாடசாலைக் கட்டிடம் ஒன்று இருந்தது. அதை நாங்கள் மருத்துவமனையாக மாற்றி அமைத்துக் கொண்டோம். இந்த இட நெருக்கடியின் காரணமாக தெரேசாவுக்கு ஒரு சிறு அறைதான் எங்களால் கொடுக்க முடிந்தது. எப்போதெல்லாம் அறுவைச் சிகிச்சை, மகப்பேறு போன்றவை நிகழ்ந்தனவோ, அப்போதெல்லாம் தெரேசாவை அழைத்து வந்தோம். அவரும் உடனிருந்து நன்கு கவனித்து வந்தார். வாந்திபேதி, அம்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிப்பதில், தெரேசாவுக்கு ஓர் அலாதி விருப்பம் இருந்தது.

இரவு உணவுக்குப் பின் அனைவருமாகச் சேர்ந்து பேசிக் கொண்டிருப்போம். அப்போது தெரேசா தாம் செய்ய எண்ணியிருக்கும் பணிகளைப் பற்றி எங்களிடம் கருத்து பரிமாறிக்கொள்வார். நாங்கள் அனுபவ வாயிலாக அறிந்தவற்றை அவரிடம் கூறுவோம். செபத்துக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டியதுதான். ஆயினும் இரவு 9.00 மணிக்குப் பின் செபத்துக்கு என்று நேரம் ஒதுக்கக்கூடாது. அ∴து ஓய்வு எடுக்கவேண்டிய நேரம். நாள் முழுவதும் உழைத்து அலுத்துப்போய் வருபவர்கட்கு ஓய்வு மிகவும் அவசியம். உண்ணும் உணவு எளிய உணவாக இருப்பினும் அது சத்து நிறைந்த உணவாக இருத்தல் அவசியம். வாரத்தில் ஏழு நாட்களும் உழைப்பவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை அவசியம். இவை போன்ற எங்கள் கருத்துக்களை அவர்முன் வைத்தோம். அதன் அடிப்படையில் தான் தெரேசா தம் சபையின் சட்டதிட்டங்களை வகுத்தபோது சகோதரிகள் அருந்துவது ஏழைகளின் உணவாக இருந்தாலும், சத்துள்ள உணவாக இருத்தல் வேண்டும் எனவும், மாலை வேளைகளில் வீடு திரும்பினதும் அனைவரும் தங்களை நன்கு சுத்தம் செய்துகொள்ள வேண்டும் எனவும், இரவில் நல்ல ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் பணித்திருக்கிறார்".

தெரேசா பாட்னாவில் இருந்த சமயம் வான் எக்செம் அடிகளார் அங்குள்ள சகோதரிகளுக்கும், செவிலியர்களுக்கும் ஞான ஒடுக்க மறை உரைகள் நிகழ்த்த வந்திருந்தார். ஞான ஒடுக்க முடிவில் அவர் தெரேசாவைப் பார்க்க விரும்பினார். "சகோதரி தெரேசா எங்கே?" எனக் கூட்டத்தை நோக்கி வினவினார். "நான் இங்கேதான் இருக்கிறேன்" என்ற குரல் கூட்டத்திலிருந்து எழுந்தது. சேலை அணிந்து செவிலியர் நடுவில் அமர்ந்திருந்த தெரேசாவை அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போனது போலும்.

நான்கு மாதப்பயிற்சிக்குப்பின் மெடிக்கல் மிஷன் சகோதரிகளிடம் விடைபெற்றுக் கொண்டு தெரேசா கல்கத்தா திரும்பினார். பாட்னா மருத்துவமனையில் தெரேசா வாழ்ந்தது நான்கு மாதகாலம்தான். ஆயினும் அந்த மருத்துவச் சகோதரிகள் தெரேசா தங்களுடன் வாழ்ந்த நாட்களைத் தங்கள் நினைவில் நீங்காமல் வைத்திருந்தனர். தெரேசா இதுவரை அணிந்திருந்தது இரு பழைய செருப்புகள். இதைப் பார்த்த சகோதரி இன்ஜென்டா ஒரு ஜோடிப் புது பாதணிகளை அன்பளிப்பாக அவருக்கு வழங்கினார். இந்தப் "பாட்னா காலணிகள்" கல்கத்தாவின் சேரிகளிலும் கரடுமுரடான பாதைகளிலும் ஏறி இறங்குவதற்கு மிகவும் பயன்பட்டன. அவர் பாட்னாவில் பெற்ற பயிற்சி பிற்காலத்தில் கல்கத்தாவின் நிர்மல் ஹிருதய் விடுதியிலும் தொழுநோயாளிகள் குடியிருப்பாகிய சாந்தி நகரிலும் எவ்வளவுக்குக் கை கொடுத்திருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ!

பாட்னா மெடிக்கல் மிஷன் சகோதரிகளிடம்



புனித மரியன்னை கல்லூரியில் 17 வருடங்கள் பணிபுரிந்தார்.

தெரேசா நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். பாட்னாவுக்குச் செல்ல நேர்ந்த போதெல்லாம் தெரேசா அச்சகோதரிகளைச் சந்திக்கத் தவறினாரில்லை. அவர் கல்கத்தாவுக்குத் திரும்பின முதல் ஆண்டிலேயே மூன்று குழந்தைகளுடன் பாட்னா வந்திருக்கின்றார். சேரிகளின்று தூக்கியெடுக்கப்பட்ட அக்குழந்தைகளுக்கு காசநோய் கண்டிருந்தது. பாட்னாவில் அவர்களுக்கு அளித்த சிகிச்சையின் பயனாக இரு குழந்தைகள் உயிர் பிழைத்தனர். மூன்றாவது குழந்தை இறந்து போய்விட்டது.

இதுவரை தெரேசாவுக்குத் தங்குவதற்கான வீடு ஒரு பிரச்சினையாக இருந்ததில்லை. ஆனால் அவர் பாட்னாவிலிருந்து கல்கத்தாவுக்கு திரும்பினதும் "எங்கே தங்குவது?" என்பது ஒரு பெரும் பிரச்சினையாக எழுந்திருப்பதை உணர்ந்தார். இதை முன்கூட்டியே நினைத்துப் பார்த்திருக்கிறார் வான் எக்செம் அடிகளார். அவர் "ஏழைகளின் சிறிய சகோதரிகள்" என்னும் சபைத் தலைவியைச் சந்தித்து, தெரேசா வேறு ஏற்பாடு செய்யும் வரை அவர்களோடு தங்குவதற்கு உத்தரவு வாங்கியிருந்தார்.

"ஏழைகளின் சிறிய சகோதரிகளின்" சபை உலகளாவிய ஒன்று. இத்துறவறச் சபை பிரான்ஸ் நாட்டில் ஜான் யூகான் என்னும் புண்ணியவதியால் நிறுவப்பெற்றது. அநாதைகள், முதியோர், விழி இழந்தோர், செவிடர் போன்றவர்களைப் பராமரிப்பதுதான் இச்சபையின் தலையாய நோக்கம். உலகின் பல இடங்களிலும் பணிபுரிந்து வருகின்ற இக்கன்னியர் கல்கத்தாவிலும் புனித வளனார் முதியோர் இல்லம் என ஒன்றை அமைத்து இருநூறுக்கும் மேற்பட்ட வயோதிபரைக் கண்காணித்து வருகின்றனர்.

இச்சகோதரிகளின் வாழ்வுக்கும் தெரேசாவின் வாழ்வுக்கும் சில ஒற்றுமை, வேற்றுமைகள் இருந்தன. இருவரும் ஏழைகளின் உய்வுக்காகத் தங்களது வாழ்வையே அர்ப்பணித்தவர்கள். இரு தரப்பினரும் எவ்வித மூலதனமுமில்லாமல் இறைவனின் கருணையை மட்டும் நம்பி வாழ்ந்து வந்தவர்கள்.



பாட்னாவில் அன்னை தெரேசா தங்கியிருந்த சிறிய அறை

இச்சகோதரிகள் முதியோர் இல்லம், விழி இழந்தோர் விடுதி போன்ற நிறுவனங்களைக் கட்டி அவற்றினுள் இருந்துகொண்டு பணிபுரிந்து வந்தனர். ஆனால் தெரேசாவோ கன்னியர் இல்லச் சுவர்களைத் தாண்டி வெளியில் வந்து சேரிகளில் உழைக்க விழைந்தார். நாற்சந்திகளுக்குச் சென்று நாதியற்றுத் திரியும் மக்களுக்குப் பணிவிடை புரிய விரும்பினார். தெருக்கோடிகளுக்குச் சென்று யாவராலும் கைவிடப்பட்ட நடைபிணங்களுக்கு நற்பணி செய்யத் துடித்துக் கொண்டிருந்தார்.

1948ம் ஆண்டு மார்கழி திங்கள் 21ம் நாள் காலை உணவு அருந்திவிட்டு பணிபுரிய புறப்பட்டுவிட்டார் தெரேசா. இப்பணிக்காக தன் கைவசம் வைத்திருந்த மூலதனம் எவ்வளவு என்று தெரியுமா? ஐந்தே ரூபாய்தான். அதையும் எடுத்துக்கொண்டு நேரே மோட்டி ஜீல் என்னும் சேரிக்குச் செல்கிறார். அதைப் "பஸ்தி" என்பர் வங்காள மொழியில். புனித மரியன்னைப் பள்ளியில் பணிபுரியும் வேளையில் அந்தப் பஸ்தி தெரேசாவின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அங்கே விளையாடும் சிறுவர், சிறுமியரை அவர் நன்கு கவனித்திருக்கிறார். அப்பொழுதே அவரது அன்பு உள்ளமும் அக்குழந்தைகள் பக்கம் கனிந்திருக்கிறது. வறுமைக் கோட்டிற்கும் கீழ்மட்டத்தில் வாழும் இம்மக்களுக்குத் தம்மால் இயன்ற அளவு உதவி புரிந்தே தீருவேன் என தீர்க்கமான தீர்மானம் ஒன்றை அன்றே உருவாக்கியிருந்தார். அதைச் செயல்படுத்தத்தான் இப்போது வந்திருக்கிறார். அன்று அவருக்குக் கன்னியர் இல்லத்துக்கு வெளியே சென்று பணிபுரிய சுதந்திரம் இல்லை. இன்று அச்சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆகவே, எடுத்த எடுப்பிலேயே மோட்டி ஜீலுக்கு விரைந்தார் தெரேசா.

மோட்டி ஜீல். என்னஅழகான பெயர்! அப்பெயரின் பொருள் முத்துக்குளம். அங்கே குளம் ஒன்று இருந்தது. கழிவு நீர் தேங்கி கருப்பாகக் காட்சி அளிக்கும் ஒரு குட்டை அது. பரந்து கிடக்கும் பொட்டல் போன்ற அப்பகுதியில் குட்டை ஒன்று கிடப்பது ஒரு முத்தைப் போன்று மக்கள் கண்களில் பட்டிருக்க வேண்டும். எனவே அதை முத்துக்குளம் எனப் பொருள்படும் மோட்டி ஜீல் என அழைக்கலாயினர். அக்குளம் ஒரு முத்து என்போமானால் அது நிச்சயமாக கறுப்பு முத்தாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

அரை நிர்வாணமாக சிறுவர்கள் அக்குளக்கரையில் ஓடிவிளையாடிக் கொண்டிருந்தனர். அடுப்புக்கரி பூசிய முகங்கள். அகன்று விரிந்த கருவிழிகள், பந்துபோல் ஊதிப்போன வயிறுகள், சேறும் சகதியும் படிந்த கால்கள், எண்ணெய் அறியாத் தலைகள், இவர்கள் தான் முத்துக் குளத்தின் முத்துச் செல்வங்கள். தங்கள் சேரிக்கு வெண்ணிறச் சேலை அணிந்த சகோதரி ஒருவர் வந்திருப்பதைக் கண்டு அவரை வரவேற்க வந்த வரவேற்புக் குழுவினர்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# பண்பாடு பற்றிய கிறிஸ்தவத்தின் பார்வை

**அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறையில் இடம்பெற்ற பொங்கல் விழாவின்போது (14.01.2017) தமிழ் மற்றும் சிங்களக் குருக்களுக்கும், குருத்துவ மாணவர்களுக்கும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றிய உரையின் தொகுப்பு**

காலங்களைக் கடந்த கடவுள் ஒரு கன்னியின் வயிற்றுக்குள் கருவாக உடன்பட்டார். தேச எல்லைகளைக் கடந்த கடவுள் ஒரு சிற்றூரில் பிறக்கச் சம்மதித்தார். வரலாற்றையே வடிவமைக்கும் இறைவன் வரலாற்றுக்குள் தன்னை வரைந்துகொண்டார். ஆம், நசரேத்து என்ற சிற்றூரில் இடம்பெற்ற இயேசுவின் மனிதப்பிறப்பு, உலக வரலாற்றையே உலுக்கிய ஓர் நிகழ்வு; உலகமே திரும்பிப்பார்த்த ஓர் உன்னத நிகழ்வு. இயேசு யூதப் பண்பாட்டைச் சார்ந்தவராக, அரமாய்க் என்ற மொழியைப் பேசுகின்றவராக பிறந்தார். இயேசுவின் பிறப்போடு வரலாறே தன்னை இரண்டாக வகுத்துக்கொண்டது. கிறிஸ்துவுக்குமுன், கிறிஸ்துவுக்குப் பின் என வரலாறு தன்னை வரையறுத்துக்கொண்டது.

நாம் அனைவருமே ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில், ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுகின்றவர்களாக இந்த உலகத்தில் பிறக்கின்றோம். இதிலே நமக்கு எந்தத் தெரிவும் இல்லை. அதாவது நமது பண்பாட்டை, நமது மொழியை நாம் தீர்மானிப்பதில்லை. நாம் எந்தப் பண்பாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த மொழியைப் பேசுகின்றவர்களாக இருந்தாலும் இவை அனைத்தும் இறைவன் நமக்கு அளித்த கொடைகளே! எனவே நாம் சார்ந்துள்ள பண்பாடும், நாம் பேசுகின்ற மொழியும் விலைமதிப்பற்ற செல்வங்கள். இவற்றைப்பற்றி நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்; இவற்றைப்பற்றி நாம் பெருமைப்பட வேண்டும். பண்பாட்டைப்பற்றிப் பேசுகின்றபோது, "பண்பாடு என்பது மனிதனின் ஆன்மா" போன்றது என சில இறையியலாளர்கள் கூறியுள்ளனர்.

### கிறிஸ்தவமும் பண்பாடும்

கிறிஸ்தவம் ஒரு பண்பாட்டிற்குள் மட்டும் தன்னை முடக்கிக்கொள்ளவில்லை. எல்லாப் பண்பாட்டின் நன்மையான அம்சங்களை கிறிஸ்தவம் ஏற்றுக்கொண்டது; அரவணைத்துக்கொண்டது. எங்கெல்லாம் கிறிஸ்தவம் அறிவிக்கப்பட்டதோ, அங்கெல்லாம் இருந்த பண்பாட்டின் நன்மையான அம்சங்களை கிறிஸ்தவம் உள்வாங்கிக்கொண்டது. இதைத்தான் "பண்பாட்டுமயமாக்கல்" என்கிறோம். கிறிஸ்தவம் பண்பாடுகளை உள்வாங்கியதாலும், நாடுகள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டதாலும் கிறிஸ்தவமும், நாடுகளும் பரஸ்பரம் வளம்பெற்றன.

நாம் அனைவரும் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள். எனவே மற்றவர்களின் பண்பாடுகளை மதிக்கவும், பாராட்டவும் நாம் பழகிக்கொள்ளவேண்டும். வெவ்வேறு பண்பாட்டு அம்சங்கள் திருச்சபையை அழகுபடுத்துகின்றன; திருச்சபைக்கு செழுமை சேர்க்கின்றன. இதையே "வேற்றுமையில் ஒற்றுமை" என்கிறோம். முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் முதல் தடவையாக ஒரு நாட்டிற்குப் பயணம் செய்யும்போது, அவர் விமானத்தில் இருந்து இறங்கியதும் முதலில் குனிந்து மண்டியிட்டு அந்த நாட்டின் மண்ணை முத்தமிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஏன் அவர் இப்படிச் செய்தார் என்றால் அந்த நாட்டின் பண்பாட்டை, கலாச்சாரத்தை, திருச்சபை மதிக்கின்றது; போற்றுகின்றது என்பதன் வெளி அடையாளமாகவே அவர் இப்படிச் செய்தார்.

### தமிழ் மொழியும் கிறிஸ்தவமும்

தமிழ்ப் பண்பாடும், தமிழ் மொழியும் இரண்டாயிரம் ஆண்டு காலத் தொன்மையானது. தமிழ் மொழிக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையிலான உறவும், தொடர்பும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளன. தமிழ் மொழி வரலாற்றில் ஐரோப்பிய மற்றும் உள்நாட்டு கிறிஸ்தவத் தொண்டர்களின் பணி அளப்பெரியதாகும். கிறிஸ்தவ சமயம் தமிழ் மொழியின் வளர்ச்சியில் பாரிய, முன்னேற்றகரமான பல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது...



15ம் பக்கம்

# இயேசுநாதர் என்னைத் தேடிக்கொண்டிருக்கிறார். ஆனால் நான் அவரைத் தேடுகிறேனா?



**சாலமோனின் ஞானம் 11:21–12:2**

கிரேக்க கலாச்சாரத்தை அறிந்தே யூதர் ஞான ஆகமத்தை எழுதினர். இறைவன் நீதியுள்ளவர். துன்பப்படுத்துபவர் மீது தமது கோபத்தைக் காட்டி பயப்படுத்துவார். கவனம் என்று எச்சரிப்பார். நாம் எவ்வளவு தவறு செய்தாலும் பொறுத்துக்கொள்வார். இறைவன் அன்பாய் இருப்பதால் அவரில் நீடிய பொறுமையுண்டு. இவ்வாசகத்தில் இறைவன் எவ்வளவு பொறுக்கிறார் என்று கூறப்படுகிறது. எமது பாவத்தைக் கண்டதும் ஏதாவது செய்யக்கூடிய வல்லமையுள்ளவர் இறைவன். அப்படிப்பட்ட வல்லமை இருந்தும் பொறுத்துக் கொள்கிறார். எமக்கு வல்லமை இருந்தால் உடனே அந்த வல்லமையைப் பாவித்துப் பழிவாங்கிவிடுவோம். ஆனால் இறைவன் இரக்கம் காட்டுகிறார். பொதுவாக வல்லமையும் மன்னிப்பும் ஒன்றாகச் செயற்படாது. பயணம் செல்லாது. வல்லமையுள்ளவர்கள் பொதுவாக மன்னிக்கமாட்டார்கள். இங்கே இறைவனில் மன்னிப்பும் வல்லமையும் ஒன்றாகப் பயணம் செய்கின்றன. மனந்திரும்புமாறு மன்னித்துப் பொறுக்கிறார். மனம் திரும்புவதற்காகவே தமது பொறுமையைக் கடைப்பிடிக்கிறார். வல்லமையும் அன்பும் ஒன்றாகும் இடத்திலே ஞானம் செயற்படுகிறது. ஞானமுள்ளவர் பொறுமையுள்ளவராய் இருப்பார். பொதுவாக இந்தப்பக்கம் வல்லமை இருக்கும்போது மறுபக்கத்தில் தூண்டிவிடுபவர்கள் இருப்பார்கள். இந்த இரண்டுக்கும் இடையில் இங்கே இறைவனின் பொறுமை செயற்படுகின்றது. அதாவது நிகழ்வுகளை நேர்மறையாக பார்ப்பது முக்கியம்.

இறைவனை அறியவும் சேவை செய்யவும் இறைவன் இயற்கையை எமக்குத் தந்துள்ளார். இது மனிதனின் நன்மைக்காகவே. எல்லா உயிர்களையும் வாழ அனுமதிக்கின்றார். எல்லா உயிர்களிலும் அன்பு கூர்கின்றார். வல்லமையும் அன்பும் ஒன்றுசேருமிடமே ஞானமாகும். அன்புக்காக எமது வல்லமையைப் பாவிக்கவேண்டும். நாம் இறைவனது ஆவியால் வாழ்கிறோம். ஆகவே அவரை எதிர்க்கமுடியாது. எம்மைச் சிறிது சிறிதாகத் திருத்துகிறார். தாயைப் போன்று அன்புகாட்டுகிறார். பிழைவிடும்போது கோபப்படாமல் அன்புகாட்டித் திருத்துகிறார்.

**லூக்கா 19:1–10**

இயேசுநாதர் ஜெரிக்கோவுக்குச் சென்று அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்தார். ஜெரிக்கோ விவசாயம் செய்யக்கூடிய செழிப்பான இடம். பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும். அங்கு பணக்காரர்கள் வாழ்ந்து வந்தனர். வரிதண்டுவோரின் தலைவராகிய சக்கேயுவும் வாழ்ந்து வந்தார். அவன் ஒரு பெரிய பணக்காரன். இயேசுநாதர் யார் என்று பார்க்க சக்கேயு விரும்பினார். அவரைப் பார்க்கத் தேடினார். முயற்சி செய்தார். ஓடிப்போனார். ஒரு காட்டு அத்திமரத்திலே ஏறிக்கொண்டார். காரணம் அவர் உயரத்தில் கட்டையாக இருந்தார். இழந்து போனதைத் தேடவே நான் வந்தேன் என்ற நோக்கத்தில் யேசுநாதரும் பாவியாகிய சக்கேயுவைத் தேடினார். அவர் எம்மைத் தேடிவருவதால் நாமும் அவரைத் தேடும் போது அவரைச் சந்திக்கின்றோம். பொதுவாக செல்வந்தன் மோட்ச இராட்சியம் செல்வது கடினம். இங்கு பாவியாகிய பணக்கார சக்கேயு இயேசுவைத் தேடினான். இயேசுவும் சக்கேயுவைத் தேடினார் என்பது சக்கேயுவுக்கு தெரியாது.

இங்கே இயேசுநாதர் என்ன கூறினார்? தேடுவது எமக்குக் கிடைக்கும். காணமற் போன ஆடு, காணமற் போன பணம் இந்த உவமைகளில் இக்கருத்தைக் காணலாம். அதுமட்டுமல்ல விரைவாக இறங்கி வா என்று கூறினார். இயேசுநாதர் பிறந்த செய்தியைக் கேட்ட இடையர் விரைந்துசென்றனர் என்று கூறப்படுகிறது. விரைவாக இறங்கி வா நான் உன் வீட்டில் தங்கவேண்டும். இங்கே வேண்டும் என்ற சொல்லைக் கவனிக்கவும். மத்தேயு 6:21, மாற்கு 8:31, லூக்கா 9:22 இறைவனது விருப்பப்படி நடக்கவேண்டும். இங்கே இறைவனது விருப்பப்படி உன் வீட்டில் தங்கவேண்டும் என்று இயேசுநாதர் கூறியதும் சக்கேயு மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றான்.

எபிரேய மொழியில் சந்தோசமென்பது வேறு மகிழ்ச்சியென்பது வேறு. இங்கே உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சி எமக்குத் தேவை என்று கூறப்படுகின்றது. ஏதாவது நாம் எதிர்பார்த்தது கிடைத்தால் அல்லது நடந்தால் எமக்கு சந்தோசம் ஏற்படும். ஆனால் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்ததும் எமக்கு மகிழ்ச்சி ஏற்படும். பரிசுத்த தேவ தாயாரைக் கண்டதும் எலிசபெத் அம்மாவின் வயிற்றிலிருந்த பிள்ளை மகிழ்ச்சியால் துள்ளியது.

பாவியாகிய சக்கேயு மகிழ்ச்சியால் துள்ளும் போது இயேசுநாதர் பாவியோடு தங்கப் போகிறாரே என்றதும் பணக்காரர் எல்லோரும் வெறுப்படைந்தனர். எரிக்கோவுக்கு இயேசுநாதர் வரும்போது பணக்காரர்கள் வெறுப்படைந்தனர். முணுமுணுத்தனர். ஆனால் பாவியாகிய பணக்காரனாகிய சக்கேயுவோ மகிழ்ச்சி அடைந்தான். ஒரு பணக்காரன் இயேசுவைச் சந்தித்த-



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

130

போது ஏனைய எல்லா பணக்காரரும் இயேசுவை வெறுத்தனர். பொதுவாக யூதசட்டப்படி ஐந்துவீதம் ஏழைகளுக்குக் கொடுப்பர். பத்துவீதம் கோயிலுக்குக் கொடுப்பர். இங்கே சக்கேயு ஐந்துவீதமல்ல அரைவாசியைக் கொடுப்பதாக முடிவெடுக்கிறான். பொதுவாக அபகரித்ததை அதே அளவு கொடுப்பர். இங்கே சக்கேயு நான்கு மடங்கு கொடுப்பதற்கு முடிவெடுக்கிறான். இறைவனைச் சந்தித்ததும் பேராசையால் சேர்ப்பதல்ல. மகிழ்ச்சியால் இருப்பதைக் கொடுக்கவே மனம் வரும். தேடிச் சென்ற சக்கேயுவில் மாற்றம் ஏற்பட்டது. ஆனால் பார்த்துக்கொண்டிருந்த ஒருவருக்குமே வரப்பிரசாதம் கிடைக்கவில்லை.

இன்று இந்த வீட்டுக்கு மீட்பு வந்துள்ளது. சக்கேயுவை இவர் யூதரல்லர். ஆபிரகாமின் மகன் அல்லர் என்று ஒதுக்கினர். ஆனால் இயேசுவோ சக்கேயுவைச் சேர்த்துக் கொண்டார். இழந்துபோனதை மீட்கவே மானுடமகன் வந்தார். இங்கே "இன்று" என்ற சொல் முக்கியம். கடந்தகாலமல்ல. எதிர்காலமுமல்ல நிகழ்காலத்திலேயே மீட்பை அனுபவிக்கவேண்டும். இறைவனது மீட்பின் நாள் இன்றேயாகும். நாளையல்ல என்பதை மனதில் கொண்டு அவரைத் தேட ஆசைப்படுவோம். அவர் என்னைத் தேடிக்கொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்க நான் அவரைத் தேடவேண்டும்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு WLX

- பேதுரு -

## பொதுக்காலத்தின் ஐந்தாவது வாரம் (05.02.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு தின வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும், இறை நெஞ்சங்களே உறவுகளே! திருச்சபை திருக்-கூட்டமாய் அன்புப் பலி செலுத்த அனைவரையும் அழைக்கின்றோம். இன்றைய நற்செய்தியில் நம் ஆண்டவர் இயேசு உப்பு ஒளி என்ற இரண்டு அடையாளங்கள் வழியாக நமக்கு சிறந்த படிப்பினைகளைத் தருகின்றார். இவை இரண்டினதும் பயன்பாட்டை அறிந்துள்ள நம்முடைய வாழ்வும் சாட்சிய வாழ்வாக இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுகின்றோம். உப்பு உணவுக்கு சுவை ஊட்டுவதுபோல ஒளி வாழ்வுக்கு வழி காட்டுவது போல கிறிஸ்தவர்களாகிய நாமும் மற்றவர்களுக்கு சுவையூட்டுபவர்களாக, வழிகாட்டுபவர்களாகத் திகழ வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு செல்வப்பற்று அற்றவர்களாக தீமைகளை வெறுப்பவர்களாக அன்பு, நீதி உண்மை, பகிர்வு கொண்டவர்களாக வாழ முற்பட வேண்டும். நமது நன்னெறி வாழ்வால்தான் அடுத்தவர்களுக்கு நாம் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க முடியும். இதற்கான அருள் வரங்களை வேண்டிடத் தொடரும் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசாயா 58:7-10**
உன் ஒளி விடியல் போல் எழும்

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர்

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 2:1-5**
கடவுளைப் பற்றிய மறைபொருளை உங்களுக்கு அறிவித்தேன்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா அல்லேலூயா உலகில் ஒளி நானே என்னைப் பின் தொடர்பவர்
இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 5:13-16**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைமகன் இயேசுவின் கூற்றிற்கு இணங்க உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் துலங்கும் தூய திருச்சபைக்கும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது அருளையும் ஆசீரையும் அளித்தருள வேண்டுமென்று...

உணவுக்கு சுவையையும், பராமரிப்பையும் தரும் உப்பாகவும், இருளை அகற்றுவதும், தன்னைத் தொடுவோரை சுட்டெரிப்பதுமான ஒளியாகவும், நாம் விளங்கி, தீமைகள் அற்ற நாட்டின் மக்களாக திகழ்ந்து, உண்மைக்கும், நீதிக்கும் சான்று பகர்ந்து வாழ வேண்டிய வரத்தை தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவைப் பின் செல்லும் மக்களாகிய நாம் அனைவரும் ஒளியாகவும், உப்பாகவும் துலங்கும் ஏனைய மக்களுக்கு முன்மாதிரியாக வாழவும் இயேசுவைப் போல் எங்கு சென்றாலும் நன்மையே செய்யவும், தீமைகள் பாவங்கள் அற்ற தூய சமுதாயம் படைக்கவும் வேண்டிய மனநிலையை எமக்குத் தந்தருள வேண்டுமென்று .

## பொதுக்காலத்தின் ஆறாவது ஞாயிறு (12.02.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 6வது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் இறை குலத்தோரே உறவுகளே, சகோதர வாஞ்சையுடன் உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம். சட்டங்கள், ஒழுங்குகள் நெறிமுறைகள் என்பன எப்பொழுதுமே ஒரு குடும்பம் நல்லா இருக்க வேண்டும், ஒரு ஊர் நல்லா இருக்க வேண்டும், சமுதாயம் நன்றாக இருக்க வேண்டும் என்ற உயர்வான நோக்கத்தோடு உருவாக்கப்பட்டவை. கடவுள் கொடுத்த கட்டளைகள் மக்களின் நலனுக்காகவும், ஒரு நிறைவான சமுதாயம் படைக்கவுமேயன்றி, மக்களை அடிமைகளாக பாவிக்க அல்ல, இன்றைய நற்செய்தியில் தீர்ப்பிடுவதை விட திருத்த வைப்பதே மேல். அடுத்தவர் மீது குற்றம் சுமத்துவதை விட அவர்களை குற்றமற்றவர்களாக வாழச்செய்வதே மேல். தூய மனத்தோடு செலுத்தும் காணிக்கையே கடவுள் ஏற்கின்றார். சகோதர சகோதரிகளோடு நல்லுறவு இல்லாமல் கடவுளுக்கு காணிக்கை தருவது அவருக்கு ஏற்புடையதல்ல, அகந்தையும் ஆணவமும் அகற்றி சாந்தமும் கனிவும் கொண்டவர்களாக மனித நேயத்துடன் இறையருள் வேண்டி பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : சீராக் 15:15-20**
இறைப்பற்றின்றி இருக்க ஆண்டவர் யாருக்கும் கற்பிக்கவில்லை

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்

**இரண்டாம் வாசகம் :**
உலகம் தோன்றும் முன்னே ஞானம் கடவுளின் திட்டத்தில் இருந்தது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தந்தையே விண்ணுக்கும் ஆண்டவரே உம்மைப்போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 5:17-37**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எப்பொழுதும் மக்கள் பினபற்றக் கூடிய சட்டங்களையும் கட்டளைகளையும், வழங்கி மக்களை நிறை உண்மையை நோக்கி வழிநடத்தும் தூய திருச்சபையையும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது அன்பையும் ஆசீரையும் வழங்கி நடத்தியருள வேண்டுமென்று...

நாம் மற்றவர் மீது குற்றம் சுமத்தாமலும் தீர்ப்பிடாமலும் எமது கடமைகளை நிறைவேற்றவும், நாடு எனக்கு என்ன செய்தது என்று கேட்காமல்நான் நாட்டிற்கு என்ன செய்தேன் என்று சிந்தித்து செயல்படவும், எரிச்சல், சினம், வெறுப்பு பகை பழிவாங்குதல் போன்ற குணங்களை அகற்றி வாழவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

மறைநூல் அறிஞர், பரிசேயர் போன்று சட்டத்தைக் கடைப்பிடிக்கிறோம் சட்டத்தின் உட்பொருளான இரக்கம் அன்பு, மன்னிப்பை புறம் தள்ளி வாழாமல் இறை நம்பிக்கையின் அடிப்படையில் அன்பின் சமுதாயம் படைத்திட அனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# சில வகை தியான முறைகள்




இறைவனுடைய விருப்பத்தை அறிய செபமும் தியானமும் நமக்கு உதவுகின்றன. நம்முடைய ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதற்கு சிறுசிறு தியான வகைகள்.

### சுவாசக் காற்று தியானம்

இதனை சமஸ்கிருத மொழியில் பிராணமாயத் தியானம் எணலாம். மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுவதை உணர்ந்து செய்யப்படும் தியான வகை. மூச்சுக்காற்றை உள்ளே இழுக்கும்போது "இயேசுவே" எனவும் வெளிவிடும்போது "மீட்பர்" எனவும் கூறி மனதை ஒழுமுகத்தப்படுத்தி செபிக்க வேண்டும் (பத்து நிமிடங்ளுக்கு மேலாக இதைச் செய்யவும்

### காட்சித் தியானம்

இதைப் பேருந்தில் பயணிக்கும்போது அல்லத தனிமையில் இருக்கும்போது செய்யலாம் நற்செய்தியில் இருந்து ஒரு பகுதியை வாசித்து அதில் வரும் கதாபாத்திரங்களோடு இணைத்துப் பார்த்து செய்யப்படும் தியானம். கண்களை மூடித் வாசித்த நிகழ ்ச்சியை மனக்கண்முன் கொண்டுவந்து திஜரப்படக் காட்சிபோல் ஒவ்வொரு நிகழ்ச்சியாக தியானம் செய்தல்

### இயேசுவின் பெயர் தியானம்

இதனை "நாமச் செபம்" என்றும் அழைக்கின்றனர். இயேசுவினுடைய பெயரை தொடர்ந்து சொல்வதன் வழியாக மனதில் அமைதி பிறக்கும். வாழ்வில் தெளிவு கிடைக்கும்.

### பொருள்கள் பற்றிய தியானம்

காலை நேரங்களில் இவ்வகை தியானத்தைச் செய்வது நல்லது. இயற்கையில் காணப்படும் பெருள்களில் ஏதாவது ஒன்றை எடுத்து (பூ, கல், புல், மணல் செடி விதை.) நற்கருணை பிரசன்னத்தில் அமர்ந்து அப்பொருள்களின் இயல்பை நினைத்து தியானம் செய்தல். அப்பொருளின் இயல்போடு நம்முடைய பண்புகளையும் இணைத்துப் பார்ப்பது. இறுதியாக இறைவனுக்கு நன்றி கூறி வழிநடத்தல் செபம் சொல்லி தியானத்தை முடிக்கலாம்.

### சிறு பாடல் தியானம்

பயணிக்கின்றபோதும் வேலை செய்யும் போதும் ஓய்வெடுக்கும் போதும் இறைவனுடைய உடனிருப்பை உணர்வதற்கு இவ்வகைத் தியானத்தை பயன்படுத்தலாம். நன்றாக தெரிந்த பிடித்தமான பாடல்களில் ஓரிரு வரிகளை மீண்டும் மீண்டும் பாடுவதன் வழியாக இதைச் செய்யலாம். முயன்று பாருங்களேன்!



கொழும்பு டிலாசால் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட பத்தாம் ஆண்டு மாணவர்களின் பெற்றோருக்கான கருத்தரங்கு ஒன்று அருட்தந்தை மேரியஸ் பர்னாந்து (அ.ம.தி) அடிகளாரின் வழிநடத்தலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

தகவல் : அருட்பணி நியூமன் முத்துத்தம்பி அடிகள் (அ.ம.தி) «« ✍ »»



2017ஆம் ஆண்டுக்கு டிலாசால் கல்லூரிக்கு முதலாம் ஆண்டுக்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வைபவத்திற்கு பிரதம அதிதியாக வருகை தந்த அருட்சகோதரர் அன்ரன் நிஷானந்த் பெர்ணான்டோ புள்ளே (அ.ம.தி) அவர்கள் மாணவர்களை ஆசீர்வதிக்கும் முன் செபத்தில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# இலங்கையின் திருத்
# அடிகளின் வாழ்



## 1.1 அறிமுகம்

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதம் அழிவுறும் நிலையில் இருந்தபோதும் இறைவனின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. இறைவன் கத்தோலிக்க திருச்சபையை கைவிடவில்லை. நெருப்பினால் பொன் புடமிடப்படுவதுபோல ஒல்லாந்தரின் துன்புறுத்தலால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு புதிதாய் மலர்ந்த புத்துயிருடன் பிரகாசமாய் திகழவேண்டும் என இறைவன் திருவுளம் கொண்டார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைக் கத்தோலிக்கர்கள் தமது விசுவாசப் புதுப்பித்தல் எதுவுமின்றி, ஆயனில்லாத மந்தைகள் போல் துன்பப்பட்டனர். அப்போதுதான் இலங்கை கத்தோலிக்கருக்குப் பணிபுரிய தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்கும் படியாக எளிமையான ஓர் இளம் குரு இலங்கைக்கு வருகைதந்தார். அவரே "இலங்கையின் அப்போஸ்தலர்" என்று அன்போடு அழைக்கப்படுகின்ற புனித யோசேவ்வாஸ் அடிகளார் ஆவார்.

### 1.1.1 இலங்கையில் இறைவனின் திருவுளம்

திருத்தூதரான தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் "கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்ட-வர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும்". எனும் திருவசனமானது இலங்கை நாட்டின் கத்தோலிக்க மதத்தின் நிலைகளை தெளிவாகக் காட்டுகின்றது. கடவுளின் தன்மையும், இரக்கமும் தீமையை நன்மையாக மாற்றும் என திருத்தூதர் சொன்னதை இலங்கை கத்தோலிக்க திருச்சபை சரித்திரத்தில் இரு பிரதான சம்பவங்கள் சரியெனச் சுட்டுகின்றன.

எந்த நாடும் அரசியற் சுதந்திரத்தைப் பெரிதாக மதிக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் நமது நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றியது சுதந்திரம், இறைமைக்கு இழுக்குத்தான். ஆனால் அந்தத் தீமையை நன்மையாக மாற்றி, நமது நாட்டுக்கு கத்தோலிக்க விசுவாசத்தைக் கொண்டுவரப் போர்த்துக்கேயரைக் கடவுள் உபகரணமாக்கினார். போர்த்துக்கேயப் படைகளின் பின்னே வந்த பிரான்சிஸ்கன், யேசுசபை, சாமிநாதர் சபை, அகுஸ்தீன்சபை துறவிகள் இலங்கையில் விசுவாசத்தை விதைத்தனர். அதுவும் வளர்ந்தது.

அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தருடைய காலத்தில் வேறொரு தீமை தோன்றியது. இலங்கைக் கத்தோலிக்கர் மதச் சுதந்திரத்தை இழந்தனர். கல்வின் கட்சியினரான ஒல்லாந்தர் கத்தோலிக்கரைக் கடின கலாபனைக்குட்படுத்தினர். கடவுளோ அதிசயமான முறையிலே தீமையை நன்மையான முறையில் மீண்டும் மாற்றினார். கத்தோலிக்க விசுவாசத்தைக் காப்பாற்றவும் மீண்டும் உறுதியான அத்திவாரத்தில் நிறுவவும் ஒருவரை அனுப்பினார். இவரே புனித யோசேவ்வாஸ் அடிகளார் ஆவார்.

## 1.2 யோசேவ்வாஸின் குடும்பப் பின்னணி

இந்நிலையில் கோவா மாநிலத்தின் சல்செத்தே (Salcete) என்னுமிடத்தில் அமைந்துள்ள, சுவாரி (Zuari) நதியின் தெற்குக் கரையோரமாய் சன்கோலே (Sancole) என்னும் கிராமம் அமைந்துள்ளது. 17ஆம் நூற்-றாண்டின் நடுக்கூற்றில் கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் பாரம்பரிய, ஏழையான நற்பண்புகளைக் கொண்ட கொங்கொணி மொழி பேசும் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. இக்கிறிஸ்தவக் குடும்பம் பக்தியிலும், நேர்மையிலும், பிறர் அன்பின் சேவையிலும் சிறந்து விளங்கியது. இதனால் இக்குடும்பத்தைச் சூழ்ந்து வாழ்ந்த ஏனைய குடும்பங்களின் நன்மதிப்பை பெற்றிருந்தது. இது ஒரு பிராமணக் குடும்பமாகவிருந்தாலும் "வாஸ்" (Vass) என்ற போர்த்துக்கேயர் கிறிஸ்தவப் பெயரைத் தனது குடும்பப் பெயராகக் கொண்டிருந்தது. உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருந்த மத்திய வயதுடைய கிறிஸ்தோப்பர் வாஸ் என்பவரே இக்குடும்பத்தின் தலைவர். சாதாரண வசதிகளைக் கொண்ட தனது பரம்பரை வீட்டிலே அவர் வாழ்ந்து வந்தார். விவசாயப் பரம்பரையிலே வந்த இவர், ஒரு தனித்துவமான விவசாயியாகவும், சிக்கனத்தைப் கடைப்பிடிப்பவராகவும், எதையும் ஆழ்ந்து சிந்தித்து செயற்படுத்துபவராகவும் இருந்தார். இவர் கல்வி அறிவிலும் சிறந்து விளங்கினார். கிறிஸ்தோப்பர் வாஸ் மராட்டி மொழியின் கிளை மொழியாயும், கொங்கொணி பிராமணர்களின் தாய்மொழியாயும் விளங்கிய கொங்-கொணி மொழியில் தேர்ச்சிபெற்றிருந்தார். பாடசாலைக் கல்வியை போர்த்துக்கேய மொழியிலேயே கற்றார். ஏனெனில் அக்காலத்தில் போர்த்துக்கேய மொழி கோவா மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும், மக்களின் பேச்சு மொழியாகவும் விளங்கியதோடு கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்தவ கலாச்சாரத்தையும் பரப்பும் ஊடகமாகவும் விளங்கியது.

கிறிஸ்தோப்பர் வாஸின் மனைவியின் பெயர் மரிய டொ மிரண்டா. அவர் பெனோலிம் (Benaulim) என்னும் அயற்கிராமத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பத்தைப்போலவே, மரிய டொ மிராண்டா குடும்பமும் பண்பும், கத்தோலிக்க மறை உணர்வும் கொண்டு விளங்கியது. அவர்களுக்கு பேத்றோ என்ற ஆண்பிள்ளையும், அஞ்சலா என்ற பெண் பிள்ளையும் இருந்தார்கள். இந்நிலையில் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கின்ற குழந்தையாகவும், இந்திய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் தனது பெயரை பதிப்பவராகவும், தலைமுறை தோறும் ஒரு எடுத்துக்காட்டான கருவாக விளங்குபவராகவும், கீழைத்தேச விசுவாசத்தின் சிறந்த கொடையாகவும், கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையாக யோசேப் பிறந்தார்.

## 1.3 யோசேவ்வாஸின் பிறப்பு

### 1.3.1 அறிமுகம்

"இலங்கையின் திருத்தூதர்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்ட புனித யோசேவ்வாஸ் இலங்கையின் கத்தோலிக்கர்கள் ஒவ்வொருவராலும் அறியப்பட வேண்டியவர். இலங்கை ஒல்லாந்தரின் ஆட்சி அதிகாரத்தின் பிடியில் கத்தோலிக்க மதம் நசுக்கப்பட்டு, அழித்தொழிக்-கப்பட்ட, உயிராபத்து மிகுந்த சூழலில் இலங்கைக்குள் நுழைந்து, கத்தோலிக்கத்துக்கு புது இரத்தம் பாய்ச்சி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, நாடு முழுவதிலும் சத்திய மறை தளைக்கச் செய்த இறைத்தூதர் ஆவார். இவரது எடுத்துக்காட்டான வாழ்வும், பணியும் இலங்கை வாழ் கத்தோலிக்கரிடையே மதப்பற்றை ஏற்படுத்தியது. இந்த வகையில் அவரது வாழ்வு பற்றி நோக்குவோம்.

### 1.3.2 பிறப்பும் பின்னணியும்

இந்தியத் துணை கண்டத்தில் அதன் மேற்கே அமைந்துள்ள, மலையும், நதியும், இயற்கை வனப்பும் நிறைந்த கோவைப் (Gova) பிரதேசத்தில், கிறிஸ்தோப்பர் வாஸ், மரிய டொ மிராண்டா ஆகிய பிராமணிக்கம் மிக்க, கொங்காணிய பிராமண கிறிஸ்தவ தம்பதியினரின் ஆறு குழந்தைகளில் மூன்றாவது குழந்தையாக 1615ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8ந் திகதி யோசேவ்வாஸ் பிறந்தார்.

கர்ப்பிணித் தாய்மார் பிரசவத்திற்காகத் தமது பெற்றோர் வீடு செல்வது அந்நாட்களில் அங்கு வழக்கமாக இருந்தது. இதனால் யோசேவ்வாஸ் பெனாலியும் என்னும் தாயின் ஊரிலேயே பிறந்தார். பிறந்த எட்டாம் நாள் பங்கு ஆலயமான திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இயேசு சபைக் குரு முதல்வர் யசிந்தோ பெரேரா என்பவரிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர்களின் வழக்கப்படி தந்தை வழியில் செபஸ்ரியன் வாஸ் என்பவரும், தாய்வழியில் கோப் டொ மிராண்டா என்பவறும் ஞானப்பெற்றோராக



புனிதர் பிறந்த வீடு

இவரைப் பொறுப்பேற்றனர். யோசேவ்வாஸ் தாயின் கிராமமாகிய "பெனாலிம்" எனும் கிராமத்திலே பிறந்தார். தந்தையின் சொந்த இடமாகிய "சாண்கோவிலில்" வளர்ந்தார். யோசேவ்வாஸின் பெற்றோரான கிறிஸ்தோப்பர் வாஸ், மரியா டொ மிராண்டா இருவரும் உயர்குலமான பிராமண வகுப்பைச் சேர்ந்த கொங்காணி இந்தியர். ஆனால் அவர்கள் இறைவிசுவாசத்தில் நன்கு தழைத்து வேரூண்றிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தங்கள் செல்வாக்கினாலும், பக்தி வைராக்கியமுள்ள வாழ்வினாலும், நற்செயல்களினாலும் தங்கள் கிராமத்தவரால் நன்கு அறியப்பட்டிருந்தார்கள். கிறிஸ்தோப்பர் வாஸ் சாதாரண வாழ்க்கைத் தரத்திலுள்ள ஒரு இந்திய பிரஜை பெறக்கூடியதற்கு மேலான கல்வியறிவைப் பெற்றிருந்தார். அன்றியும் அவர் தனது உயர்மட்ட ஆற்றலினாலும், நற்செயல்களினாலும் தனது கிராமத்தவரால் நன்கு அறியப்பட்டிருந்தார். அவரது மைந்தனான யோசேவ்வாஸ் பிறக்குமுன்பே இறைவன் ஒருவரின் மூலம் யோசேவ்வாஸின் மகிமையான பிற்கால வாழ்க்கை நிலை பற்றி கிறிஸ்தோப்பர் வாசிற்கு அறிவித்ததாக மக்கள் கூறுவதுண்டு. அவர் தனது குடும்ப சம்பந்தமான விடயங்களை குறித்து வைக்கும் நாளேட்டிலிருந்து பின்வரும் பகுதி எடுக்கப்பட்டது. "1651ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 21ஆம் நாள் எனக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பிறந்த 8ஆம் நாள் திருமுழுக்கு அளிக்கப்பட்டு யோசேவ் என்னும் பெயர் சூட்டப்பட்டது. காலப்போக்கில் அவன் உயர் நிலையடைவான்".

யோசேவ் வாஸ் எல்லா நற்பண்புகளிலும் குறிப்பிடத்-தக்க மாணவனாக வளர்ச்சியடைந்தார். இவருக்குப் பின் மூன்று குழந்தைகள் பிறந்தாலும் யோசேவ்வாஸ் எல்லோராலும் அதிகம் விரும்பப்பட்டவராகவும், சிறிய உடலமைப்பைக் கொண்டவராகவும், மென்மையான உளப்பாங்குடன், அன்பு உள்ளங் கொண்டவராகவும் விளங்கினார். இவர் தம் வயதுக்கு அதிகமாகப் பக்தி முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராகவும், ஏழைகள் பால் மிகுந்த அன்பு கொண்டவராகவும் ஏனையோர் அறியாவண்ணம் பக்தியிலும், தான தர்மம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும் காணப்பட்டார். இவ்வாறான சிறப்பியல்புகள் பரிசுத்த தனத்தையும், புண்ணியத்தையும் மேலாக மதிக்கும் குடும்பங்களிலேயே பேணப்படுகின்றது. கிறிஸ்தோப்பர் வாஸ் கத்தோலிக்க சமயத்தில் ஊறிப்போன தனது பக்தியை செயலில் காட்டுகிற கத்தோலிக்கராக வாழ்ந்தார். தந்தைக்குரிய கடமை உணர்வில் பொறுப்புணர்வுடன் செயற்பட்டார். இவர்களுடைய வீட்டில் குறிக்கப்பட்ட நேரத்தில் ஞான வாசிப்பும், குடும்பச் செபமும் இடம்பெற்று

# ந்தூதரான புனித யோசேவ்வாஸ்
# வும் இலங்கை வருகையும்

வந்ததோடு பிள்ளைகளைக் கடவுள் பக்தியிலும் இறை அன்பிலும் வளர்ப்பதற்கு தாயும், தந்தையும் கடினமாக உழைத்தார்கள். கிறிஸ்தோப்பர் வாஸின் இருவிதவைச் சகோதரிகளும் இவருடைய குடும்பத்துடன் வாழ்ந்து வீட்டு வேலைகளில் மட்டுமல்லாது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும் உதவி செய்தார்கள்.

## 1.3.3 பிள்ளைப் பருவம்

யோசேவ்வாஸின் பிள்ளைப்பருவம் பற்றிய சில உண்மைகள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன என்று தம்முடைய “இலங்கை அப்போஸ்தலர் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் தியான சம்பிரதாய சபைக்குரு” எனும் நூலில் கூறும் பேராசிரியர் எல். எம். சேலஸ்கி சில தகலவ்களை எமக்கு தந்துள்ளார்.

“அவர் மேலான பக்திக்கும், அறிவிக்குமுரிய குணங்களைக் கொண்டிருந்தார் என்பது எமக்குத் தோன்றுகின்றது. அவரது நண்பர்கள் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளையில், அவர் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தனித்திருந்து நீண்ட நேரத்தைச் செபிப்பதில் செலவிடுவார்” பாயை நிலத்தில் விரித்து அதன்மேல் படுத்துறங்குவது இந்தியரின் வழக்கம். அவ்வாறே யோசேவ்வும் செய்தார். ஆனால் அவரது சகோதரர் தற்செயலாக இரவில் விழித்தெழுந்தால் அவர் தனது பாயில் முழந்தாளிட்டு ஆழ்ந்த செபத்தில் மூழ்கியிருப்பதை அவர்கள் அடிக்கடி காண்பதுண்டு. நாளாந்த திருப்பலிக்குச் செல்வார். அன்றியும் குருவானவர் நோயாளிகளுக்குத் தேவநற்கருணையை எடுத்துச் செல்லும் வேளையில் அவருடன் கூடச் செல்வதற்குத் தவறுவதில்லை.

மரண அடக்கச் சடங்குகளில் பங்குபற்றுவது அவரது பிரதான முயற்சிகளில் ஒன்றாக இருந்தது. மேலும் மாலை வேளைகளில் தனக்குத் தெரிந்தவர்களிடம் சென்று, இறந்தவர்களுக்காகச் செபிக்கும்படி கேட்டுக்கொள்வார். ஏழைகள் மேல் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். இதன் காரணமாகச் சில தடவைகளில் தனது பெற்றோர் அறியாமல் தனது இரா உணவை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார். கடவுளின் கருணை யோசேவ்வாஸின் வாழ்வில் மிகுதியாய் நிறைந்து காணப்பட்டது. “வனாலியிலே பிறந்த யோசேவ்வாஸ் அனாலியிலே வளர்ந்தார். உடற்கூறு, மனோதத்துவம் போன்ற நூல்களில் ஒப்பற்ற முன்னேற்றம் அண்மையிலேற்பட்டிருப்பது கண்கூடு. அவதானிகளின் ஆராய்ச்சிப்படி தாயின் கருப்பையிலே உதித்த சிசு அங்கு வாழும் ஒன்பது மாதத்துள்ளே தனது உடலுக்கும், பிறந்து ஐந்தாண்டுகட்கிடையில் அதன் உள்ளத்துக்கும் உரிமையான முழுப்பங்கையும் பெற்று விடுகிறது. இவைதான் பெரிய மனிதரில் வளர்ந்து வெளிப்படுகின்றன. இந்தப் பதிப்புக்களை முற்றாக அழிக்கவோ அவற்றிக்கு மாறானவற்றைப் புகுத்தவோ மனிதரால் முற்றும் முடியாது. பெற்றோரின் பண்புகள், குடும்ப சூழலின் முன்மாதிரிகள் பிள்ளைகளின் உள்ளத்திலாழப் பதிந்து பின்னர் பிரதிபலிப்பதால் இல்லமே நல்ல வாழ்வின் நாற்றங்கால் என்பது உண்மை. கடவுளின் கருணை யோசேவ்வாசின் மேல் இயற்கை நலன்களை நிறைய ஈந்து அவரை விசேட வழியிலே காப்பாற்றி வந்ததைக் காண்கின்றோம் என ம. பாவிலுப்பிள்ளை மா. ம. தி குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

யோசேவ்வாஸின் பெற்றோர் மதத்தின் ஆன்மீகத்தில் முழுமையாக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள். எனவே அவர்களுடைய மதப்பற்று சிறுவனாயிருந்த யோசேவ்வாஸின் மனதில் மதம் பற்றிய



ஆழமான விசுவாசத்தையும், பற்றுறுதியையும் வளர்த்தது. நேராக வளர்ந்து வேரூண்றிய மரம் வீசும் புயல் காற்றுக்கு அசையா நிற்பது போன்றே யோசேவ்வாசும் தன் வாழ்விலே வீசிய எதிர்ப்புக்களையும், சவால்களையும் நிலை தளம்பாமல் எதிர் கொள்வதற்கு அவர் தம் குடும்பத்தில் பெற்றிருந்த ஆழ்ந்த பற்றுறுதியே காரணம் என்றால் அது மிகையில்லை. கண்ணால் காணாத கடவுளைக் கண்டு அவருடன் அதிக நேரத்தினை உரையாடிக் களிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வாறு இவர் செபிக்கும் பழக்கத்தினால் ஆபத்து நேர்ந்த சந்தர்ப்பமும் உண்டு. ஒரு நாள் யோசேவ்வாஸ் கதவுக்குப் பின்னாலே சுவரருகில் முழந்தாட்படியிட்டு தியானத்தில் ஈடுபட்டிருந்த போது இதனை அறிந்திராத தந்தை கதவினை தீடிரெனத் திறந்தார். இடையில் அகப்பட்ட சிறுவன் நெரிந்து போனான். எனினும் தன்னுடைய வலியினைத் வெளிப்படுத்தவில்லை. இதனைக் கண்ட தந்தை வியந்தார். அதிசயித்தார். தன் மகனை கடவுள் காப்பாற்றியதற்காக நன்றி கூறினார். இப்பண்புகளைக் கண்டு அதிசயித்த அனைவரும் யோசேவ் வாஸ் மட்டில் அன்பும், பரிவும், மதிப்பும் பெருமையும் கொண்டனர். கடவுளோ பெருமிதம் கொண்டு மற்றவரை மதியாது போகாத வண்ணம் யோசேவ் வாஸினை கருணையோடு காப்பாற்றினார்.

சங்கோலைச் சேர்ந்த முதியவரான அன்ரனி காடோ சா என்பவர் சிறுவன் யோசேவ்வாஸினைக் காணும் போதெல்லாம் பின்வரும் வார்த்தைகளைக் கூறியதில் ஆச்சரியமில்லை. “ஓ சங்கோலே, நீ எவ்வளவு மதிப்புள்ள பொக்கிஷத்தை இப்பொழுது உன்னிடம் கொண்டுள்ளாய் என்பது உனக்குத் தெரியாது; ஆனால் ஒரு நாள் வரும். அப்பொழுது இறைவன் இவனது பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார் என்பது தெரியவரும்”. இவர் “புனித குழந்தை” என அழைக்கபட்டதிலும், எல்லோராலும் விரும்பப்பட்டதிலும் ஆச்சரியமில்லை. இறையன்பு மிகுந்தவராய் இருந்தார். வீட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளிலும் மேலாக யோசேவ் வாஸ் அன்பிற்குரியவராகவும், அறிவுக்கூர்மையுடையவராகவும் இருந்தார். கிறிஸ்தோப்பர் வாஸிடம் காணப்பட்ட ஆர்வத்தையும் ஆழ்ந்த நற்பண்புகளையும் யோசேவ் வாஸ் இயல்பாகவே பெற்றிருந்தார்.

## 1.3.3.1 செபஸ்ரியன் டொ றேகோவின் சான்று

செபஸ்ரியன் டொ றேகோவால் (Sebastian do Rego) கூறப்பட்ட வாஸ் அடிகளின் ஆரம்பகால வாழ்க்கைச் சம்பவங்கள் இங்கு இடம் பெறுவது பொருத்தமானது. செபஸ்ரியன் டொ றேகோ யோசேவ்வாஸின் ஊரைச் சேர்ந்தவர். அவருடைய பேரன் முறையானவர். அவருடைய வாழ்க்கை முறையை அதிகம் வியந்தவர். யோசேவ்வாஸ் அடிகள் இறந்து முப்பது ஆண்டுகளின் பின் அவருடைய சரிதையை எழுதியவர். யோசேவ்வாஸ் இலங்கையில் அடைந்த புகழ் பற்றிய செய்தி இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் பரவத் தொடங்கியதோடு, அவருடைய புனிதர் பட்டத்துக்கான விடயங்களைக் கவனிக்க கோவாவில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இன்றுவரை டொ றேகோ எழுதிய சரிதையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்று எதுவும் இல்லை. சரிதையை எழுதியவர் இலங்கைத் தீவில் விசுவாசத்துக்குப் புத்துயிர் அளித்த யோசேவ்வாஸ் அடிகள் வாழ்ந்து பணியாற்றி, இறந்ததைப்பற்றிய முழுமையான வரலாற்றுப் பின்னணியைப் போதுமான அளவு அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பது உண்மைதான். சிலவேளைகளில் அந்நாட்களில் நிலவிய இலகுவான தொடர்பாடல் இல்லாத நிலையாலும், கலாபனைகளாலும் வினைத்திறன், சாதுரியமான முறையில் ஆற்றிய சமயப் பணியின் பல்பரிமாணம் பற்றி அவர் முழுமையாக அறியமுடியாது இருந்திருக்கலாம். ஆனால் சந்தேகம் இல்லாமல் சரிதையை எழுதியவர் எம்மைவிட சிறந்த முறையில் யோசேவ்வாஸின் ஆரம்பகால வாழ்க்கை, அவருடைய குடும்பம் பற்றிய செய்திகள், பாடசாலை, கல்லூரி வாழ்க்கை என்பவற்றை ஆராய்ந்து அறிந்திருக்கின்றார். ஏனெனில் அவருடைய உறவினர்களும், அவருடன் வாழ்ந்தவர்களும் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள். டெ றேகோ என்பவரும் அதே சமூகத்திலும் சூழலிலும் வாழ்ந்தவர். அதே குடும்பப் பின்னணியில் பிறந்து வளர்ந்தவர். ஒரே குருத்துவக் கல்லூரியில் படித்துப் பயிற்சி பெற்றுக் குருவானார். மேலும் அருட்தந்தை யோசேவ்வாஸ் அங்கத்தவராகவிருந்த அதே ஒரற்றோரியன் (Oratorian) சபையில் அங்கத்தவராயிருந்தவர்.

எனவே சரிதையை எழுதியவர் இப்படியான நெருக்கமான உறவு முறையைக் கொண்டிருக்கும் போது கூடுதலான புகழ்ச்சிகளையும், உயர்ச்சிகளையும் எழுதுவதைத் தவிர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இருந்தும் அவர் இதை கோவா மக்களுக்கு எழுதிய போது கொங்கொணி மக்களின் வாழ்க்கை முறையை அறிந்திருந்ததாலும், யோசேவ்வாஸின் இரத்த உறவுகள் இன்னும் வாழ்ந்து கொண்டிருந்ததாலும், அவருடைய ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றிய ஆதராங்களைக் கொண்டே எழுதியிருப்பார் எனக் கொள்ளலாம். எனினும், சம்பவங்கள் பற்றி எழுதிய விதமும், முறையும் சிறப்பாய் அமைந்துள்ளன. பாரம்பரியத்தில், ஒரு புனிதரின் வரலாற்றில் அவரின் ஆரம்பகால வாழ்வியல் சம்பவங்கள் எதிர்காலத்தில் அவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அதிசயங்களாகவும், ஆச்சரியங்களாகவும் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை தற்கால வாசகர்கள் புரிந்து கொள்ள முடியும். எவ்வாறாயினும், இலங்கைத் திருத்தூதரின் முதிர் வயதில் இவரிடம் விளங்கிய எளிமை, புனிதம், தாழ்ச்சி என்னும் புண்ணியங்களுடன், செபத்திலும் ஏனைய நற்செயல்களிலும் கொண்டிருந்த பற்று என்பவற்றை நோக்கும் போது இயல்பிலே இவரிடமுள்ள இப்பண்புகளில் இறைவனின் அருள் செயல்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். இதனால் செபஸ்ரியன் டொ றேகோ இவரின் சிறுபிராயம் பற்றி விபரித்துள்ள விடயங்களில் அதிக வேறுபாடுகள் இல்லை எனத் தோன்றுகின்றது.

கிறிஸ்தோப்பர் வாஸ் தனது மகனின் எதிர்காலச் சாதனைகள் பற்றி சில எதிர்வுகளை கொண்டிருந்தார் என மேற்குறிப்பிட்ட வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார். யோசேவ்வாஸின் பிறப்பைப் பற்றி குறிப்புப் புத்தகத்தில் தெளிவற்ற விதத்தில், காலம் குறிப்பிடப்படாமல் ஒரு குறிப்பைக் கிறிஸ்தோப்பர் வாஸ் எழுதியிருந்தார். அவருடைய உயிரோட்டமான விசுவாச வாழ்வையும், அவருடைய ஆழ்ந்த பக்தியையும் நோக்கும்போது இது அவரது இயல்புக்குப் பொருத்தமில்லாதது, அவருடைய குறிப்புப் பின்வருமாறு அமைகின்றது. “21 சித்திரை 1651 ஆண்டு எனக்கு ஒரு மகன் பிறந்தார். பிறந்த எட்டாம் நாளில் யோசேப் என்னும் பெயருடன் அவருக்கு திருமுழுக்கு அளிக்கப்பட்டது. ஒரு நாள் அவர் சாதனை படைக்கும் மனிதராவார்”. இந்த சிறு குறிப்பின் நிச்சயமில்லாத முன்னறிவிப்பையும், எதிர்வுகூறலையும் சம்பவங்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, எழுதியவர் எண்ணியதிலும் மேலாக, இயல்பாகவே கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால் வரலாற்றாசிரியர் யோசேப், தன் தாயின் கருவிலிருக்கும் போது தந்தை கண்டது ஒரு கனவு எனவும், இது ஒரு சம்பவமே அல்ல எனவும் கூறுகின்றார். மேலும், அவர் அதை உறுதிப்படுத்தும் முகமாக அது நடுப் பகலில் வானில் காணப்பட்ட பிரகாசமான காட்சியால் உறுதிப்படுத்தப்பட்டது என்று கூறுகின்றார். இந்தக் கட்டம் கதையின் நம்பகத் தன்மையை கடினமாக்கி உள்ளது. அதாவது, முன்னைய எழுத்தாளர்கள் பிற்காலத்தில் புனிதராக புகழ் பெறும் ஒருவரைக் கண்டுபிடிக்க முடியுமெனக் கூறி நம்பகத் தன்மையைக் கடினமாக்கி உள்ளது. ஆனால் கோவாவில் கிடைக்கும் மிகத் திறமையான கல்வி அறிவை யோசேப்வாஸிற்குக் கொடுப்பதற்கு அவர் தந்தை பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்ய ஆயத்தமாய் இருந்தார். இதைக் காணும் பொழுது கிறிஸ்தோப்பர் வாஸ் தனது மகனின் எதிர் காலத்தைப் பற்றி சில எதிர்வு கூறல்களைக் கொண்டிருந்தாரானால், அதனால் நாம் குழப்பமடையத்தேவையில்லை.

வரலாற்றாசிரியரால் கூறப்படுகின்ற கதைகள் எல்லாம் சிறுவனுக்கு செபத்தின் மேல் இருந்த ஆர்வத்தையும், வறியவரின் மேல் கொண்டிருந்த பரிவையும், சிறுவன் செய்த மனிதநேயச் செயல்களையும்,....

**ஆக்கம் செல்வி. காமலின் தயானி டேவிட்**

15ம் பக்கம்

# புனித யோசேவ்வாஸைப் பின்பற்றி, நான் சிறிய புனிதராவேன்

1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி கிறிஸ்டோபர் வாஸ், மரியமிரண்டா என்பவர்களின் குடும்பத்தில் கோவா நகரிலுள்ள பெனுவாலிம் கிராமத்தில் பிறந்தார். ஆன்மீக வாழ்வில் சிறந்து, எளியோர்க்கு உதவியதால் 'சிறிய புனிதர்' என அழைக்கப்பட்டார்.



1687ல் கூலிவேடம் தரித்து, ஜோன் என்னும் இளைஞருடன் மன்னாரில் வந்திறங்கியமை, யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்னும் இடத்தில் மையமாக வைத்து பணியாற்றி, இலங்கை மக்களை இயேசுவின் அன்பால் போஷித்தமை.



1676ல் குருப்பட்டம், 35 வருடம் குருத்துவ வாழ்க்கை, அதில் 24 வருடம் (1687 - 1711) இலங்கையில் பணியாற்றல். 1711ல் தை மாதம் 16ல் அவரது 60 வயதில் இறையடி சேர்ந்தார். 1995ல் அருளாளர் நிலை, 2015ல் புனிதர் நிலைக்கும் உயர்த்தப்படல்



குடும்பத்தில் பெற்ற ஆன்மீக வழிகாட்டல்களினால் புனித செபவாழ்விலும், இறைபராமரிப்பினால் சிறந்த மதிப்பீடுகளுடனும் எளிமையான தூய வாழ்வு வாழ்ந்து அனைவருக்கும் முன்மாதிரிகையானார்.






## மன்னிப்பின் தத்துவங்கள்

- ❖ அது ஓர் இனிமையான இசைக் கருவி இசைக்க தெரிந்தவனுக்கு மட்டுமே சங்கீதம் கேட்கும்.
- ❖ அது ஓர் அருமையான கண்ணாடி கையாளத் தெரிந்தவனுக்கு மட்டுமே முகத்தைக் காட்டும்.
- ❖ அது ஓர் இனிமையான அனுபவம் வாழ்வை சுவைக்க தெரிந்தவர்களுக்கு மட்டுமே இனிமை தரும்.
- ❖ அது ஓர் அழகிய கோலம் புரிந்து கொள்ளாதவனுக்கு மட்டுமே சிக்கலாக தோன்றும்.

B. சந்திரரேனு, தரம் – 07

## கடவுளும் சமூகமும்

- ✘ இயேசுவின் ஒளியைக் காட்டாத வார்த்தைகள் இருட்டையே அதிகப்படுத்துகின்றன.
- ✘ புதுமை என்பது ஒரு செயலைச் செய்வதில்லை. அதை எவ்வளவு மகிழ்வோடு செய்கின்றோம் என்பதில் உள்ளது.
- ✘ பணிவை போன்றே முக்கியமானது ஏழ்மை வாழ்க்கை
- ✘ ஏழைகளுக்கு நாம் எவ்வளவு உதவியிருக்கின்றோம் என்பதன் வலிமை மண்ணகத்தில் தெரியாது விண்ணகத்தில் தான் தெரியவரும்.
- ✘ பணத்தை வைத்து பணக்காரர்கள் பெறும் அன்பை நான் ஏழ்மையை வைத்து ஏழைகளுக்கு கொடுக்க முயற்சி செய்கின்றேன்.

## பொது அறிவு

- ✖ இலவசக் கல்வியின் தந்தை யார்?
  C.W.W கன்னங்கர
- ✖ பறக்கும் பாலூட்டி எது?
  வௌவால்
- ✖ கூடு கட்டத் தெரியாத பறவை எது?
  குயில்
- ✖ சமாதானப் பறவை எது?
  புறா
- ✖ இலங்கையின் தேசிய மரம்?
  நாகமரம்
- ✖ திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உண்டு?
  133


நிகில் பர்னாந்து, தரம் - 07,
புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு - 13.


## நற்சிந்தனைகள்

- ❖ கால் தடுக்கி விழுந்தால் கைகளின் உதவிகளால் எழுப்பி விடலாம் நாம் தடுக்கி விழுந்தால் எழும்பவே முடியாது.
- ❖ உனக்கு பிறர் எதைச் செய்தால் நீ விரும்பமாட்டாயோ அதை பிறருக்கு செய்யாதே.
- ❖ பொய்யை விட உண்மை மிகவும் வலிமையானது. முயற்சி செய் இன்றே வெற்றி பெறுவாய்.
- ❖ உன்னை ஒருவர் தாழ்த்தி பேசும் போது ஊமையாய் இரு. உன்னை ஒருவர் புகழ்ந்து பேசும் போது செவிடனாய் இரு.

S. கனிஸ்கா, தரம் – 09

## வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்










குருக்கள்
திருத்தொண்டர்கள்
ஆயர்கள்
பங்குத்தலம்
மறைமாவட்டம்
அப்போஸ்தலர்
திருத்தந்தை
சங்கம்
பேதுரு
ரோம்
வத்திக்கான்
கர்தினால்
பொதுநிலையினர்
துறவறம்



## மத்தேய நற்செய்தி அறிவைப் பரீட்சித்துப் பார்

1. ஞானிகள் கீழ்த்திசையில், விண்மீன் எழுதலைக் கண்டு, யூதர்களின் அரசர் பிறந்துள்ளார் என அறிந்தமையால், வருகை தந்த இடம் (மத் 2:1-2)
   i. யெருசலேம் ii. பெத்லெகேம் iii. நாசரேத்தூர் iv. கப்பர்நகூம்
2. கிறிஸ்து எந்த நகரத்தில் பிறப்பாரென்று ஏரோதுவுக்கு முதலில் அறிவித்தவர் (மத் 2:1-8)
   i. ஞானிகள் ii. பாதுகாப்பு அதிகாரிகள்
   iii. மிக்கேயாஸ் iv. சூசை
3. புனித மத்தேயு நற்செய்தியில் குறிப்பிட்டவாறு, இயேசு பாலனைக் காணவந்த ஞானிகளின் தொகை எத்தனை? (மத் 2:1-12)
   i. இரண்டு ii. மூன்று iii. நான்கு iv. தொகை இல்லை
4. ஏரோது அரசன், பெத்லெகேமிலும், சுற்றுப்புறத்திலுமுள்ள குழந்தைகளைக் கொலைசெய்யக் கட்டளை பிறப்பிப்பதற்குச் சற்றுமுன், இயேசுவையும், மரியாளையும் கூட்டிக் கொண்டு சூசை எகிப்துக்கு ஓடியமை, இதற்கு உதவியது - (மத் 2:13-15, ஒசே 11:1)
   i. ஆண்டவர் வல்லமையுள்ளவர் என்பதை நிருபிக்க.
   ii. இஸ்ராயேல் மக்களுக்கு வரவிருக்கும் துன்பத்தினை முன்னிட்டு அவர்களை தயார் நிலையில் வைத்திருக்க
   iii. ஒசேயாவின் இறைவாக்கு நிறைவேற
   iv. பாரோன்மீது ஆண்டவருக்கிருந்த கோபம் தணிந்திருந்ததையுணர்த்த.
5. ஞானிகளைச் சந்தித்தபின்பு, ஏரோது அரசன் பெத்லெகேமிலும், அதன் சுற்றுப்-புறத்திலுமுள்ள இவர்களைக் கொலைசெய்ய உத்தரவிட்டான். (மத் 2:16)
   i. ஞானிகளை ii. மரியாள் சூசை என்னும் நாமம்கொண்ட பெற்றோரை
   iii. குழந்தைகளை iv.யூதர்களை

**மேற்குறிப்பிட்டவற்றுக்கு சரியான விடை எழுதி அனுப்பும் 10 பேரின் பெயர்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.**

தொடரும்...

## மாணவர் ஒளி

# எதை தேடுகின்றோம்?



வாசிப்பது எப்படி என்று தெரிகிறது. சரி, "எதற்காக வாசிக்க வேண்டும்? எதனைத் தேடுகிறோம்? வாசிப்பதால் என்ன சாதிக்கப் போகிறோம்?" என்ற கேள்விகளை நமது மாணவர்கள் எழும்புகிறார்கள்.

ஆசிரியர்களும், பெற்றோரும் "இந்தக் காலத்துப் பிள்ளைகள் வாசிப்பதே இல்லை. செய்தித்தாள்களைக் கூடத் தொட்டுப் பார்ப்பதில்லை" என்று அங்கலாய்க்கிறார்கள். இளைஞர் மத்தியில் வாசிக்கின்ற பழக்கம் இல்லை என்பது உண்மைதான்.

நீங்கள் ஏன் வாசிப்பதில்லை?

தொலைக்காட்சிகள் ஒருபுறம் இழுக்கின்றன. அரட்டை அடிப்பதற்கு நண்பர்கள் இன்னொருபுறம். இழுக்கிறார்கள். என்ன செய்வது? நமது முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையான நம்மைப் பின்னிழுக்கும் சக்திகளிலிருந்து நாம் விடுபட்டே ஆக வேண்டும். அப்போதுதான் வாசிக்க நேரம் கிடைக்கும், ஆர்வம் உண்டாகும்.

எதற்காகப் படிக்கிறோம்? செய்திகளைத் தெரிந்துகொள்ள, தேர்விற்கு, பொழுது போக்கிற்கு என்று மூன்று நோக்கங்களுக்காக வாசிக்கிறோம். செய்தித்தாளை எடுத்துக் கொண்டால் அதனைச் செய்தி சேகரிக்கவும், பொழுது போக்கவும் வாசிக்கலாம். சேகரிக்கும் செய்திகள் கூட பின்னர் பொது அறிவுத் தேர்வு எழுதப் பயன்படும். ஒரு சிறுகதையை அல்லது புதினத்தைப் பொழுதுபோக்கிற்காகப் பெரும்பாலும் படிக்கிறோம். மொழி, இலக்கியத் தேர்வுகளுக்காகவும் அவற்றை வாசிக்கின்றோம்.

இங்ஙனம் வாசிக்கும்போது நமது நோக்கத்திற்கு ஏற்ப நாம் வாசிக்கும் வேகத்தையும், யுத்தியையும் மாற்றிக் கொள்கிறோம். பொழுது போக்கிற்காக வாசிக்கும்போது வேகமாக வாசிப்போம். தேர்வுக்கென்று வாசிக்கும் போது மெதுவாக வாசிப்போம். அதுபோல ஒரு நூலை வாசிக்கும்போது அதிகாரத் தலைப்புகளைப் பார்ப்போம். அகர வரிசைப் பட்டியலைப் பார்த்து நமக்குத் தேவையான பகுதியைத் தேர்வோம். இதற்கு Scanning என்று பெயர். பிறகுதான் நாம் ஏற்கெனவே பார்த்து வாசிக்கும் யுத்தியைப் பயன்படுத்துவோம். படிக்கும் பகுதியைக் கடைந்து சிறப்பான செய்திகளைக் காண்போம். இதற்கு Skinning என்று பெயர்.

நாம் வாசிக்கும் நோக்கத்திற்கு ஏற்ப வேகத்தையும், யுத்தியையும் மாற்றிக் கொள்கிறோம். அதுபோல் வாசிக்கின்ற பகுதியை பொறுத்து அதனைப் புரிந்து கொள்ளும் முறையிலும் மாறுதல் தேவைப்படுகிறது. சில பகுதிகள் நேரடியான பொருளைத் தரும். இதனை Litera comprehension என்பார்கள். வேறு சில பகுதிகளில் உட்கிடக்கை என்ன என்று நாம் சிந்தித்தே புரிந்து கொள்ள முடியும். வெளிப்படையாகத் தெரியும் கருத்து ஒன்று; ஆழத்தில் இருப்பது - ஆசிரியர் சொல்லாமல் விட்டது வேறொன்று என்பதை உணர்ந்து நாம் சரியானப் பொருளை வரவழைக்கின்றோம். இதற்கு inferential comprehension என்று பெயர். அடுத்து, ஆசிரியரின் விருப்பு, வெறுப்பு, தொனி ஆகியவற்றை அலசுகின்றோம். ஆசிரியர் கேலியாகச் சொல்கிறாரா, பாராட்டுகின்றாரா என்று தெரிந்து கொள்ள முயல்கின்றோம். இது Critical comprehension எனப்படும்.

ஆனால் ஒன்று, அறிவைப் பெருக்கிக் கொள்ள எளிதான சிறந்த வழி வாசிப்பதுதான். நூல்களைப் படிக்கிறோம். மேலும் இணைய தளத்தில் எதை வேண்டுமென்றாலும் இறக்கி வாசிக்க முடியும். எனவே, இன்று அறிவு நமது கைக்கொட்டிய தூரத்தில், கை "மௌசின் கிளிக்"கில் வந்து சேர்கிறது. அறிவியல் தந்த இந்த அதிசயத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முதலில் வாசிப்பதற்கு மூன்று நோக்கங்களை மட்டுமே பார்த்தோம். இன்னொரு சிறப்பான நோக்கம் நம்மை மனிதராக ஆக்கிக் கொள்வது. வாசித்தல் நம்மை முழு மனிதனாக ஆக்கும். நல்ல நூல்களைத் தேர்ந்து வாசித்தல் எளிதில்லை. இன்றைக்கு நச்சு நூல்கள் எங்கும் பரவி இளைஞரைச் சீரழித்து விடுகின்றன. அவற்றில் சிக்கி விடாதீர்கள். நல்ல நண்பர்களைத் தேர்வது போலவே நல்ல நூல்களையும் தேடி வாசியுங்கள். "கல்வி கரையில, கற்பவர் நாள்சில" என்பார்கள். அதுவும் இன்றைய அறிவுவெடிப்புச் சூழலில் தேவையான நூல்களைத் தேர்வது கடினம். நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் வழிகாட்டுதலுடன் நூல்களைத் தேர்ந்து கொள்ள வேண்டும். பாடநூல்களைத் தவிர்த்து ஒவ்வொரு மாணவரும், மாணவியும் ஓராண்டில் இரண்டு நூல்களையாவது கசடறக் கற்க வேண்டும். இது உங்களது ஆளுமையை முழுமையாக்கும். உங்கள் ஆற்றலை மேலோங்கச் செய்யும்.

அண்மையில் மைய அரசுத் தேர்வில் (ஐ.ஏ.எஸ்) வெற்றி பெற்ற இளம் பெண்ணிடம் அவருடைய வெற்றியின் இரகசியம் என்ன என கேட்டார்கள். அவர் "வாசிப்பேன், நிறைய வாசிப்பேன், நல்ல நூல்களை வாசிப்பேன்" என்று விடை அளித்தார்.

எனவே, நூல்களைத் தேர்த்து வாசியுங்கள். வாசிக்கின்ற நோக்கம், நூலின் தன்மை, கிடைக்கும் நேரம் ஆகியவற்றைப் பொறுத்து யுத்தியையும் வேகத்தையும், மாற்றிக் கொள்ளுங்கள். வாசித்தபின் பயனை முழுமையாக அறிவீர்கள். வாசிப்பதில் மகிழ்ச்சி காணுங்கள். ஆளுமையைப் பேணி வளர்க்க அது உதவும்.

# உணர்ந்திடும் உணராமல் போனதை..





அன்பு! - அது
குழந்தை பிறந்தாச்சு என
அறிந்ததும் நீ
ஆணா? பெண்ணா?
எதுவானாலும் சரியென
குதூகலமான மனம்!
உனக்கென எதை
வாங்கினாலும் உலகிலே சிறந்ததை வாங்க
நினைக்கும் எண்ணம்!



அன்பு! - அது
மனது முழுக்க இனம்
புரியாத சந்தோஷம் - நீ
மழலை மொழியில்
அழைத்திடும் அந்த
நிமிடம்!
உந்தன் பிஞ்சுக் காலை
மெல்ல தூக்கி,
அந்த பஞ்சு போன்ற பாதத்தில்,
தன் முகத்தை தேய்த்திட்ட அந்த தருணம்!



அன்பு! - அது
நீ தூங்கும் போது,
தூங்காமல் உன்னையே
ரசித்த விழிகள்!
நீ சோம்பல் முறித்தாலும் -
கொட்டாவி விட்டாலும்,
அதுக் கூட அழகெனத்
தெரியும் அவ்விழிகளுக்கு
நீ தும்பினாலும் அங்கே
உள்ளம் பதறும்
நீ அழுதாலும் அங்கே
இதயம் கதறும்
நீ தவழ்வது - சுவரை
பிடித்து நடப்பது
இவையெல்லாம் மாபெரும் அதிசயமாம்!




அன்பு! - அது
உன் சிரித்த முகத்தை
நினைக்கும் போதெல்லாம்
தன் கஷ்டத்தை
மறக்கிறார்கள் - ஏன்?
உன் சிரிப்பினில்
தன்னையே கூட
மறக்கிறார்கள்!
நீ சற்று வளர்ந்து - சேட்டைகள் செய்யும்போது
உன்னை அடிக்கிறார்கள் திட்டுகிறார்கள்
பலர் முன்... பட்ட பகலிலே...
ஆனால் உனக்குத் தெரியுமா?
உன்னை அடித்த கரங்கள் தான்
உன் தலையை வருடிக் கொடுக்கும்
நடு இரவில்.. யாருக்கும் தெரியாமல்...
அவர் விரல்களை நீ
உன் விரல்களால் பற்றிக் கொள்ள
அவர் போகும் இடங்களுக்கு எல்லாம்
உன்னை அழைத்துச் செல்லுமாம்
உனக்கு எத்தனை வயதானாலும்!

**அன்பு! - அது**
**அம்மா - அப்பா தான்**
**சொல்லப் போனால்**
**அன்பு! - அது**

## 'அம்ப்பா'

- எல்லா மனிதர்களின் இதயமும் ஒரே மாதிரி, ஆனால் எண்ணங்கள் பல மாதிரி
- நேர்மையான செயல்கள் அனைத்துமே, நமக்கு இன்பமளிப்பவை, மற்ற யாவுமே துன்பம் தருபவை
- ஒரு கடமையிலிருந்து தவறுபவன் ஓர் ஆதாயத்தைத் தவிர்க்கின்றான்.

### பதவி :



தன் பதவிக்காக
கொடுக்கப்படும்
மரியாதை
தனக்காகத்தான்
கொடுக்கப்படுகின்றது என்று நினைத்துக்
கொள்பவன் மூடன்.

### பணம் :



பணம்
அறிவுள்ளவர்களிடம்
அடங்கி நடக்கும்
ஆனால் மூடர்களை
ஆதிக்கம் செலுத்தும்.

### சொல் :

மலையளவு சொல்லை
விட, கடுகளவு செயல்
எவ்வளவோ சிறந்தது.





### தியாகம் :

உயர்ந்த பண்பிற்கு
அடிப்படை சில்லரை
தியாகங்கள்.

- ஆயிரம் நூல்களிலிருந்து பெற முடியாத ஞானத்தை ஓர் அனுபவம் உணர்த்தும்.
- ஒரு மனிதனின் தீய பண்புகளை வெறுத்துவிடு, ஆனால் அம்மனிதரை வெறுக்காதே
- கடமையைச் செய்பவர்களுக்னே உரிமையைப் பெற அனுமதி உண்டு.
- நோக்கம் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது. அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையாக இருக்க வேண்டும்.




# லூத்தர் – புதுப்பிக்கும் முயற்சி, பிரிக்கும் முயற்சி அல்ல

500 ஆண்டுகளுக்கு முன், மார்ட்டின் லூத்தர் அவர்கள் மேற்கொண்ட சீர்திருத்த முயற்சி, திருச்சபையை புதுப்பிக்கும் ஒரு முயற்சியே அன்றி, அதனைப் பிரிக்கும் முயற்சி அல்ல என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு குழுவைச் சார்ந்த பிரதிநிதிகளிடம் கூறினார்.

தை, 18ம் திகதி முதல், 25ம் தேதி வரை நடைபெறும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் ஒரு செயல்பாடாக, பின்லாந்து நாட்டிலிருந்து, 19, வியாழன் காலை, வத்திக்கானுக்கு வருகை தந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்த திருத்தந்தை, கடந்த ஆண்டு ஐப்பசி மாதம், சுவீடன் நாட்டிற்கு தான் மேற்கொண்ட பயணத்தை மகிழ்வுடன் நினைவுக்கூர்ந்து பேசினார். உண்மையான கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது, நாம் அனைவருமே கிறிஸ்துவை நோக்கி மனமாற்றம் பெறுவதில் அடங்கியுள்ளது என்று கூறிய திருத்தந்தை, தூய ஆவியார் நமக்கு வழங்கும் மனமாற்ற அருளை பெறுவதற்கு, நாம் அனைவரும், திறந்த உள்ளத்துடன் காத்திருக்கவேண்டும் என்று எடுத்துரைத்தார்.

கடந்த 50 ஆண்டுகளாக கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும் ஒன்றிப்பை நோக்கி மேற்கொண்டுள்ள பயணத்திற்காக இறைவனுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளோம் என்பதை, திருத்தந்தை தன் உரையில் வலியுறுத்தினார். லூத்தரன் சீர்திருத்த இயக்கத்தின் 500ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், துன்புறும் அனைவருக்காகவும், குறிப்பாக, தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்காக துன்புறும் அனைவருக்காகவும், கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும் இணைந்து உழைப்பது என்று முடிவெடுத்திருப்பது போற்றுதற்குரியது என்று, திருத்தந்தை கூறினார்.

பின்லாந்து ஒரு தனி நாடாக மாறியதன் முதல் நூற்றாண்டை, 2017ம் ஆண்டு கொண்டாடும் வேளையில், அந்நாட்டின் கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு இன்னும் ஆழமான சாட்சிகளாக வாழும் அழைப்பை பெற்றுள்ளனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் உரையில் எடுத்துரைத்தார்.



# புனித பூமியில் இஸ்ரேல் அரசின் ஆக்ரமிப்பு பெரும் அநீதியானது



இஸ்ரேல் அரசு, பாலஸ்தீன நாட்டின் ஒரு சில பகுதிகளை கடந்த 50 ஆண்டளவாய் ஆக்ரமித்திருப்பது, இஸ்ரேல், பாலஸ்தீன மக்களின் மனித உரிமைக்கும் மாண்புக்கும் எதிரானது என்று, புனித பூமியில் தங்கள் திருப்பயணத்தை நிறைவு செய்த ஆயர்கள் குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

"புனித பூமி ஒருங்கிணைப்பு" என்ற பெயரில், புனித பூமியில் ஒவ்வோர் ஆண்டும் திருப்பயணம் மேற்கொண்டு வரும் பன்னாட்டு ஆயர்கள் குழுவொன்று, அண்மையில் தங்கள் பயணத்தை நிறைவு செய்த வேளையில், பாலஸ்தீன பகுதியில் இஸ்ரேல் அரசு ஆக்ரமித்திருப்பது பெரும் அநீதி என்று கூறியுள்ளது.

இந்த அநீதி 50 ஆண்டுகளாக நீடித்து வருவதால், இதன் தாக்கத்தை உணராமல் போகும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று "புனித பூமி ஒருங்கிணைப்பு" குழுவின் தலைவர், ஆயர் Declan Lang அவர்கள் கூறியுள்ளார். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களுடன் தங்கள் ஒன்றிப்பை வழங்குவது, இத்திருப்பயணத்தின் முக்கிய நோக்கம் என்று கூறிய ஆயர் Lang அவர்கள், இஸ்ரேல் அரசின் ஆக்கிரமிப்பை அகற்றுவது ஒன்றே இம்மக்களுக்கு அனைத்துலக சமுதாயம் செய்யக்கூடிய முக்கிய உதவி என்று எடுத்துரைத்தார்.

அண்மையில் பாலஸ்தீன நாட்டின் தூதரகம் வத்திக்கானில் நிறுவப்பட்டது, அந்நாட்டு மக்களுக்கு மிகுந்த ஆறுதலையும், உந்து சக்தியையும் வழங்கியுள்ளது என்று கூறிய ஆயர் Lang அவர்கள், தங்கள் பக்கம் நியாயம் உள்ளது என்பதை பாலஸ்தீனிய மக்கள் மேலும் உணர்வதற்கு, இது சிறந்ததொரு தருணம் என்று கூறினார்.



# கவனமுடன் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டுகோள், ஐ.நா.

மிகவும் கவனமுடன் தண்ணீரைப் பயன்படுத்துமாறும், வளரும் நாடுகளில் தண்ணீரின்றி துன்புறும் இலட்சக்கணக்கான சிறுதொழில் விவசாயிகளின் பாதுகாப்பைக் கருதி, தண்ணீர் ஆதாரங்களைப் பாதுகாக்குமாறும், உலகினரைக் கேட்டுக்கொண்டுள்ளது, ஐ.நா. நிறுவனம் ஒன்று.

FAO எனும், ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம், பெர்லினில் நடத்திவரும் ஆண்டுக் கூட்டத்தில் உரையாற்றிய, அந்நிறுவனத் தலைவர் José Graziano da Silva அவர்கள், ஐ.நா.வின், புதிய வளர்ச்சித் திட்ட இலக்குகளை எட்டுவதற்கு, தண்ணீர் பிரச்சனை பெரும் சவாலாக உள்ளது என்று கூறினார். மேலும், இலங்கையில், கடும் வறட்சியால், 2006ம் ஆண்டிலிருந்து, ஒன்பது இலட்சத்திற்கு மேற்பட்டோர் மிகவும் துன்புறுகின்றனர் என்று, உலக உணவு திட்ட அமைப்பின் அறிக்கை கூறுகிறது. இலங்கையின் 25 மாவட்டங்களில், 23, கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. இந்த அறிக்கை, இலங்கை அரசுத்தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க புதிய அரசுத்தலைவருக்கு திருத்தந்தை வாழ்த்து

அமெரிக்க ஐக்கிய நாட்டில், புதிய அரசுத் தலைவராகப் பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப் அவர்களுக்கு, இறைவன் ஞானத்தையும், வல்லமையையும் வழங்கவேண்டுமென்று தான் செபிப்பதாக, தன் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தை 20, வெள்ளியன்று, அமெரிக்க ஐக்கிய நாட்டின் 45வது அரசுத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள டிரம்ப் அவர்களுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், டிரம்ப் அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள், அமெரிக்க மக்களின் வரலாற்றை வடிவமைத்துள்ள, வளமையான, ஆன்மீக மற்றும் நன்னெறி விழுமியங்களால் வழிநடத்தப்படும், என்ற தனது நம்பிக்கையையும், குறிப்பிட்டுள்ளார்.


மனித சமுதாயம், கடும் மனிதாபிமான நெருக்கடிகளால் சூழ்ந்துள்ள இக்காலத்திற்கு, தொலைநோக்குப் பார்வையும், ஒன்றிணைந்த அரசியல் நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன எனவும், கூறியுள்ள திருத்தந்தை, ஏழைகள் மற்றும், நம் கதவுக்கு முன் நிற்கும் இலாசரைப் போன்ற தேவையில் இருப்போருக்கு, அரசுத்தலைவர் டிரம்ப் அவர்கள் தலைமையில், அமெரிக்கா தொடர்ந்து செயல்படும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்.

இன்னும், நியூயோர்க் கர்தினால் திமோத்தி டோலன் அவர்களும், அரசுத்தலைவர் டிரம்ப் அவர்களுக்கு, தனது நல்வாழ்த்தையும், செபங்களையும் தெரிவித்துள்ளார். மேலும், வெள்ளியன்று, அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணை அரசுத்தலைவராக, மைக் பென்ஸ் அவர்கள் பதவியேற்றுள்ளார்.

# இறையடியார் Trigolo பரிந்துரையால் நிகழ்ந்த புதுமை ஏற்பு

கப்புச்சின் துறவு சபையைச் சேர்ந்தவரும், மரியாவின் ஆறுதல் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவருமான இறையடியார் Arsenio da Trigolo (ஜுன் 13,1849 - டிச.10,1909) அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையை ஏற்றுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புனிதர் நிலை பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, இவ்வெள்ளி மாலை சந்தித்து, இப்புதுமை மற்றும் ஏழு இறையடியார்களின் வீரத்துவமான வாழ்வு குறித்த விபரங்களைச் சமர்ப்பித்தார். அருளாளர் நிலைக்கு உயர்த்துவதற்கு உதவும் இவ்விபரங்களை, திருத்தந்தையும் ஏற்றுக்கொண்டார்.



1887ம் ஆண்டு பிறந்து 1934ம் ஆண்டில் இறந்த மறைமாவட்ட அருள்பணி Raimondo Jardón Herrera; 1897ம் ஆண்டு பிறந்து, 1982ம் ஆண்டில் இறந்த மறைமாவட்ட அருள்பணி Giovanni Sáez Hurtado; 1880ம் ஆண்டு பிறந்து 1952ம் ஆண்டில் இறந்த பிரான்சிஸ்கன் சபையின் அருள்பணி Ignazio Beschin; 1909ம் ஆண்டு பிறந்து 1979ம் ஆண்டில் இறந்த சலேசிய சபை அருள்பணி Giuseppe Wech Vandor; 1898ம் ஆண்டு பிறந்து 1976ம் ஆண்டில் இறந்த சலேசிய சபை அருள்பணி Francesco Convertin; 1897ம் ஆண்டு பிறந்து 1981ம் ஆண்டில் இறந்த, திருஇதய சகோதரிகள் சபையை ஆரம்பித்த Santina Maria Addolorata; 1901ம்ஆண்டு பிறந்து 1947ம் ஆண்டில் இறந்த பொதுநிலை விசுவாசி Giovanni Tyranowski ஆகிய இறையடியார்களின் வீரத்துவமான வாழ்வு குறித்த விபரங்களை ஏற்றுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## நம்பிக்கையை பிறரிலும் உருவாக்க திருத்தந்தை அழைப்பு

"அஞ்சாதீர்கள், நான் உங்களோடு இருக்கிறேன்." நாம் வாழும் இக்காலத்தில் நம்பிக்கை, மற்றும் நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பு குறித்து அனைவரிடமும் பகிர்வோம்,

# இம்மாதப் புனிதர்கள்



## மாசி – 3
## புனித பிளாசியு

அர்மினியாவில் செபஸ்தே நகரில் பிறந்தவர். மறைசாட்சி, மருத்துவர், தத்துவம் பயின்றவர். பக்தியும் நற்குணமும் கொண்டவர். அந்நகரின் ஆயர் இறந்தபின் மக்களால் ஆயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய விழாவில் இரு மெழுகுவர்த்திகளை மந்திரித்து குருவானவர் மக்களின் தொண்டையில் X வடிவத்தில் வைத்து (தொண்டை வலிகள், புண்கள்) நோய்கள் அனைத்திலுமிருந்து புனித பிளாசியுசின் பரிந்துரையால் ஆண்டவர் உம்மைக் குணமாக்குவாராக" என செபித்து சிலுவை அடையாளம் வரைவது அவசியம்.

## மாசி – 5
## புனித அகத்தா
## கன்னியர் மறைசாட்சி



சிசிலி நாட்டில் உயர் குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதிலிருந்தே தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்து வாழ்ந்-ததால் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. ஆயினும் அந்நாட்டு ஆளுநன் குயிந்தானுஸ் ஆகத்தாவை தன்னை மணந்துக் கொள்ளும்படி வற்புறுத்தினான். புனிதை அதற்கு சம்மதிக்கவில்லை. அவர் மீது பொய்யாக விபச்சார வழக்குத் தொடுத்து சிறையிலடைத்தான். பலவிதமான சித்திர வதைகளுக்கு புனிதையை உட்படுத்தினான். அவள் அனுபவித்த கொடுமையினால் சிறையிலேயே மரணத்தை தழுவினாள். மரண வேளையிலும் புனிதை செபித்துக் கொண்டே இறந்தாள்.

## புனித ஸ்கொலஸ்திகா – 480 – 548 – மாசி 10



இத்தாலியர் மோன்தே கார்லோலில் துறவற சபை நிறுவிய புனித பெனடிக்ட்டின் சகோதரி, பெண்களுக்கான துறவற சபையை தன் சகோதரரின் சபைக்கு, 5 மைல் தொலைவில் உள்ள புளோமி பிரியோலாவில் நிறுவினார். தன் சகோதரரை ஆண்டுக்கு ஒருமுறை சந்திப்பார்.

பெனடிக்கும் அவரை சந்திக்க மற்ற சகோதரர்களுடன் வருவார். சகோதரியின் மடத்தில் இரவு தங்க மாட்டார். ஒரு முறை புனிதையை பெனடிக்ட் சந்தித்தபோது அதுதான் தனது இறுதி சந்திப்பு என்பதை உணர்ந்து அன்று இரவில் தன் மடத்தில் தங்கக் கூறினாள். பெனடிக்ட் மறுத்த போதிலும் அப்போது பெய்த அடை மழையால் அவரும் அவருடன் வந்த சகோதரர்களும் மடத்தில் தங்கினார்கள். அன்று இரவு புனிதையும், பெனடிக்டும், செபிப்பதிலும், ஆன்மீக உரையாடலிலும், செலவழித்தனர். பின்பு 3ஆம் நாள் கழித்து ஸ்கொலஸ்திகா இறந்தபோது, அவரது ஆன்மா புறாவைப்போல விண்ணிற்குப் பறந்து செல்வதை புனித பெனடிக்ட் தான் இருந்த இடத்திலேயே காட்சியாகக் கண்டார். உடனே சென்று அவர் ஸ்கொலஸ்திகாவின் உடலைத்தனது மடத்திற்கு எடுத்து வந்து அங்கேயே அடக்கம் செய்தார்.

## மாசி – 12
## புனித ரெஜினோல்ட்

இவர் ஒரு இத்தாலியர் தாமஸ் அக்குவீனாசின் நண்பர். தாமஸ் அக்குவீனாஸ் நேப்பிளஸில் கல்லிப் பணியாற்றிய உபோது ரெஜினால்டும் அவருடன் இருந்து அவரை கவனித்துக் கொண்டார். அவரது இறுதிப் பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டார் அவரது அடக்க சடங்கிலும், கலந்து கொண்டவர். புனித அக்குவீனாசுக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டபோது புனித ரெஜினோல்டின் சாட்சிகளே பெருமளவில் உறுதியாக இருந்தன.

# புனித வலன்டின் (Velantine day) – மாசி 14



நமக்கு மிகவும் பிடித்தமான விழாக்களில் ஒன்றுதான் வலன்டைன் நாள். (Velentine Day) இந்த நாளில் ஒருவருக்கொருவர் மீது கொண்டுள்ள அன்பையும், கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பையும் கொண்டாடும் நாள். இந்த நாளை சிலர் குடும்ப நாளாக, திருமண நாளாக, சகோதரர் நாளாக, உறவினர் நாளாக, ஆசிரியர் நாளாக, பெற்றோர் நாளாக தாம் அன்பு செய்யும் ஒவ்வொருவரையும் நினைத்து கொண்டாடும் நாள். இந்த நாளில், தன் அன்பை வெளிப்படுத்தும் விதமாக பலவகை பரிசு பெருட்களை கொடுத்து மகிழ்கின்றார்கள். புனித வலன்டைன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம். திருவிவிலியத்தில் யோவான் 15:13 "தம் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை"

நாம் இவ்வாறு வாசிக்கின்றோம். இதைத்தான் புனித வலன்டைன் தன் வாழ்வில் செய்தார். இவர் கி.பி 270ஆம் ஆண்டில் உரோமைக்குப் பக்கத்தில் ஒரு குருவாக இருந்தார். அந்த நேரத்தில் உரோமை தெய்வங்களை வழிபடாததற்காக கிறிஸ்தவர்களை உரோமை பேரரசன் சிறையில் அடைத்தான். இந்த வேதகலாபனையின் போது தான் புனித வலன்டைன் கைது செய்யப்பட்டார். கிறிஸ்தவ திருமணங்களை ஏற்பாடு செய்ததால் தான் இவர் கைது செய்யப்பட்டார் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனாலும் வேறு சிலர் சிறையிலிருந்து கிறிஸ்தவர்களை தப்பிப்போக இவர் உதவி செய்ததால் கைது செய்யப்பட்டார் என்றும் கூறுகின்றனர். விசாரணையின்போது அவர்கள் வலன்டைனிடம் உரோமை தெய்வங்களான ஜீப்பிட்டரையும், மெர்குறியையும் பற்றி அவர் என்ன நினைப்பதாக கேட்டனர். அதற்கு வலன்டைன் அவர்கள் பொய் தெய்வங்கள் என்றும் இயேசுவால் அப்பா தந்தையே என்று அழைக்கப்பட்ட கடவுள் மட்டும் தான் உண்மையான கடவுள் என்றும் கூறினார். எனவே தெய்வங்களை இகழ்ந்து பேசியதற்காக உரோமையர்கள் அவரை சிறையில் அடைத்தனர்.

சிறையிலிருந்த வலன்டைன் தனது பணியைத் தொடர்ந்தார். அவர் எம்மாவு காவலர்களுக்கு சாட்சிய வாழ்வு வாழ்ந்து காட்டினார். காவலர்களில் பார்வையற்ற ஒரு சிறுமியை தத்தெடுத்திருந்த ஒரு நல்ல மனிதர் இருந்தார். அவர் வலன்டைன்னிடம் உமது கடவுளால் எனது மகளுக்கு உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார். வலன்டைன் செபித்ததும் சிறுமி பார்வை பெற்றுக்கொண்டாள். அந்த காவலரும், அவரது குடும்பமும், 46 பேரும் இயேசுவில் நம்பிக்கை வைத்து திருமுழுக்குப் பெற்றனர். இந்த மக்கள் இயேசுவை அறிந்து கொண்டவர்களாக சிறைச்சாலையில் இருந்து கொண்டே வலன்டைன் மதமாற்றம் செய்ததால் கடுங்கோபம் கொண்டு வலன்டைனின் தலையை வெட்டச் செய்தார்.

அவரது கிறிஸ்தவ செயல்பாடுகள் அவரைக் காட்டிக் கொடுத்தது என்று வலன்டைனுக்கு தெரியும். நீதி மன்றத்தில் உரோமை தெய்வங்களைப் பற்றிய உண்மையை கூறினால் சிறையில் அடைக்கப்படுவார் என்பதும் அவருக்குத் தெரியும். சிறையில் தொடர்ந்து கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தால், அது தலைவர்களுக்கு கோபத்தை உண்டு பண்ணும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆகவே, சிறைக் கைதிகளை விடுதலை செய்ய அவரது உயிரையும் கொடுக்க முன் வந்தார். இதுதான் வலன்டைனின் நாளில் சிறப்பான ஒரு செயல். உயிரைக் கொடுப்பது அல்ல. அன்புக்காக பிறர் வாழத் தன்னையே தியாகம் செய்யக்கூடிய நல்ல உள்ளங்கள் கொண்டாடும் விழா இந்த நாள். இந்த நிகழ்வைத் தான் இயேசு செய்தார். உலகில் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வு பெறும் பொருட்டு. நம் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். இதன் வழியாக அவரது அன்பை கடவுள் நமக்குகாட்டியுள்ளார். புனித வலன்டைன் தனது நண்பர்களுக்கா இறந்த போது தன் அன்பை நிரூபித்திருக்கிறார். இப்படிப்பட்ட அன்புக்கு கொண்டாடும் நாள் தான் உண்மையான வலன்டைன் நாள் Valentine Day.

**சிந்தனை :** நம் அன்பை யாரில் விதைக்கிறோம் (மத் 13:18-23)
"அன்பு என்னும் விதையை நல்ல விதமாக விதைத்து நல்ல உறவுகளை அறுவடை செய்வோம்.

# வாழ்வா?... மருத்துவமா?...

எதை வைத்துப் பணம் பண்ணலாம்?

- ☆ திறமை இருந்தால் எதை வைத்தும் பணம் பண்ணலாம்.
- ☆ நமக்கெல்லாம் நன்றாகத் தெரிந்த விஷயங்களை நம்மிடமே திரும்பச் சொல்லிப் பணம் பண்ணுபவர்கள் இருக்கிறார்கள்?
- ☆ நல்ல வாழ்க்கை முறைகள் நமக்குத் தெரியும்! அதையே மருத்துவ முறை என்று அறிமுகப்படுத்தி பணம் பண்ணுகிறார்கள்!
- ☆ வாசமான மலர்கள் மனதுக்கு இதமாக இருக்கும்! இது நமக்குத் தெரிந்ததுதான்!
- ☆ ஆனால் இதுவே மலர் மருத்துவம் என்று விற்பனையாகிறது! அதிலும் இங்கிலாந்து மலர் மருத்துவம் ரொம்பவும் சிறந்ததாம்!
- ☆ நல்ல இசை நம்மை இதமாக வருடிக்கொடுக்கும்! தெரிந்ததுதான்!
- ☆ இதை வைத்து இப்போது ஏகப்பட்ட இசை மருத்துவர்கள்! ஒரு குறிப்பிட்ட தாளமுடைய இசையைக் கேட்டால் எல்லா நோயும் போய்விடுமாம்! நல்ல சி.டி கேசட் விற்பனை!
- ☆ அமைதியான தியானம் நல்லது. இது மூவாயிரம் வருடத்து உண்மை!
- ☆ ஆனால் இப்போது வகை வகையாகத் தியான வகுப்புகள்! வகை வகையாய்க் கட்டணங்கள்!
- ☆ சில எளிய யோகாசனப் பயிற்சிகளை நாமே செய்து பயன்பெறலாம்!
- ☆ ஆனால் இன்று யோகாசனப் பயிற்சி வகுப்புகள் வகை வகையாய்ப் பெருகிவிட்டன.
- ☆ புதுப்புது பெயர்களில் யோகாசனங்கள் வேறு! நடன யோகாசனம்! சிரிப்பு யோகாசனம்! புதிது புதிதாகப் பணம் பண்ணும் உத்திகள்
- ☆ சிரித்து மகிழ்ச்சியாக வாழ்ந்தால் உடலுக்கு நல்ல என்று உங்களுக்கு தெரியாதா?
- ☆ இப்போது சிரிப்பு மருத்துவம் மிகவும் வேகமாகப் பரவி வருகிறதாம்! ஏகப்பட்ட வசூலாம்.
- ☆ அடுத்த முறை நீங்கள் பேசும்போது யாராவது சிரித்துவிட்டால் சும்மா விடாதீர்கள்.
- ☆ நீங்கள் செய்த சிரிப்பு மருத்துவதற்கு ஒரு வசூல் பண்ணிவிடுங்கள். சரிதானா?

# தோலகட்டி தோமஸ் அடிகளாரின் 53வது இறப்பின் ஆண்டு

இறைவன் மேலான காரியங்களை நிறைவேற்ற சக்தியற்றவர்களை, தாழ்மையானவர்களை தேர்ந்து-கொள்கின்றார். இறைவன் காலத்திற்குக் காலம் தனது சிறப்பான பணிகளை நிறைவேற்ற ஆண்கள், பெண்கள் என்று மனிதர்களைத் தேர்ந்தெடுக்கிறார் என்பதற்கு திருவிவிலியமும் அனைத்து சமயங்களும் சான்று பகர்கின்றது. அப்படியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஒருவர் வண.டீ.யு.தோமஸ் அமதி அடிகளார்.

கடந்த 26ம் திகதி (26.01.2017) அன்று வண.தோமஸ் அடிகளார் இவ்வுலகை விட்டு இறையடி சேர்ந்த 53வது ஆண்டின் நினைவு நாளாகும். அன்றைய தினம் இல.05, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்கு சிறப்புக் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இங்குள்ள அவரின் கல்லறையில் ஆசீர் நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும் இலங்கை, இந்தியா, கனடா நாடுகளிலிருக்கும் எல்லா செபமாலைத்தாசர் ஆச்சிரம-ங்களிலும், செபமாலைக் கன்னியர் மடங்களிலும், யாழ் புனித மரியாள் பேராலயம், யாழ். அடைக்கல அன்னை ஆலயம், யாழ். புனித யுவானியார் ஆலயம், பாண்டியன்தாழ்வு, பாசையூர், குருநகர், நாவாந்துறை, நாரந்தனை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை இன்னும் பல ஆலயங்களில் வண.தோமஸ் அடிகளாரின் புனிதப்பட்ட கருத்துகளுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. அவரின் புனிதப்பட்டத்திற்கான ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நல்முறையில் நடைபெற்று விரைவிலேயே அவர் ஒரு புனிதராக வர வேண்டும் என்று அனைவரும் இறைவனிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

இலங்கை நாட்டில் நம் மத்தியில் பிறந்து, வளர்ந்து பணியாற்றி இறந்த ஒருவருக்கு புனிதப்பட்ட ஆய்வுகள் உரோமாபுரியில் நடைபெறுகின்றதென்றால் அது இறைவனுடைய ஒரு பெரிய கொடை. நமக்கும் ஒரு பெருமகிழ்ச்சி. தோமஸ் அடிகளார் யாழ்ப்பாண நகரிலுள்ள பாண்டியன்தாழ்வு என்னும் இடத்தில் மார்ச் மாதம் 7ம் திகதி பிறந்தார். ஆரம்பக்கல்வியை புனித சாள்ஸ் பாடசாலையிலும் மேற்படிப்பை புனித பத்திரிசியார் கல்லூ ரியிலும் முடித்துக்கொண்டார். 1904ம் ஆண்டு ஒரு மதகுருவாக வந்து இறைவனுக்கும் மக்கள் அனைவருக்கும் பணியாற்ற வேண்டும் என்ற ஆவலில் யாழ் புனித மாட்டீனார் குருமடத்தில் சேர்ந்தார். தனது நவத்துறவுப் பயிற்சிகளையும், மெய்யியல், இறையியல் படிப்புகளையும் கொழும்பு மாநகரில் கற்றுத் தேறியபின் 1912ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் அன்றைய ஆயர் யூலன், அமதி அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், இந்து மாணவரின் விடுதிப்பொறுப்பாளருமாக பணியாற்றினார். 1926ம் ஆண்டில் அன்றைய திருத்தந்தை 11ம் பத்திநாதர் திருச்சபையின் வழிபாட்டுப் பணியில் தியான மார்க்கத்தைப் புகுத்தும்படி ஆயர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோளைக் கண்டதும் ஆயர் அவர்கள் தோமஸ் அடிகளாரை அழைத்து இதைப்பற்றிக்கூறி நமது யாழ் மறைமாவட்டத்தில் இத்தகைய ஒரு தியான யோக துறவு சபையை நிறுவ வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கமைய ஆண்டகையின் ஆசீருடனும், ஆதரவுடனும் பலாலிக்கு அருகே உள்ள வசாவிளானில் தோலகட்டி என்னும் இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த புனித அந்தோனியார் ஆலயத்தில் 02.02.1928ல் ஓர் ஆச்சிரமத்தைத் தொடங்கி அதில் சில துறவிகளுடன் தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தார். செபத்தினால் எதையும்



சாதிக்கலாம் என்பதில் அவர் நம்பிக்கை உடையவராக இருந்தார். அதனால் அங்கு இரவு பகலாக இடைவிடாது செபம் செபிக்கப்பட்டு வந்தது. அந்த நிலையிலும் கற்களும், முட்களும் நிறைந்த காட்டுப் பிரதேசமான அந்த இடத்தில் பூஞ்செடிகள், உயர்ந்த மரங்கள் மற்றும் பலவித தாவரங்களை உண்டாக்கி அதை ஒரு கண்ணுக்கினிய சோலையாக மாற்றி வந்தார். மேலும் துறவியர் மௌன விரதத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். வேலை செய்யும்பொழுது கூட ஒருவர் மற்றவர்களுடன் பேசமாட்டார்கள். அதேபோல் உழைப்பிலும் கடுமையாக ஈடுபட்டு வந்தனர். சாதிக்கொடுமைகளிலிருந்து மக்களை விடுவித்து சுதந்திர வாழ்வுக்கு சமூகங்களை வழிநடாத்தினார். ஏழைகளுக்கும், அங்கவீனர்களுக்கும் வேலைவாய்ப்புக் கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார். இன்று இச்சபையினர் ஆண்களுக்கு 25 ஆச்சிரமங்கள் இலங்கை, இந்தியா, கனடாவிலும் உள்ளது. பெண்களுக்கு 17 கன்னியர் மடங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ளன.

**அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.தா**
**புனிதப்பட்ட ஊக்குவிப்பாளர்**
**செபமாலைத்தாசர் துறவு சபை**

## புனித செபஸ்தியார் திருவிழா 2017





கொழும்பு புதுக்கடைப்பங்கு புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருநாளின் நவநாட்கள் கடந்த 13.01.2017 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, திருச்செபமாலை பிரார்த்தனையுடன் திருப்பலியும் நடைபெற்றன. ஒவ்வொரு நவநாளையும் எட்டு வட்டார மக்களும் பங்கு சபையினருடன் சேர்ந்து நடத்தினர். 6ஆம் நாளை அருட்பணி இக்னேசியஸ் அடிகளார் சில திரைப்படக் காட்சிகளுடன் சிறப்பாக நடாத்தினார். ஏழாம் நாள் பாவசங்கீர்த்தன நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. 21ஆம் திகதி மாலை ஆராதனையானது கண்டி கிளேரிசியன் குருமட அதிபரான அருட்பணி மரியா அருள் அடிகளாரும், கிளேரிசியன் சபை முதல்வர் அருள்பணி ரெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் அடிகளாரும், இணைந்து நடத்தினர். ஆராதனை முடிவில் புனிதரின் திருச்சுரூப பவனி வீதிகளுடாக வலம் வந்தது. 22ஆம் திகதி ஞாயிறன்று திருப்பலி காலை 6.30 மணிக்கும் சிறப்புத்திருப்பலி காலை 8.30 மணிக்கும் இருமொழிகளிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.



1954ஆம் ஆண்டு தொடர்ச்சியாக நடைபெறும் வெண்ணப்புவ பெசிலிக்கா அன்னை சங்கத்தினால் 33வது தடவையாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிரிப்பு மற்றும் நன்றி நவிழல் திருப்பலியானது இம்முறையும் 2017ஆம் ஆண்டு ஜனவரி 02ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் ஓய்வு பெற்ற ஆண்டகை ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையின் தலைமையில் தேவத்தை இலங்கை அன்னை தேசிய பெசிலிக்காவில் நடைபெற்றது. அதன் ஒரு காட்சியை படத்தில் காணலாம்

**தகவல் மற்றும் படம் : திரு கல்தேரா**

## அருட்திரு தமிழ் நேசன் அடிகளாருக்கு சிறப்புக் கௌரவம்



யாழ் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி கௌரவிப்பு விழா ஒன்று இடம்பெற்றது. கடந்த ஜனவரி 22ஆம் திகதி (ஞாயிற்றக் கிழமை) மாலை 4.00 மணிக்கு யாழ் நல்லூரில் இவ்விழா இடம்பெற்றது. இவ்விழாவின்போது ஓய்வுநிலை அதிபர் திரு. வே. ஞானகாந்தன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்வின் ஆசியுரையை அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை நிகழ்த்தினார். இவ்விழாவின் போது அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரும், ஓய்வுநிலை அதிபர் திரு. ஞானகாந்தன் அவர்களும் பல்வேறு பெரியோர்களினால் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.


இந்நிகழ்வின் வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கே. பாலசுந் -தரம்பிள்ளை, யாழ் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும் கவிஞருமான சோ. பத்மநாதன், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளரும் பண்டிதருமான கலாநிதி எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கினர்.

இன்னும் பண்டிதர் கடம்பேஸ்வரன், எழுத்தாளர் கே. ஆர். டேவிட், யாழ் கத்தோலிக்க இலக்கியக் கழகத் தலைவர் எழுத்தாளர் திரு. யோசப் பாலா, எழுத்தாளர் பீற்றர் அபீர், குருநகர் கலைஞர் திரு. கிறிஸ்தோப்பர் என நூற்றுக்கும் அதிகமான கலை இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், பல்துறை சார்ந்த பெரியோர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்தக் கௌரவிப்பு விழாவை யாழ் இலக்கிய வட்டத்தின் செயலாளர் நயினை கிருபா அவர்கள் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

**எண்டேரமுள்ள புனித செபஸ்தியார் ஆலய திருவிழா**

தொடர்ச்சி 15





## 01 மனித வாழ்வு...

ஷமேலும் தனது உரையில் கர்தினால் ஆண்டகை, கருக்கலைப்பு, விபச்சாரம் மற்றும் ஓரினச் சேர்க்கை ஆகியவற்றுக்கு சட்டத்தினை இலகுவாக்குதல் தொடர்பான செய்தியை எம்மால் அறிய முடிகிறது. ஐரோப்பா நாடுகளில் கலாச்சாரமானது எமது நாட்டிற்கு பொருத்தமற்றது என்பதோடு 2500 வருடங்கள் அதிகமான எமது நாட்டிற்கே உரிய கலாச்சாரப் பண்பாடுகள் எம்மோடு இணைந்துள்ளது. மேலை நாட்டுட்டுக்கு உரிய கலாச்சாரங்களை எமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தி எமது நாட்டை சீரழிக்க வேண்டாமென தற்போதைய அரசிடம், அரசியல்வாதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

கொழும்பு உயர் மறைமாவட்ட குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் இயக்குனர் இந்நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தார்.

**படம் மற்றும் தகவல் :** T. சுனில்

## 01 திருப்பாலர் மறைபரப்பு...

உலகளாவிய ரீதியில் திருப்பாலத்துவ சபை தினம் 2017ஆம் ஆண்டு தை மாதம் 29ஆம் திகதி கொண்டாடப்பட்டது. கொழும்பு உயர் மறை-மாவட்டத்தின், களுத்துறை மறைக்கோட்டத்தில், களமுல்லை புனித செபஸ்தியாரின் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவோடு, திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தை கொண்டாடும் தி ருப்பலியும், பாப்பிறை மறைபரப்புச் சபை தேசிய இயக்குனர் அருட்பணி. பெசில் ரொகான் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் அப்பங்கைச் சேர்ந்த திருப்பாலத்துவ சபை சிறார்கள் மற்றும் ஊக்குனர்கள் இயேசுவின் அன்பை உலகிற்கு எடுத்துரைப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

இயேசுவின் அன்பின் கதையைச் சொல்ல வாருங்கள் நண்பர்களே" என்ற கூற்றுக்கு இணங்க இச்சிறார்களும் ஊக்குனர்களும் இவ்வருட திருப்பாலர் தினத்தை அர்த்தமுள்ளதாக்கினர், இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை கட்டியெழுப்ப பெரும் பாடுபட்ட புனித யோசேவ்வாஸைப் போல் இயேசுவின் மறையை பரப்ப அர்ப்பணிக்கப்படுக்கும் அனைத்து மறைப்பரப்பாளர்களையும் இறைவன் என்றும் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்.

## 01 திருப்பாலத்துவ சபை...

தமிழ் மொழியில் அருட்தந்தை சாந்திகுமார் அடிகளார், ஒவ்வொரு ஊக்குவிப்பாளர்களின் வளர்ச்சி தொடரவும் அனைத்து சிறுவர்களை இயேசுவிடம் கூட்டிச்செல்லும் உன்னத பணியை வலியுறுத்தியும் மறையுரையாற்றினார்கள்.

இம்மறையுரைகளின் பின்னர் இந்நிகழ்விற்கு வருகை தந்த கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள், வாத்திய இசை முழங்க, சிங்கள முறைப்படி வெற்றிலை கொடுத்தும், தமிழ் முறைப்படி ஆரத்தி எடுக்கப்பட்டும் வரவேற்கப்பட்டார் அத்தோடு குருமுதல்வர் அருட்தந்தை அன்டனி பர்னாந்துபுள்ளே அடிகளார், குருமுதல்வர் வண. அருட்தந்தை மனோகுமாரன் நாகட்ரணம் அடிகளார், திருப்பாலத்துவ சபை தேசிய இயக்குனர் அருட்தந்தை பெசில் ரொகான் அடிகளார், ஓய்வு பெற்ற திருப்பாலர் மறைபரப்பு சபையின் தேசிய இயக்குனர் அருட்தந்தை ரெஜினோல்ட் சபரமாது அடிகளார், திருப்பாலத்துவ சபைக்காக அயராது உழைத்துவரும் அருட்தந்தையர்கள் பலரும் வரவேற்கப்பட்டனர்.

பின்பு வரவேற்பு நடனத்தை சகோதரரி மொழியைச் சார்ந்த ஊக்குவிப்பாளர்கள் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து கொழும்பு உயர் மறைமாவட்ட திருபாலத்துவ மறைப்பு சபையின் இயக்குனர் அருட்பணி பிரடி சாந்திகுமார் வரவேற்புரையை நிகழ்த்தினார். பின்பு அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை திருப்பாலத்துவ சபை ஆரம்பித்த வரலாற்றை இனிமையான நினைவுகள் மலர எடுத்துரைக்க அதனை, குருமுதல்வர் அருட்தந்தை மனோகுமாரன் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து எமது இலக்கு அனைத்து சிறுவர்களையும் ஆன்மீக வழியில் அழைத்துக்கொண்டு இயேசுவிடம் செல்லும் பணியே என்பதை கூறி அனைத்து ஊக்குவிப்பாளர்களும் தொடர்ந்து ஆர்வத்துடன் இப்பணியில் ஈடுபட்டு "சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுகள், அவர்களைத் தடுக்காதீர்கள்" என்று கோபத்துடன் தம் சீடர்களைப் பார்த்து கூறிய வார்த்தைகள் எடுத்துரைத்து, சிறு பிள்ளைகள் இயேசுவிடம் செல்ல எற்படும் தடைகளை தகர்த்து முன்னேறி செல்ல உதவி கரம் நீட்டும் ஊக்குவிப்பாளர்களாக எமது வாழ்வை அர்பபணிக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

பின்பு திருப்பாலத்துவ சபை தேசிய இயக்குனர் பெசில் றொகான் அடிகளார் அசைந்தாடும் பாடல் பாடி ஊக்குவிப்பாளர்களையும் அதில் பங்கேற்கப் பண்ணி மகிழ்த்தார். பின்பு மதிய உணவு வழங்கப்பட்டதோடு தொடர்ந்து பேராயர் அவர்கள் எம்மிடம் இருந்து விடைபெற்று சென்றபின்னர் தமிழ், சிங்கள மொழிகளில் நடனம் நாடகங்கள் இடம்பெற்று நிகழ்வுகன் இனிதே நிறைவு பெற்றன.

## XIX உள்ளத்தை தொடும்

18:22 இதைக் கேட்ட இயேசு அவரிடம், "உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார்.

18:23 இவற்றைக் கேட்டு அவர் மிகவும் வருத்தமுற்றார். ஏனெனில் அவர் மிகுந்த செல்வம் உடையவராய் இருந்தார்.

18:24 அவர் மிகவும் வருத்தமுற்றதைப் பார்த்த இயேசு, "செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது எவ்வளவு கடினம்!

18:25 செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

## 06 பண்பாடு பற்றிய...

தமிழில் உள்ள உலகப்பொதுமறை எனப் புகழப்படும் திருக்குறளை வீரமாமுனிவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களை ஜி. யு. போப் போன்ற கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் மொழிபெயர்த்தனர். தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்-தையும் அதன் சிறப்பையும் உலகம் அறியச் செய்வதில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் பணி காத்திரமானதாகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் கிறிஸ்தவத்தின் பல்துறை சார்ந்த பங்களிப்பு பலராலும் மெச்சிப் போற்றப்படுகின்றது. தமிழில் புத்தம் புதிய இலக்கியத் தோற்றங்களுக்கும் இலக்கிய வகைகளுக்கும் கிறிஸ்த-வர்கள் வழிகோலினர். தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் கல்விப் பெருக்கமும், அச்சு இயந்திரங்களும் மேலைநாட்டார் வரவால், துணையால் வளரவும், வளம் பெறவும் தொடங்கின. தற்கால உரைநடை, புதினம், சிறுகதை, அகராதி, மொழிபெயர்ப்பு, அச்சுக்கலை, இதழியல் போன்ற பலவும் மேலைநாட்டுக் கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்களால் தமிழுக்கு அறிமுகமாகி வளர்ந்து தமிழைச் செழிக்கச் செய்தன.

### பொங்கல் விழா நன்றியின் விழா

தைப்பொங்கல் பண்டைக் காலம் முதல் தமிழர்-களால் கொண்டாடப்பட்டு வந்த விழா. இது உழவர் திருநாளாக, நன்றியின் விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இன்று இந்த விழா சமயங்கள் கடந்த விழாவாக, தமிழ் மக்கள் அனைவராலும் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணே உண்டு கழித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று உழவுத் தொழிலின் மகத்துவத்தை எடுத்துக் காட்டினான் மகாகவி பாரதி. "உழைக்காதவன் உண்ணலாகாது" என்று பைபிளில் புனித பவுல் கூறுகின்றார்.

ஒரு உழவன் சொல்வதாக ஒரு புதுக்கவிதை இப்படிக் கூறுகின்றது:

"நாங்கள் சேற்றுக்குள் கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றுக்குள் கைவைக்க முடியாது"

ஆகவே நன்றியின் விழாவாகிய இந்தப் பொங்கல் விழா நமக்கு சில தெளிவுகளைத் தருவதாக! இயேசு வரலாற்று மனிதராக ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் பிறந்து ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசினார். நாம் சார்ந்துள்ள பண்பாட்டை, மொழியை நான் அன்பு செய்வதைப்போன்று மற்றவர்களுடைய பண்பாட்டையும் மொழியையும் நாம் மதித்து வாழ்வோம். உழைப்பின் மேன்மையை எடுத்துக் கூறும் இப்பொங்கல் விழா நன்றியின் விழா. எனவே வாழ்வு என்ற கொடைக்காக, நமது ஆற்றல் திறமைகளுக்காக, நாம் பெற்றுக்கொண்டுள்ள வாய்ப்பு வசதிகளுக்காக, இன்னும் அனைத்து நன்மைகளுக்காகவும் இன்றும் என்றும் இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

**தகவல் : அருட்திரு. தமிழ நேசன் அடிகளார்**

## 14 எண்டேரமுள்ள ...

புனித செபஸ்தியார் இறைவனிடத்தில் கொண்டிருந்த உறுதியான விசுவாசத்தையும், தியாகத்தையும் நமதாக்கிக் கொள்வோம் என்னும் கருப்பொருளில் எண்டேரமுள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தில் 2017ஆம் ஆண்டு 126வது நடைபெற்ற வருடாந்த திருவிழா திருப்பலி பங்குத்தந்தை அருட்பணி. பிரசன்ன ரொஹான் அடிகளாரின், அழைப்பின் பேரில் வருகை தந்த அருட்தந்தை லால் புஷ்பதேவ அடிகளாரின் தலைமையில் விசுவாசிகள் பங்களிப்போடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.01.2017) சிறப்பாக நடைபெற்றது. திருவிழா திருப்பலியின் பின்னர் புனித செபஸ்தியார் திருச்சுரூப பவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

**படம் மற்றும் தகவல் :** H.A. கல்தேரா



## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் R.C 1978இல் பிறந்த கொழும்பில் வேலைபார்க்கும் (Assistant Menager) மகனிற்கு படித்த அழகிய மணமகளை தாயார் எதிர்பார்க்கின்றார். (A0445)
தொடர்புகளுக்கு : 0711464748 / 0715662387

## 09 இலங்கையின்....

இந்நற்செயல்களைச் செய்யும்போது மற்றவர்கள் தன்னை அவதானிக்காமல் இருக்க அவர் எடுத்த கவனமான முயற்சிகளையும், அதன் விளைவாக அவருக்குக் கிடைத்த புகழ்ச்சியையும் பற்றியதாக இருக்கின்றது. இவை அனைத்தும் வெளிப்படையான உண்மையாகத் தெரிகின்றது. உணவு வேளையில் இரப்போர் யாராவது வாசலில் வந்து நின்றால் சின்ன யோசேப் தனது உணவின் ஒரு பகுதியை யாரும் கவனியாவண்ணம் அந்த இரப்போனுக்குக் கொடுத்துவிடுவான். சிறுவன் யோசேப்வாஸ் வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் செபம் செய்வதில் ஆர்வம் உடையவராகவும், தனது செபத்திற்காகத் தனிமையான இடத்தில் ஓய்ந்திருப்பதும் அவரது வழக்கமாக இருந்தது. இரவில் நித்திரைக்காக பொது அறையில் அவரது சகோதரர்களைப் போல் தரையில் பாயில் படுப்பார். செபத்தில் மிகுந்த ஆர்வமுடையவரான யோசேப் மற்றவர்கள் ஆழ்ந்து தூங்கும் வரை காத்திருந்து மற்றவர்கள் அவதானிக்காத வண்ணம் முழங்காலிலிருந்து நீண்ட நேரம் செபிப்பதுண்டு. அதேபோல் காலையிலும் மற்றவர்கள் எழுந்து குளித்துச் சத்தம் செய்யச் செல்லும்போது இவர் பாயிலேயே நீண்ட நேரம் காத்திருந்து மற்றவர்கள் பார்வைக்குத் தென்படாத வண்ணம் செபிப்பார். இதனால் உண்மைக் காரணம் தெரியவரும் வரைக்கும் இயல்பாகவே இவர் ஒரு சோம்பேறியாகக் கருதப்பட்டார். ஒருநாள் அறைக்கதவு திறந்த நிலையில் அறையின் மூலையில் இவர் செபம் செய்துகொண்டிருந்தபோது இவரது தந்தை இவர் இருப்பது தெரியாமல் படார் எனக் கதவை அகலமாகத் திறந்தபோது யோசேப் சுவருடன் நெரிக்கப்பட்டார். அதனால் ஏற்பட்ட நோவை சிறிது கூட வெளிக்காட்டாமல் சாதுரியமாக நோவைத்தாங்கி நிலமையைச் சமாளித்துக்கொண்டார்.

தொடரும்

## 03 இலங்கை அன்னையின்

யுத்தம் நடந்த நாடு அதனால் பாதிக்கப்பட்ட மக்கள், வறுமைப் பிடியில் வாழ்வோர், பொருளாதார வீழ்ச்சி என்று கூறி அன்பையும், பாசத்தையும் கருணையையும் வெளிப்படுத்துவதாக காட்டி இன்னும் கடன் உள்ள நாடாகவே நம் நாட்டை மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு எமது நாட்டுக்கு சொந்தமான வளங்களில் வெளிநாட்டு செல்வாக்குகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் எமது நாட்டு மக்கள் சுதந்திரம் கிடைத்தும் பல வழிகளில் அடிமையானவர்களாகவே வாழுகின்றனர்.

**செயற்கரிய செய்வார், பெரியார், சிறியார், செயற்கரிய செய்கலா தளர்'**

செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய வல்லவர் பெரியவர், செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய முடியாதவர்கள், சிறியோர். அன்று ஒரே நோக்கத்திற்காக ஒன்றாக இணைந்து போராடிப் பெற்ற சுதந்திரம் இன்று சுயநலமாய் ஒவ்வொருவரும் பல நோக்கத்திற்காக பயன்படுத்துகிறார்கள்.

எமது இலங்கை நாடு ஒரு வளமான, செழிப்பான, அழகான ஒரு சிறிய நாடு என்பதை நாம் அறிவோம். எம் நாட்டை வர்ணித்து பாடிய பாடலை நாம் கேட்டிருப்போம். இலங்கை என்பது நம் தாய்த்திருநாடு இந்த அழகிய நாடானது 2ஆம் உலகப்போரின்போது காப்பாற்றப்பட்டது. எமக்கு தெரிந்த விடயமே. எனினும் 2ஆம் உலகப் போரின் போது, இலங்கைத் தாய்திருநாட்டை பாதுகாத்தால் மரியன்னைக்கு ஒரு பசிலிக்கா எழுப்புவதாக அப்போதைய பேராயர் ஜோன் மரி மசோன் வேண்டிக் கொண்டார். 1946ஆம் ஆண்டு அவர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க இலங்கை தாய்த் திருநாடும் காப்பாற்றப்பட்டது. அன்னை மரிக்கு ஒரு பசிலிக்கா எழுப்புவதற்கு திருத்தந்தை 12ஆம் பயசிடம் இருந்து அனுமதியும் கிடைத்தது. றாகமை தேவத்தையிலுள்ள இலங்கை அன்னை பசிலிக்கா 1973ஆம் ஆண்டு சிறிய பசிலிக்காவாக இருந்தது. 1974ஆம் ஆண்டு மாசி மாதம் 6ஆம் திகதி அப்போதைய பேராயர் கர்தினால் குரே ஆண்டகையினால் பெரிய ஆலயம் கட்டுவதற்கான தீர்மானம் கருவிலுக்கு கொண்டு வரப்பட்டது. அப்போது பேராயர் மேரி மசோன் ஆண்டகையின் வேண்டுகோளும் நிறைவு பெற்றது. இலங்கை அன்னை எம்மை நாள்தோறும் பாதுகாத்து பராமரித்து வருகின்றார். இன்று எம் தாய்த்திருநாடு 69வது சுதந்திர தினத்தை கொண்டாடி மகிழ்கின்றது என்றால், அது எம் இலங்கை அன்னையின் பராமரிப்பும், பரிந்துரையுமே, "இந்து சமுத்திரத்தின் முத்து" என அழைக்கப்படும் நம் தாய்த்திரு நாடு பல்லின சமய, இன,மொழி சூழல், வளங்கள் கொண்ட நாடாக இருக்கின்றது. "தேசிய மக்கள்" என்ற நிலையை கடந்து மனிதனுக்கு அருளிய இறைவனின் துணையாளும், அன்னையின் பரிந்துரையாலும் இன்றளவும் நாம் வழிநடத்துப்படுவது நாம் பெற்ற பாக்கியமே. மனிதன் தன் சுதந்திரத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். பிரஞ்சு தத்துவ ஞானி சுதந்திர தினம் என்பது பிறப்புரிமை என்று கூறுகின்றார். அத்தகைய பிறப்புரிமையை பெற்றுக்கொண்ட நாங்கள் இன, மத, மொழி பேதமின்றி எம் நாட்டில் மகிழ்வுடன் வாழ வேண்டும். இதையே நம் இறைவனும் நம் அன்னையும் எதிர்பார்க்கின்றார்கள். இலங்கை அன்னையின் தொடர்ந்த பாதுகாப்பை பெற்று மகிழும் நாம் அவர்களுக்கென எழுப்பப்பட்டுள்ள ஆலயத்தில் நன்றி கூறும் மக்களாக எமது தொடர் சிந்தனைகளை எழுப்ப வேண்டும். இத்தனை காலமும் எம்மை வழிநடத்தி வந்துள்ள எம் அன்னை தொடர்ந்து வரும் காலங்களிலும் எம்மை வழிநடத்த வேண்டும் என வரம் கேட்போம்.

**ஆக்கம்**
**கோதரர் டிலொய்ஸ்டன் பர்னாந்து**




# தினமும் இத கொஞ்சம் சாப்பிட்டா, பாதிக்கப்பட்ட கல்லீரல் மீண்டும் புதுப்பிக்கப்படும் என்பது தெரியுமா?

உடலில் கல்லீரல் மிகவும் பெரிய சுரப்பி. இந்த கல்லீரல் பாதிக்கப்பட்டால், அது ஒட்டுமொத்த உடலையும் மோசமாக்கிவிடும். அதிலும் கல்லீரலில் கொழுப்புக்கள் அதிகம் சேர்ந்துள்ளது என்று மருத்துவர் சோதித்து கூறிவிட்டால், நம்மில் பலரும் இறக்கப் போகிறோம் என்று தான் நினைப்போம். ஆனால் அது தான் இல்லை. இந்த கொழுப்பு கல்லீரலை நீக்க ஏராளமான இயற்கை வழிகள் உள்ளன.

முக்கியமாக கொழுப்பு கல்லீரல் மது அருந்து-வதால் மட்டுமின்றி, உடல் பருமனாலும் ஏற்படும். இப்பிரச்சனையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால், கல்லீரல் செயலிழப்பு ஏற்படுவதோடு, கல்லீரல் புற்றுநோய் கூட ஏற்படும் வாய்ப்புள்ளது.

### பழங்கள்

கல்லீரல் பிரச்சனைகளை சரிசெய்ய ஏராளமான பழங்கள் உள்ளன. ஆனால் நம்மில் பலருக்கும் அந்த பழங்களின் மகிமை தெரியாமல் தவிர்த்துவிடுவோம். சில நேரங்களில் நம்மை அறியாமல் சாப்பிடும் சில பழச்சாறுகளும், பல தீவிர பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கும்.

### புளி

கல்லீரலில் உள்ள கொழுப்புக்களைக் கரைக்க சமையலுக்கு பயன்படுத்தும் புளி உதவும். கல்லீரல் பிரச்சனைகளுக்கு புளி மட்டுமின்றி, அதன் இலைகளும் நல்ல நிவாரணத்தை வழங்கும்.

### புளியின் நன்மைகள்

புளி உடலை சுத்தம் செய்வதோடு, செரிமானத்திற்கு உதவும். மேலும் இதில் உள்ள நார்ச்சத்து மற்றும் அமிலங்கள், கல்லீரலுக்கு பாதுகாப்பு அளிக்கும், பித்தநீர் பிரச்சனைகளை சரிசெய்யும் மற்றும் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கும். இப்போது இந்த புளியை எப்படியெல்லாம் பயன்படுத்தினால் கல்லீரல் பிரச்சனைகளில் இருந்து விடுபட்டு, கல்லீரலைப் புதுப்பிக்கலாம் என்று காண்போம்.

### ரெசிபி –1

**தேவையான பொருட்கள்:**

புளி - 2 கையளவு தண்ணீர் - 1 லிட்டர்

**செய்முறை:**

நீரில் புளியை நன்கு ஊற வைத்து, கையால் பிசைந்து வடிகட்டி, தேன் சேர்த்து கலந்து, தினமும் சிறிது உட்கொண்டால், கல்லீரல் பிரச்சனைகள் அகலும்.

### ரெசிபி – 2

**தேவையான பொருட்கள்:**

புளியம் மர இலைகள் - 25 தண்ணீர் - 1 லிட்டர்



**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி நன்கு கொதிக்க ஆரம்பித்ததும், அதில் இலைகளை சேர்த்து சிறிது நேரம் கொதிக்க வைத்து இறக்கி, 1.'.2 மணிநேரம் கழித்து வடிகட்டி, இனிப்பு வேண்டுமானால் அத்துடன் தேன் அல்லது நாட்டுச்சர்க்கரை சேர்த்து குடிக்கலாம். ஆனால் எவ்வித இனிப்பும் சேர்க்காமல் குடிப்பதே சிறந்தது.

# பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு




- குழந்தைகளில் காய்ச்சல் ஒரு நோய் அல்ல. அது உடலில் ஏற்பட்டிருக்கும் தொற்று நோய் அல்லது நோயெதிர்ப்பு சக்தியை குறைக்கும் நிலையினை உணர்த்தும் தற்காப்பு ஆயுதம்.
- குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டுவிட்டால் பெற்றோர்கள் பதறக்கூடாது.
- உடனே காய்ச்சலை இயல்பு நிலைக்கு கொண்டு வர மருந்துகளை மணிக்கு ஒரு முறை கொடுக்கக்கூடாது.
- சாதாரணமாக உடலின் வெப்பம் 97 முதல் 99 .'.பேரன்ஹீட் எனும் அளவு இருக்கக்கூடும். இதனின்று அதிகமாக இருந்தால் தான் காய்ச்சல் என்று கொள்ளவேண்டும்.
- காய்ச்சலை அளப்பது எப்படி என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். காய்ச்சலை அளக்க பல்வேறு வெப்பமானிகள் உள்ளன. அவற்றைப்பற்றி பெற்றோர்கள் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- வெப்பமானிகளின் வகைகள் கண்ணாடியால் ஆன பாதரச வெப்பாமானி, மின்னணு வெப்பமானி, நாடா வெப்பமானி, குத வெப்பமானி ஆகும்.
- கண்ணாடியால் ஆன பாதரச வெப்பமானியை வாயிலும், அக்குளிலும் வைத்து வெப்பத்தை அளக்கலாம்.
- மின்னணு வெப்பமானியையும் வாயிலும் அக்குளிலும் வைத்து வெப்பத்தை அளக்கலாம்.
- நாடா வெப்பமானியை முன்னந்தலையில் வைத்து உடல் வெப்பத்தை அளக்கலாம்.
- குத வெப்பமானியை குதத்தில் வைத்து உடல் வெப்பத்தை அளக்க வேண்டும். குதத்தில் எடுக்கப்படும் உடல் வெப்பம் துல்லியமானதாகும்.
- சரியான அக்குள் வெப்பத்தை அளக்க வெப்பமானியின் நுனியை அக்குளில் வைக்க வேண்டும். முழங்கையை மார்போடு சேர்த்து இரண்டிலிருந்து மூன்று நிமிடங்களுக்கு வைத்திருக்க வேண்டும். பின்னர், வெப்பமானியை எடுத்து உடல் வெப்பத்தைப் பார்க்க வேண்டும்.
- வாயில் வைத்துப் பார்க்கக்கூடிய கண்ணாடி வெப்பமானியை 5 வயதுக்கு குறைவாக இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு வாயில் வைத்து பார்ப்பது நல்லதல்ல. ஏனெனில் அஜாக்கிரதையின் காரணமாக குழந்தை அதை மென்றுவிட்டால் அது உடைந்து கண்ணாடி துகள்கள் வாயினுள் சென்றுவிடும்.
- குதத்தில் எடுக்கப்படும் வெப்பம் வாயில் எடுக்கப்படும் வெப்பத்தைவிட மதிப்பில் 1 டிகிரி அதிகமாயிருக்கும்.
- காய்ச்சலைக் குறைக்க “பேரசிட்டமால்” மருந்தினையோ “பனடோல்” மருந்தினையோ உபயோகித்தல் நல்லது.
- குழந்தைகளுக்கு ஆஸ்பிரின் மருந்தினைத் தவிர்ப்பது நல்லது.
- ?ஒரு மருந்தினை கொடுக்க ஆரம்பித்தால் அதே மருந்தினை தொடர்ந்து கொடுக்க வேண்டும்.
- அதாவது “பேரசிட்டமால்” மருந்தினைக் கொடுத்தால் அதனையே 4 மணிக்கொரு முறை மத்துவர் பரிந்துரைக்கும் அளவு கொடுப்பது நல்லது. இல்லையெனில் “பனடோல்” மருந்தினை ஆறு மணிக்கொரு முறை கொடுக்கலாம். மருந்தினை மாற்றி மாற்றி அதாவது ஓரிரு வேளைக்கு ஒரு மருந்தினையும், அடுத்து மற்றொரு மருந்தினையும் கொடுக்கக்கூடாது.
- காய்ச்சல் அதிகமாக இருக்கும்போது குழந்தையின் துணிகளை எல்லாம் எடுத்துவிட்டு வெதுவெதுப்பான தண்ணீரில் ஒரு துண்டினை நனைத்து அத்துண்டினை குழந்தையின் உடம்பின் மீது போட்டு போட்டு எடுக்கவேண்டும். அவ்வாறு இருபது முப்பது நிமிடங்கள் செய்தால் காய்ச்சல் குறைந்துவிடும்.

நன்றி இணையத்தளம்

# மொறுமொறுப்பான... ரவா கட்லெட்



மாலையில் எப்போது பஜ்ஜி, போண்டா சாப்பிட்டு அலுத்துவிட்டதா? அப்படியெனில் இன்று சற்று வித்தியாசமாக ரவையைக் கொண்டு கட்லெட் செய்து சாப்பிடுங்கள். இது காபி, டீ குடிக்கும் போது சாப்பிடுவதற்கு ஏற்றவாறு அற்புதமாக இருக்கும். மேலும் அனைவரும் விரும்பி சாப்பிடும் வண்ணம் இருக்கும். சரி, இப்போது அந்த ரவா கட்லெட் ரெசிபியை எப்படி செய்வதென்று பார்ப்போம். அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்:**

ரவை - 1/2 கப், ஸ்வீட் கார்ன் - 1/4 கப், குடைமிளகாய் - 1/4, கப், பச்சை மிளகாய் - 1, வெங்காயம் - 1/4 கப், கொத்தமல்லி - 2 டேபிள் ஸ்பூன், பிரட் தூள் - சிறிது, மைதா - சிறிது, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு, தண்ணீர் - 1 கப்

**செய்முறை:**

முதலில் ஒரு நாண்ஸ்டிக் தவாவை அடுப்பில் வைத்து சூடேற்றி, பின் அதில் 1 கப் தண்ணீர் ஊற்றி, ரவை, குடைமிளகாய், ஸ்வீட் கார்ன், பச்சை மிளகாய், வெங்காயம், கொத்தமல்லி, சிறிது உப்பு மற்றும் 1 டீஸ்பூன் எண்ணெய் சேர்த்து, 2-3 நிமிடம் தண்ணீர் வற்றும் வரை கிளறி விட்டு இறக்க வேண்டும். பின்னர் மைதாவை தண்ணீர் சேர்த்து சற்று ஓரளவு தண்ணீர் போல கலந்து கொள்ள வேண்டும். பின்பு கையில் எண்ணெயை தடவிக் கொண்டு, ரவா கலவையை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து, உங்களுக்கு பிடித்த வடிவில் தட்டி ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும். பின் தட்டி வைத்துள்ளதை ஒவ்வொன்றாக எடுத்து, மைதாவில் நனைத்து, பிரட் தூளில் பிரட்டி, பின் ஒருமுறை மீண்டும் தட்டி, தனியாக ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும். இறுதியில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், தட்டி வைத்துள்ளதை எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்தால், ரவா கட்லெட் ரெடி!!!

# தூய லூர்து அன்னை விழா




அன்னை மரியாவுக்கு திருச்சபை எடுக்கும் விழாக்களில் சில மறையுண்மைகளை அடிப்படையாகவும், சில வரலாற்று நிகழ்வுகளைப் பின்புலமாகவும் கொண்டிருக்கும் அவ்விழாவிற்குச் சூட்டப்படும் பெயரும், மீட்பின் வரலாற்று மறைபொருளை வெளிப்படுத்துவதாகவோ அல்லது வரலாற்று நிகழ்வுகள் நடந்த இடத்தைச் சுட்டிக் காட்டுவதாகவோ இருக்கும்.

உதாரணமாக :

"கன்னிமரியா, இறைவனின் தாய்" என்று தை முதலாம் திகதி நாம் எடுக்கும் விழா ஒரு மறையுண்மையின் அடிப்படையில் அமைந்தது. மாசி 11ம் திகதி எடுக்கும் விழா அன்னை மரியா காட்சி அளித்த இடத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. எனவே, இது தூய லூர்து அன்னை விழா என்று அழைக்கப்படுகின்றது.

1854ம் ஆண்டு 9ம் பியுஸ் என்ற திருத்தந்தை "இறை அன்னை அமல உற்பவி, பாவ மாசு எதுவுமின்றி உற்பவித்தவள்" என்ற நம்பிக்கை கோட்பாட்டைப் பிரகடனம் செய்தார். இந்த உண்மையை 1858ம் ஆண்டு பங்குனி 25ம் நாள் மூன்றாம் முறையாக லூர்து நகரில் சிறுமிக்கு காட்சி கொடுத்த போது தனது பெயரை "நாமே அமல உற்பவம்" என்று மரியாள் உறுதிப்படுத்தினார்.

அன்னை மரியா காட்சி கொடுக்கும் போதெல்லாம் செபம் செய்து, தவம் முயற்சிகள் மேற்கொள்ளும் படியாகவும், பாவிகள் மனம் திரும்ப மன்றாடவும் கேட்டுக் கொண்டார். அத்தோடு தேவதாய் கடைசியாக காட்சி கொடுத்த போது தனக்கு அவ்விடத்தில் ஆலயம் கட்டப்பட வேண்டும் என்றும் மக்கள் அவ்விடத்திற்கு பவனியாக வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க அவ்விடத்தில் சிறிய ஆலயம் கட்டப்பட்டது. அதன் அருகில் பீறிட்டு வரும் நீர் ஊற்றும் அருவியும் இருக்கிறது. இங்கு பல நோயாளிகள் வந்து குளிப்போரும், அந்நீரை பருகுவோரும் உடல் உள நோய்களில் இருந்து குணம் பெற்று செல்கின்றனர். ஒரு வருடத்தில் 10 இலட்சம் மக்கள் இத்திருத்தலத்திற்கு வந்து போவதாகக் கணிக்கப்படுகிறது. அங்கு சென்ற மக்கள் ஆயிரக்கணக்கான புதுமைகள் நடைபெறுவதாகவும் பலதரப்பட்ட கொடிய நோய்கள் நீங்குவதாகவும், மருத்துவர்களால் முற்றிலும் கைவிடப்பட்டவர்களுக்கு அவர்கள் கண்முன்னே குணம் கிடைத்ததாகவும் பல பாவிகளும் மனம் திரும்புகிறார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

ஆகவே, நாமும் தூய்மை வாழ்வு வாழ செபம், தவ வழிகளில் ஈடுபட்டு சிறு சிறு தியாகங்கள் செய்து அன்னை மரியாவுக்கு ஏற்ற வாழ்க்கையை வாழ தினம் செபமாலை ஓதுவோம்.

# முறையான, திருமண அருளடையாளத் தயாரிப்புகள் அவசியம்



நாம் வாழும் இக்காலத்தில், திருமணம் செய்து வாழ்வதற்கு, துணிச்சல் மிகவும் தேவைப்படுவதால், திருமண வாழ்வில் நுழையும் இளம் தம்பதியருடன், அன்பு மற்றும் பிற, தெளிவான செயல்கள் வழியாக, திருஅவை, எப்போதும் மிக நெருக்கமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ரோமன் ரோட்டா எனப்படும், கத்தோலிக்கத் திருஅவையின் திருமணம் சார்ந்த உச்ச நீதிமன்றத்தின் புதிய ஆண்டை, இச்சனிக்கிழமையன்று, தொடங்கி வைத்து அதன் பணியாளர்களுக்கு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளம் தம்பதியரின், ஆன்மீக மற்றும் குடும்ப வாழ்வில், கிறிஸ்தவ சமூகம், உறுதுணையாக இருக்குமாறு வலியுறுத்தினார்.


விசுவாசத்திற்கும், திருமணத்திற்கும் இடையேயுள்ள உறவையும், திருமணம் பற்றி, திருத்தந்தையர் புனித 2ம் ஜோன் போல், 16ம் பெனடிக்ட் ஆகிய இருவரும் கூறியுள்ள ஆழமான கருத்துக்களையும் குறிப்பிட்டு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இக்காலத்தில் கிறிஸ்தவத் திருமணங்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திப்பதற்கு, இரு தீர்வுகளை வழங்கினார்.

திருமணம் மற்றும் குடும்ப வாழ்வை, இறைவனின் திட்டத்திற்கு ஒத்திணங்கும் வகையில் கண்டுணரும் நோக்கத்தில், தகுந்த திருமணத் தயாரிப்புகள் இடம்பெறுவது முதல் தீர்வு என விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோர், திருமணத்தின் உண்மைத் தன்மையை அறிந்து, வாழ்வதற்கு உதவுவதாகவும், இத்தயாரிப்புகள் இருக்க வேண்டுமெனக் கூறினார்.

இளம் தம்பதியர், திருமணத்திற்குப் பின்னர், திருஅவையிலும், விசுவாசத்திலும் தொடர்ந்து பயணம் செய்வதற்கு உதவுவது, இரண்டாவது தீர்வு எனத் தெரிவித்த திருத்தந்தை, இறைமக்களுக்கு ஆற்றும் இப்பணியைச் செய்வோரை, தூய ஆவியார் வழிநடத்துகிறார், எனவே துணிச்சலை இழக்க வேண்டாமென, அவர்களை ஊக்கப்படுத்தினார்.

இறைவனின் உண்மைக்குத் திறந்த உள்ளம் கொண்டவர்களாய் வாழும்போது, உண்மையான திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு பற்றிப் புரிந்துகொள்ள இயலும் என்றும், அன்புக்கும், உண்மைக்கும் இடையேயுள்ள உறவு ஆழப்படுத்தப்பட வேண்டும் என்றும் உரைத்த திருத்தந்தை, சமய விழுமியங்களும், விசுவாசமும் இல்லாத திருமணங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும், எடுத்துச் சொன்னார்.

# ஒடிசா மறைசாட்சிகள் விரைவில் புனிதர்கள்




ஒடிசா மாநிலத்தின் கந்தமால் மாவட்டத்தில் 2008ம் ஆண்டில், கிறிஸ்தவர்க்கெதிராய் நடந்த வன்முறையில் கொல்லப்பட்ட நூறு கிறிஸ்தவ மறைசாட்சிகளை புனிதர்களாக அறிவிப்பதற்குரிய நடைமுறைகளைத் தொடங்குவதற்கு, திருப்பீடம் இசைவு தெரிவித்திருப்பதாக, கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அவர்கள் அறிவித்தார்.

இது குறித்து, நற்செய்தி அறிவிப்புப் பேராயத் தலைவர் கர்தினால் Fernando Filoni அவர்களிடம், தான் பேசியது பற்றி ஆசியச் செய்தி நிறுவனத்திடம் பகிர்ந்துகொண்ட கர்தினால் கிரேசியஸ் அவர்கள், கிறிஸ்துவை மறுதலிப்பதற்குப் பதிலாக, இத்தனை பேர் தங்களின் உயிரைத் தியாகம் செய்திருப்பது, பெரும் மகிழ்வைத் தருகின்றது என்று கூறினார்.

மேலும், ஒடிசாவில் சிந்தப்பட்ட இரத்தம், எல்லாக் கிறிஸ்தவ சபையினரது இரத்தம் என்பதால், அம்மாநிலத்தில், கிறிஸ்தவ ஒன்றிப்பு, கிறிஸ்தவர்கள் மத்தியில், எதார்த்தமான வாழ்வாக உள்ளது என்று, கட்டக் புவனேஷ்வர் பேராயர் ஜான் பார்வா அவர்கள் தெரிவித்தார்.

உலகக் கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்துவரும் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் பற்றிப் பேசிய பேராயர் பார்வா அவர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிராக இடம்பெற்ற கொடுமையான வன்முறை, கிறிஸ்தவர்களை ஒன்றிணைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

# இக்கால இளையோர் போலியில்லாத ஆன்மீக வாழ்வைத் தேடுகின்றனர்



துறவு சபைகளின் உறுப்பினர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் வெளியேறும் ஒரு நிலையை திருஅவை எதிர்கொள்கின்றது, இது, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வையும், திருஅவையையும் பலவீனப்படுத்துகின்றது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறினார்.

துறவு சபைகள் பேராயம் நடத்திய, நிறையமர்வு ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஏறக்குறைய நூறு பிரதிநிதிகளை, இச்சனிக்கிழமை நண்பகலில், திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாறு கூறினார்.

துறவு வாழ்வுக்கு பிரமாணிக்கம் மற்றும், அவ்வாழ்வை விட்டு விலகுதல் என்ற தலைப்பில், இக்கூட்டம் நடந்தது பற்றிப் பேசிய திருத்தந்தை, இக்காலத்தில், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வுக்குப் பிரமாணிக்கமாக இருப்பது குறைந்து வருவதை, புள்ளி விபரங்கள் காட்டுகின்றன என்றும் கூறினார்.

தங்களின் இறையழைப்பு பற்றித் தேர்ந்து தெளிந்த பின்னர், தங்களுக்கு அழைத்தல் இல்லையெனச் சொல்லி, சிலர், துறவு வாழ்வைத் துறக்கின்றனர், ஆயினும், சிலர், துறவு வாழ்வில், நிரந்தர அர்ப்பணம் கொடுத்து, பல ஆண்டுகளுக்குப் பின் விலகுகின்றனர், இது ஏன் என்ற கேள்வியை முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இக்காலத்திய கலாச்சாரம் இதற்கு முதல் காரணம் என்றும், பொருளாதார விதிமுறைகள், நன்னெறி வாழ்வை ஆட்சிசெய்யும் ஒரு சமுதாயத்தில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம், இது, நுகர்வுத்தன்மையைப் புகுத்தி, எளிமையான வாழ்வின் அழகை மறக்கச் செய்கின்றது என்றும் கூறினோர், திருத்தந்தை பிரான்சிஸ். இக்கால இளையோர், குழப்பம் நிறைந்தவர்களாக, அதேநேரம், சவால்களை முன்வைப்பவர்களாக உள்ளனர் என்றும், இவர்கள், போலியில்லாத, ஓர் உண்மையான ஆன்மீக வாழ்வைத் தேடுகின்றனர் என்றும், தெரிவித்தார், திருத்தந்தை.

துறவு சபைகள், தங்களின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வுக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்கு முரணாக வாழ்வதை எச்சரித்த திருத்தந்தை, இத்தகைய சூழல்களில், வாடிக்கையான செயல்கள், சோர்வு, நிர்வாகச் சுமை, உள் பிரிவினைகள், அதிகாரத் தேடல், சபைகளை நிர்வகிப்பதில் உலகப்போக்கு, சில சமயங்களில் சர்வதிகாரங்களாக மாறும் அதிகாரம் போன்றவை ஏற்படுகின்றன என்றும் கூறினார், திருத்தந்தை.

குழுக்களில்,உடன்பிறப்பு உணர்வுடன் வாழ்வதற்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் வலியுறுத்திய திருத்தந்தை, குழு செபம், இறைவார்த்தையை செபச்சூழலில் வாசிப்பது, திருப்பலி மற்றும் ஒப்புரவு அருளடையாளத்தில் ஆர்வமுடன் பங்கெடுப்பது, சகோதரத்துவ உரையாடல், உறுப்பினர்களுக்குள் உண்மையான தொடர்பு, சகோதரத்துவ திருத்தம், பாவம் செய்த உறுப்பினர்கள்மீது இரக்கம், பொறுப்புக்களைப் பகிர்தல் போன்றவைகளால், துறவற குழுவாழ்வு அமைய வேண்டுமெனவும் கூறினார். தரமான ஆன்மீக வழிகாட்டிகளைத் தயார் செய்வது அவசியம் எனவும் கூறியத் திருத்தந்தை, குழு உறுப்பினர்களோடு எப்போதும் உடன் இருந்து வழிகாட்டுவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொன்னார். பிரமாணிக்கத்துடன் தனிமையாக வாழ்வது அல்லது, கவனம் மற்றும், பொறுமையுடன் செவிசாய்க்க இயலாமல் இருக்கும் அருள்சகோதர, அருள்சகோதரிகளின் வழிகாட்டுதலுடன் வாழ்வது கடினம் எனவும், கூறினார், திருத்தந்தை. இறைவனின் வழியில் அனுபவமிக்க அருள்சகோதர, அருள்சகோதரிகள் தேவை என்றும், நல்ல தலைவர்கள் இல்லாமையினாலே, பல இறையழைத்தல்கள் இழக்கப்படுகின்றன என்றும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

## உள்ளத்தை தொடும் போதனைகள்

அதிகாரம் 02

## 02. பணத்தைப் பயன்படுத்தல்



16:19 செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்.

16:20 இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார்.

16:21 அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும்.

16:22 அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

16:23 அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார்.

16:24 அவர், "தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும் இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச்செய்ய அவரை அனுப்பும். ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்" என்று உரக்கக் கூறினார்.

16:25 அதற்கு ஆபிரகாம், "மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய் அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார் நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்.

16:26 அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது" என்றார்.

16:27 "அவர், "அப்படியானால் தந்தையே, அவரை என் தந்தை வீட்டுக்கு அனுப்புமாறு உம்மிடம் வேண்டுகின்றேன்.

16:28 எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே" என்றார்.

16:29 அதற்கு ஆபிரகாம், "மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்" என்றார்.

16:30 அவர், "அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே, இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள்" என்றார்.

16:31 ஆபிரகாம், "அவர்கள் மோசேக்கும் இறைவா-க்கினருக்கும் செவிசாய்க்காவிட்டால், இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள்" என்றார்.

12:13 கூட்டத்திலிருந்து ஒருவர் இயேசுவிடம், "போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக்கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்" என்றார்.

12:14 அவர் அந்த ஆளை நோக்கி, "என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?" என்று கேட்டார்.

12:15 பின்பு அவர் அவர்களை நோக்கி, "எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கை-யாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது" என்றார்.

12:16 அவர்களுக்கு அவர் ஓர் உவமையைச் சொன்னார் "செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.

12:17 அவன், "நான் என்ன செய்வேன்? என் விளை பொருள்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே!" என்று எண்ணினான்.

12:18 "ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன் ".

12:19 பின்பு, "என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பல வகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன நீ ஓய்வெடு உண்டு குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு" எனச் சொல்வேன்" என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

12:20 ஆனால் கடவுள் அவனிடம், "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" என்று கேட்டார்.

12:21 கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய்த் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்த-கையோரே.

12:22 இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது "ஆகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், உயிர்வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ கவலை கொள்ளாதீர்.

12:23 உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா?

12:24 காகங்களைக் கவனியுங்கள் அவை விதைப்ப-துமில்லை, அறுப்பதுமில்லை அவற்றுக்குச் சேமிப்பறையுமில்லை, களஞ்சியமுமில்லை. கடவுள் அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். நீங்கள் பறவைகளைவிட மேலானவர்கள் அல்லவா?

12:25 கவலைப்படுவதால் உங்களுள் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்?

12:26 ஆதலால் மிகச் சிறிய ஒரு செயலைக் கூடச் செய்யமுடியாத நீங்கள் மற்றவை பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்?

12:27 காட்டுச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கூர்ந்து கவனியுங்கள் அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை ஆனால் சாலமோன்கூடத் தம் மேன்மையிலெல்லாம் அவற்றில் ஒன்றைப்போல் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

12:28 "நம்பிக்கை குன்றியவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணிசெய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் மிகுதியாகச் செய்வார் அல்லவா!

12:29 ஆதலால் எதை உண்பது, எதைக் குடிப்பது என நீங்கள் தேடிக்கொண்டிருக்க வேண்டாம் கவலை கொண்டிருக்கவும் வேண்டாம்.

12:30 ஏனெனில் உலகு சார்ந்த பிற இனத்தவரே இவற்றையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவை தேவையென உங்கள் தந்தைக்குத் தெரியும்.

12:31 நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள் அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

12:32 "சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம் உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தத் திருவுளம் கொண்டுள்ளார்.

12:33 உங்கள் உடைமைகளை விற்றுத் தர்மம் செய்யுங்கள் இற்றுப்போகாத பணப்பைகளையும் விண்ணுலகில் குறையாத செல்வத்தையும் தேடிக் கொள்ளுங்கள் அங்கே திருடன் நெருங்குவதில்லை பூச்சியும் அரிப்பது இல்லை.

12:34 உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.

19:1 இயேசு எரிகோவுக்குச் சென்று அந்நகர் வழியே போய்க் கொண்டிருந்தார்.

19:2 அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்குத் தலைவர்.

19:3 இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார் மக்கள் திரளாய்க் கூடியிருந்ததால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், சக்கேயு குட்டையாய் இருந்தான்.

19:4 அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார்.

19:5 இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம், "சக்கேயு, விரைவாய் இறங்கிவாரும் இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்றார்.

19:6 அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார்.

19:7 இதைக் கண்ட யாவரும், "பாவியிடம் தங்கப்போயிருக்கிறாரே இவர்" என்று முணுமுணுத்தனர்.

19:8 சக்கேயு எழுந்து நின்று, "ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன் எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று அவரிடம் கூறினார்.

19:9 இயேசு அவரை நோக்கி, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே!

19:10 இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" என்று சொன்னார்.

18:18 அப்பொழுது தலைவர் ஒருவர் அவரிடம், "நல்ல போதகரே, நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

18:19 அதற்கு இயேசு அவரிடம், "நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் எவருமில்லையே!

18:20 உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? விபசாரம் செய்யாதே. கொலை செய்யாதே. களவு செய்யாதே. பொய்ச் சான்று சொல்லாதே. உன் தாய் தந்தையை மதித்து நட" என்றார்.

18:21 அவர், "இவை அனைத்தையும் நான் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வருகிறேன்" என்றார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



# திருகோணமலை உவர்மலை குழந்தை இயேசு ஆலய 31வது வருடாந்த திருவிழா

திருகோணமலை உவர்மலை குழந்தை இயேசு ஆலய 31வது வருடாந்த திருவிழா கடந்த 27-01-2017 (வெள்ளிக்கிழமை ) மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகிறது. 10 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வுகள் தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள், திருப்பலி ஆராதனை இடம்பெறும். இந் நவநாள் நிகழ்வுகளில் அருட்பணி S.மதுராங்கன் குரூஸ், B.றொபின்சன் போல், H.ஜூட் ஜோன்சன், G.சுலக்ஷன், A.J.யோகராஜா OMI, T.கிங்ஸ்லி றொபட் ( குரு முதல்வர்) அடிகளார்களினால் தினமும் பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகள் நிகழ்த்தப்படுகிறது. 04-02-2017 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருனை எழுந்தேற்றமும் நவநாள் ஆராதனையையும் தொடர்ந்து அற்புத குழந்தை இயேசுவின் திருச்சுரூபப் பவனி வழமையான வீதிகளினூடாக இடம்பெறும. இறுதி நாள் நிகழ்வான கூட்டுத் திருப்பலி 05-02-2017. ஞாயிறு காலை 7.00மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர், மேதகு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து கொடி இறக்க நிகழ்வுகளுடன் திருவிழா நிறைவு பெறும். இவ்விழா ஏற்பாடுகளை பங்கு தந்தையும் பங்கு மக்களும் இணைந்து மேற்கொள்கின்றனர்.

**நன்றி: யேர்மன் ஆன்மீகப் பணியக இணைத்துயத்தளம்**

# சில்லாலையில் துய யோசவ்வாஸ் யாத்திரைத்தலத்திற்கான அடிக்கல் நாட்டிவைப்பு



சில்லாலையில் துய யோசவ்வாஸ் யாத்திரைத்த -லத்திற்கான அடிக்கலினை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நாட்டிவைத்தார். தூய யோசவ்வாஸ் யாத்திரைத்தலம் அமைப்பது தொடர்பில் யாழ் மறைமாவட்டம் குழு அமைத்து ஆலோசனை மேற்கொண்டதற்கு அமைவாக துய யோசவ்வாஸ் யாத்திரைத்தலம் சில்லாலையில் அமைப்பது என்ற தீர்மானத்தை எடுத்தது இதற்கமைவாக சில்லாலை பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி எமில் போல் அடிகளாரிடம் இதற்கான முடிவு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அருட்பணி எமில் போல் அடிகளார் சில்லாலை பங்குமக்களுடன் கலந்துரையாடி அதற்கான பணியில் முழுமுச்சுடன் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து புதிய பங்குத்தந்தையாக பொறுப்பேடுத்த அருட்பணி அகஸ்ரின் அடிகளார் யாத்திரைத்தலத்திற்கான பணியினை வேகப்படுத்தியதன் காரணமாக நேற்று திங்கட்கிழமை 16.01.2017 மாலை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாத்திரைத்தலத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். இதற்கு முன்னதாக 15.01.2017 யாத்திரைத்தலத்திற்கான தூய யோசவ்வாஸ் திருச்சொருபத்தை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இருந்து ஆலய பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின்அடிகளார் தலைமையில் பவனியாக புதிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளாரால் நற்கருணை வழிபாட்டும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொருபம் ஸ்தாபிக்கப்பட்டது. தூய யோசவ்வாஸ் சில்லாலையில் 06.06.1687 முதல் 25.12.1689 வரை இருந்து தன்னலமற்ற சேவைசெய்துள்ளார் இதற்கு அமைவாகவே இங்கு யாத்திரைத்தலம் அமைவது பொருத்தம் என்பதால் ஆலயம் அமைக்கப்படவுள்ளது. 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் துய யோசவ்வாஸ் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டு 2015ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். சில்லாலை துய கதிரை அன்னை ஆலயத்தில் தூய யோசவ்வாஸ் அடிகளார் காலத்தில் இருந்து பணிபுரிந்த இடத்தில் தூய யோசவ் வாஸ் சிற்றாலயம் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி நேசன் அடிகளாரால் அடிக்கல் நாட்டப்பட்டு 2013ஆம் ஆண்டு ஜனவரி13ஆம் திகதி முன்னாள் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது இதேவேளை தூய யோசவ்வாசின் வாழ்க்கை வரலாறு அடங்கிய அருங்காட்சியகம் தூய கதிரை ஆலயத்தில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுரட்ணம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் துய யோசவ்வாசின் வாழ்கை வரலாறு தொடர்பான அருங்காட்சியகம் சில்லாலையிலேதான் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நன்றி: யேர்மன் ஆன்மீகப் பணியக இணைத்துயத்தளம்**

# மன்னார் வேதசாட்சிகள் அன்னை ஆலயத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவு விழா



மன்னார் - தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலயத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணியளவில், மன்னார் மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

**நன்றி: யேர்மன் ஆன்மீகப் பணியக இணைத்துயத்தளம்**

## 01 குறுங்கால கற்கை...

கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் இறையில் கல்வியகம் "திருச்சபையும் திருமணமும்" என்ற தலைப்பில் இன்னுமோர் குறுங்கால கற்கை நெறியை எதிர்வரும் மாசி மாதம் 11ஆம் திகதி 2017சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது. இந்த கற்றை நெறியை அருட்தந்தை ஆஸ்லி அடிகளார் நடாத்த உள்ளார். இக்கற்கை நெறியானது எதிர்வரும் 11.02.2017 சனிக்கிழமை தொடங்கப்பட்டு தொடர்ந்து வரும் 10 சனிக்கிழமைகள் மாலை 4.00 மணி முதல் 6.00 மணிவரை பொரளை அக்குவைனாஸ் பல்கலைக்கழக தமிழ் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்பு பேராயர் மறைமாவட்ட வாழ் தமிழ் கத்தோலிக்கர் அனைவரும் கலந்து கொண்டு பயனடைய அன்புடன் அழைக்கின்றோம். கலந்துகொள்ள விரும்புவோர், கற்கை நெறியின் தொடக்க நாளிலே பெயர்களை பதிவுசெய்து கொள்ளலாம். முழுக்கற்கை நெறிக்குமான பணத்தொகை ரூபா 500 மட்டுமே. கலந்து கொண்டோர் 80% விரிவுரைகட்கு சமூகமளித்திருந்தால் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு பின்வருவோரைத் தொடர்பு கொள்ளவும்.

**அருட்தந்தை றெஜினோல்ட் லூசியன் அ.ம.தி**
**இயக்குனர், தொ.பே 071 8299151**

**திருவாளர் சகாயராஜ்**
**ஒழுங்கமைப்பாளர், தொ.பே 077 7134775**

# புனித செபஸ்தியார் திருவிழா

மத்துகம பங்கைச் சேர்ந்த அருப்பலகந்தை தோட்டத்தில் தற்போது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் புனித செபஸ்தியார் சிற்றாலயத்தில் திருவிழா தை மாதம் 19ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ம் திகதி சனிக்கிழமை திருவிழாவானது வெகு விமரிசையாக பங்குத் தந்தை கலன பீரிஸ் அடிகளாரின் தலைமையில் அருட்தந்தை மில்பர், அருட்தந்தை வேதசீலன் (கிளரீசியன்) ஆகியோருடன் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அப்பகுதி வாழ் இந்து, சமய மக்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு புனிதரில் தமக்குள்ள தனித்துவமான பக்தியை வெளிப்படுத்தினார்கள். அத்தோடு 25 கத்தோலிக்க குடும்பங்கள் மட்டுமே வாழும் இப்பிரதேசத்தில் உள்ள அனைவரின் ஒத்துழைப்போடு மிகவும் சிறப்பாக இவ்விழாவை கொண்டாடினார்கள். இவர்களது விசுவாச வாழ்வும் கிறிஸ்துவுக்காக சான்று பகரும் உன்னதமான பணியும் இத்திருவிழாவின் வெளிப்படையாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

**தகவல். அருட்சகோதரி மேரி**



# ஹொரனைபங்கைச் சார்ந்த அல்வகந்த தோட்டத்தில் தைப்பொங்கல் திருப்பலி





கடந்த 14ம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று ஹொரனை பங்கைச் சார்ந்த அல்வகந்த தோட்டத்தில் புனித மரியாள் சிற்றாலயத்தில் தைப்பொங்கல் திருப்பலியானது வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்துக்கள் செறிந்து வாழும் இப்பிரதேசத்தில் இவ்விழா கொண்டாட்டம் பெறும் வரவேற்பைக் கொடுத்தது.

**தகவல். அருட்சகோதரி ஜெசிந்தா**

## வரலாற்று சிறப்புமிக்க மாந்தை (மன்னார்)

# லூர்து அன்னையின் ஆலயத் திறப்பு விழா



☆ ஒல்லாந்தர் ஆட்சியின்போது மாந்தையில் இருந்த இவ்வாலயம் 1670ஆம் ஆண்டு தகர்க்கப்பட்டு, கத்தோலிக்க மக்கள் மாதாவின் சுருபத்தை எடுத்துச் சென்று மரப்பொந்தொன்றினுள் மறைத்து வைத்தார்கள்.

☆ மாந்தையில் கட்டப்பட்ட முதல் ஆலயம் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்டபோதும் அதன் சில பகுதிகள் இன்றும் காணப்படுகின்றது

☆ கத்தோலிக்க மக்களின் முயற்சியினால் அழகுற அமையப்பெற்ற புதிய ஆலயம் 2017ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரால் ஆசீர்வதி-க்கப்பட்டு திறந்து வைக்கப்படும்.

✝ நவநாள் : மாசி மாதம் 15 – 16 , மாலை 5.30 மணிக்கு

✝ **மாலை ஆராதனை**
மாசி மாதம் 17ஆம் திகதி, மாலை 5.30 மணிக்கு

✝ **திருவிழா திருப்பலி மற்றும் ஆலயத் திறப்பு விழா**
மாசி மாதம் 18ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு
மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில்



தொடர்புகளுக்கு
071-2842493
(அருட்தந்தை)



# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

CCP
COLOMBO CATHOLIC PRESS

உங்களது அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்), நவீன பிரதியாக்கம் (டுப்ளோ), வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும், பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல், அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்





<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்